TAMIL SPEAKING LAWYER
Personal Injury Lawyer
INJURED IN A **ROAD ACCIDENT** ?
ACCIDENT AT WORK OR **PUBLIC PLACE**
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
www.nmflawyers.co.uk
NM NOT MY FAULT
F Accident & Injury Claims
Ask for RAJ
Raj Rajamohan - 078 1089 7754

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 11 ♦ ISSUE - 234 ♦ FRIDAY 23 JANUARY 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
*Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

Shop for SALE
Croydon பகுதியில் விற்பனைக்கு உண்டு
- Computer retail store with internet café and mobile phone service
- Business in 8 years, High street shop with basement for training or teaching.
- Ecommerce website. Computers & mobile phones repairs sales & accessories.
- Western union and Ria money transfer , Postal service (DHL,UPS,TNT and etc)
Contact : 07988734211

HYGIENE RESOURCES
Consultants
Are you a food handler?
- Fast food Handler
- Take away food handler
- Restaurant worker
- Manufacturing staff
- Packaging staff
So if you are ready to gain knowledge and build career in catering industry then call Hygiene Resource or email or visit website above.
Call Syed anytime on: 0795 8942 988
75 Springbank Road, Lewisham, London SE13 6SS
E Mail : syed@uabdl.com

Nandika's Sarees
மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக பட்டுப் புடவைகள், சுடிதார், பிளவுஸ், மற்றும் காஞ்சி பட்டுகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Free UK Delivery
www.nandikasarees.co.uk

R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
CONVEYANCING SERVICES:
- Residential and Commercial Conveyancing
- Last will
NOTARIAL SERVICES:
- Power of Attorneys, Notarisation of documents
- Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations
Contact: SEN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor
Telephone: 020 8772 4920
10a Upper Tooting Road , London SW17 7PG

COMFORT TOURS AND TRAVELS
T.NAGAR, CHENNAI, TAMILNADU, INDIA.
Our services:
- Domestic Flight Ticket Booking in India
- Booking Hotel & Guest House Accommodation in India
- Tour Package in India
- Vehicle Transportation in India
- Medical Tourism in India
- Foreign Exchange Services
Contact : 9940588865, 9442111380, 044-42178628
Mail : info@coforttoursandtravels.com
Web : www.comforttoursandtravels.com

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள நிகரமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா பெற்றுத் தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
- இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
- எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# AIKON ACCOUNTANTS LTD

## Our Services

- *Preparation of accounts for companies and individuals/ for companies house*
- *Preparation of annual accounts and working with auditors*
- *Reporting to lenders and other external parties*
- *Preparation of management accounts*
- *VAT Computation and filing*
- *Self-assessment returns*
- *Corporation Tax computation and filing*
- *HMRC correspondence and representation*
- *Company Formation and VAT registration*
- *PAYE – Preparation of Payroll and filing returns*
- *Scenario Testing & feeding through to forecasts*
- *Budgeting & Variance Analysis*
- *Financial Planning and Analysis*
- *Evaluation of the internal controls and propose suitable solutions in order to eliminate weaknesses.*
- *Cash flow forecasts & Projected Accounts*
- *Restructuring*
- *Mergers and Acquisitions*
- *Due diligence*
- *Investment and Project Appraisal*
- *Assisting Foreign companies establishing in the UK*
- *Assisting UK companies expanding and establishing overseas*
- *Assisting with securing finance for business growth*

**FAST GROWING ACCOUNTANTS IN LONDON FOR ALL YOUR NEEDS!**

For a no obligation, FREE consultation Call us on 02031891884

accounts@a-accountants.com - www.a-accountants.com

வாழ்க வளமுடன்

# சிறந்த முறையில் ஜாதகம் பார்க்கப்படும்.

அனைத்து சுபகாரியங்களுக்கும் மற்றும் சிலருக்கு அல்லது சில குடும்பத்திற்கு நவக்கிரகங்களாலும் பில்லி சூனியத்தாலும் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

இவ்வகையான பாதிப்பு பற்றி அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். தொழில் நஷ்டம், வீண் மனக்கவலை, குடும்பத்தில் அமைதியில்லாத நிலை, கணவன்–மனைவிக்கு இடையே தகறாறு, பொருள் நஷ்டம் என்று பாதிப்புக்களின் வடிவம் வேறு வேறு வகைகளில் இருக்கலாம்.

இத்தகைய பிரச்சினைகள் தொடர்கதையாக இல்லாமல் முடிவு கட்ட வேண்டாமா ?

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்

**07508657674 - K.நாதன் G**

newlife

Home of Fertility, Immunology & Women's Health

# Newlife Fertility Clinic

We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)

www.newlifeclinic.org.uk

T : **01372 738 932**

The Pines, 2 The Parade, Epsom KT18 5DH

# www.poojasweets.com

## Best Quality Vegetarian Food for Any Occasions!

5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!

## ...tempting?

discover a new heaven on earth:

**ORDER ON LINE**

**FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!***

We also do International deliveries*
*Terms apply. See online for details

# POOJA

SWEETS & SAVOURIES

*The Taste That You Will Love, The Quality That You Can Trust*

**TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229**
**168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER**
info@poojasweets.com

**KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748**
**487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED**
kingsbury@poojasweets.com

# புலம்

## தெளிவான முடிவு.....

அன்புள்ள ஆசிரியருக்கு,

மக்களை வழிநடத்தும் தலைவர்களின் காலம் போய், மக்களின் பின்னால் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தலைவர்களுக்கு வந்துவிட்டதை இலங்கையில் நடந்தேறிய ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தின. எவருடைய பசப்பு வார்த்தைகளுக்கோ, பணச் சலுகைகளுக்கோ, பயமுறுத் தல்களுக்கோ மக்கள் அடி பணியவில்லை என்பதை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளனர்.

*- உமா மகாலிங்கம்*

## எதை எதனுடன் கோர்த்து விடுவது

பயங்கரவாதி என்று விழிக்காது MR என்று எம் தேசியத் தலைவரை இனவாத அரசியல் நடத்திய அம்மையார் விழித்தது ஒரு முன் னேற்றம். அவர் மேதகு என்று அழைக்க வில்லை என்பது எந்த வகையிலும் முறையான கோத்தலாக வராது.

*- ராம ராஜன்*

## இளநிலவும் இளங்கதிரும்..

இளநிலவு பற்றி ஒரு இளங்கதிர் சென்ற முறை கவிதை வடிவில் போற்றியிருந்தார். உண்மையில் அழகாகச் சொற்கள் கையாளப்பட்டன. ஆனால் யாரைப் புகழ்வது என்ற அறியாமல் பாடிய புகழ் அது. எங்கள் போராட்டத்தை இழிவுபடுத்திய ஒருவனைப் புகழ்வதா? இளம்கதிர் தானே. அனுபலம் அவரை எதிர்காலத்தில் உணர வைக்கும்.

*- இராஜசூரியன்*

## லண்டனில் மைத்திரி கட்சி

கூட்டமைப்பின் லண்டன் ஆதர வாளர்களும், பாதர் இமானுவலின் ஜீரிஎப் ம் விழுந்தடித்துக் கொண்டு 'மைத்திரிபாலனய'விற்கு ஜயவேவா சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களை மிஞ்சும் வகையில் சில தமிழர்கள் மைத்திரியின் கட்சிக்கே லண்டனில் ஒரு கிளையை உருவாக்கியிருக்கிறார்களாம். முன்னர் அம்சா மூலமாக கோத்தபாய வைவை சந்தித்து அவரது காலில் விழுந்த ஐந்தாம்படையினர் தான் இவர்கள். இக்கிளையின் முக்கியஸ் தராக விமலதாஸ என்பவர் இருக்கிறார். புவி, குகன், அந்தோனிதாஸ் என போரும் இந்த குழுவில் அடங்குகின் றனர்.

*சிவநேசன்*

## கழிவு எண்ணையினால் நீர்ப்பிரச்சனை

2005ஆம் ஆண்டுமுதல் செயற் பட்டு வந்த சுண்ணாகம் Northern Power Company Ltd. ஆனது அதன் கழிவு எண்ணெய்களை நில அடியில் விட்டுவந்த நிலையில், யாழ்குடாவின் பெரும்பாலான வலிகாமம் விவசாய நிலப்பகுதியின் கிணறுகளில் கழிவு எண்ணெய்கள், பாரமான உலோகங்கள், கிறீஸ் என்பவை கலந்து அக்கிணறுகள் மனித, மிருக. தாவர பயன் பாட்டிற்கு உதவாததாக மாறி யுள்ளது.

மற்றையபுறத்தில் இந்தக் கம்பெனியிடம் இருந்துவிசேட கூடியவிலைக்கு மின்சக்தியை இலங்கை மின்சார சபை கொள்வனவு செய்து, மக்களின் பணம் பில்லியன் கணக்கில் கொள்ளையடிக்கவும் பட்டுள்ளது.

*சித்தாவத்தை உதயகுமார்*

## இப்பவே இப்படியென்றால் ...

தெல்லிப்பழைப் பகுதியில் தண்ணீர் மாசடவைவது தொடர்பாக யூனியன் கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டத்தை முடக்க கூட்டமைப்பு முற்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் வந்திருக்குது. பாடசாலை முடிவடைந்த பின்னர் கவனயீர்ப்பு ஆர்ப் பாட்டம் ஒன்றில் ஈடுபட்ட இந்த மாணவர்கள் மிரட்டப்பட்டுள்ளனர். ஆர்ப் பாட்டத்தை நிறுத்துமாறு உடடியாகவேவடக்குமாகாணக்கல்வி அமைச்சு உத்தரவிட்டதாகவும் அந்த உத் தரவை மீறியும் மாணவர்கள் தமது நியாயமான கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும் தெரியவருகின்றது. கூட்டமைப்புக் காரருக்கு அரசாங்கத்தை ஆதரிக்க தொடங்கின உடனேயே அதிகார ருசி வந்துவிட்டது.

*- நிரஞ்சன்*

## நல்லாயிருக்கு இவங்களின்ரை ஒற்றுமை

மைத்திரிக்கு ஆதரவளிக்கிறதுஎன்ற ஒற்றை விசயத்திலை கூட்டமைப்பும், முஸ்லீம் கட்சிகளும் ஒன்றாயிருந்தை பார்த்துவிட்டு எரிக் சூல்ஹெய்ம் கூட சிறுபான்மையினங்கள் ஒன்றாக இருக்கின்றன என விசிலடிக்காத குறையாக ஹ்ந்து பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். ஆனால் முஸ்லீம் கொங்கிரசோ மைத்திரி வென்றது தங்களுடைய அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டு கூட்டமைப்புக்கு பெப்பே காட்டியிருக்கிறார்கள். அதனால் கிழக்கு மாகாண சபையில் யார் ஆட்சி அமைப்பது என்ற விடயம் இழுபறியாகவே இருக்கிறது. கடைசியாய் கிடைச்ச செய்தியின்படி பிள்ளையான் கட்சியுடன் சேர்நது ஆட்சி அமைப்பதற்கு முஸ்லீம் கொங்கிரஸ் முயற்சிக்கிறதாம்.

*- கயல்விழி*

## டக்கியும் மைத்திரிக்கு ஆதரவாம்

மைத்திரிபால சிறிசேனவிற்கு தனது கட்சி ஆதரவளிக்கும் என டக்ளஸ் தெரிவித்திருக்கிறார். இப் படிப்பார்த்தால் ஏப்பிரல்மாதம் நடக்க இருக்கிற தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடப்போகிற கட்சிகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் மைத்திரியை ஆதரிக்கின்றன. இவர்கள் தங்களுக்குள் ஒரு பெரிய கூட்டமைப்பை உருவாக்கலாம். தமிழரசுக் கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட அனந்தியின் இடத்தை விஜயகலா மகேஸ்வரனைக் கொண்டு நிரப்பலாம்.

*- தவராணி*

## முத்தமிழ் விழாவாகிப் போன சிறுகதைப்போட்டி...

சிறுகதைப் போட்டியொன்று வைக்கிறதாகவும் அதில சிறந்த கதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிடுவதாகவும் கொஞ்சக்காலமாகச் சொல்லிக்கொண்டு வந்திட்டு இப்ப திடீரெண்டு முத்தமிழ் விழா எண்டு சொல்லுறியள். இதுகும் நடக்குமா?

*- ஜேக்கப்*

## அஞ்சலி !

மறைந்த இயக்குனர் கே.பாலச்சந் தருக்கு ***ஒரு பேப்பர்*** கணிசமான இடம் ஒதுக்கி கவிதை பிரசுரித்தமையைக் கண்டு ***ஒரு பேப்பர்*** ரின் பழைய காலங்கள் நினைவில் வந்தன... தாயகம் தொடர்பான செய்திகளையும் போராட்டம், போராளிகள் பற்றிய கட்டுரைகளையும் இந்திய சினிமா எதிர்ப்பையும் மட்டுமே பிரசுரித்து வந்த பேப்பரில் இப்போ போராளிகளக் கொச்சைப்படுத்தி இயக்கிய ஒரு இயக்குனருக்கு அஞ்சலி ! அதுவும் உலகத் தமிழர் சார்பாக அஞ்சலி... அவர் சிறந்த இயக்குனர் தான் அதற்காக அவர் பிழையாகக் காட்சிப்படுத்தியவற்றை இலகுவில் மறந்துவிட நாங்கள் பெரிய ஞானிகளில்லை...

*- வாகீசன்*

*உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**

# இது சந்திரனைப் பார்த்து சம்பந்தன் குலைத்த கதைதான்

கடந்த ***ஒரு பேப்பர்*** ல் (இதழ் 233) 'தேசியத்தலைவர் மீது அவதூறு பரப்பும் சம்பந்தனுக்கு கண்டனம்' என்ற தலைப்பில் உலகெங்கும் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக்கள் இணைந்து வெளியிட்ட கண்டன அறிக்கையை வெளியிட்டிருந்தீர்கள். இவ்விடயம் தொடர்பாக எனது கருத்துகளை தெரிவிப்பதற்கு முன்னர், யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பப்படும் ஈபிடிபியின் ஆதரவுதொலைக்காட்சியான 'டாண்' தொலைக்காட்சியில் கேசவராஜா என்ற ஒரு ஊடகவியலாளர் என்ன சொன்னார் என்பதனைப் பார்ப்போம். "சம்பந்தன் பிரபாகரன் அவர்களை சர்வாதிகாரி என தெரிவித்துள்ளார். ஆனால் மக்கள் அவ்வாறு பார்ப்பதாகத் தெரியவில்லை. யாழ் முத்திரைச் சந்தியில் நடைபெற்ற மைத்திரியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய சந்திரிகா தனது பேச்சில் இரண்டு தடவை திரு. பிரபாகரனின் பெயரை குறிப்பிட்டார் இரண்டு தடவையும் மக்களின் கரகோசம் செய்து தமது ஆரவாரத்தை வெளிப்படுத்தினர். ஆனால் அவரது பேச்சில் பலதடவைகள் சம்பந்தனின் பெயரைக் குறிப்பிட்டிருந்தபோதும் அதையிட்டு மக்கள் கண்டு கொள்ளவில்லை" என்றார். யார் மக்களின் அபிமானம் பெற்ற தலைவர் என்பதனை மேற்படி சம்பவம் நிருபிக்கிறது. ஒரு சர்வாதிகாரியை அவரது பிரசன்னம் இல்லாத நிலையில் மக்கள் ஆதரிப்பார்களா? அறளை பெயர்ந்த எண்பத்தியிரண்டு வயதிலும் பதவியைவிட மனமில்லாது இருப்பவர்கள்தான் ஜனநாயகவாதிகளா? சொல்லுங்கள் மக்களே!

தொடர்ந்து வரும் தேர்தல்களில் மக்கள் ரீஎன்ஏ யை ஆதரிக்கிறார்கள் என்பதற்காக அவர்களை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று யாரும் அர்த்தம் கொள்ள முடியாது. ஆயிரக்கணக்கில் வாக்களிக்கிற மக்கள் ஏன் கூட்டமைப்பு நடாத்துகிற கூட்டங்களிலும், அடையாள நிகழ்வுகளிலும் நூற்றுக்கணக்கில் கூட மறுக்கிறார்கள் என்பதிலிருந்து இதனை விளங்க முடியும். தாங்கள் சிங்களக் கட்சிகளை ஆதரிக்கவில்லை என்பதனை வெளிப்படுத்தவே மக்கள் ரீஎன்ஏக்கு வாக்களிக்கிறார்களே தவிர இவர்கள் தமது பிரச்சனைகளை தீர்ப்பார்கள் என அவர்கள் நம்பவில்லை.

இப்போது ரீஎன்ஏ காரரும் அவர்களது புலம்பெயர் அடியாட்களும் புதிதாக ஒரு கதை விடுகிறார்கள். சிறைகளிலும், இராணுவ முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள போராளிகளை விடுவிப்பதற்கு ரணிலும், மைத்திரி உடன்பட்டிருக்கிறார்களாம். ஆகவே அவர்களது விபரங்களை தந்தால் தாங்கள் அதை தங்கள் எசமானர்களிடம் கொடுத்து விடுவிப்பார்களாம். ஐந்து வருசமாய் எம்பிமாராயாய் இருந்து சம்பளம் வாங்கும் இவர்கள் தங்கள் பகுதியில் யார் யார் கைது செய்யப்பட்டுள்ளார்கள், யார் யார் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளார்கள் இன்ற விபரங்களை இன்றைக்கு வரைக்கும் அறிய முற்படவில்லையா? இவர்கள்தான் இப்படி என்றால், சிங்கள அரசாங்கத்தினர் தாம் யாரை பிடித்து வைத்திருக்கிறோம் என்று தெரியாமலே ஆட்களை சகட்டு மேனிக்கு பிடித்து வதைதிருக்கிறார்களா? யாரை ஏமாற்றுகிறார்கள்? அமைச்சுப் பதவிகளுக்காக நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்த ரீஎன்ஏ கார்ர் அமைச்சுப்பதவியை ஏற்காது விட்டது ஏதோ தியாகம் என்று நினைக்க வேண்டாம். நூறுநாட்களில் எதையும் சாதிக்க முடியாது, வீணாக பதவியை எடுத்த மொக்கயீனப்படவேண்டாம் என்ற நினைப்பிலேயே அவர்கள் பதவியை அடுத்த தேர்தல் வரைக்கும் ஒத்துப் போட்டுள்ளார்கள்.

இனி விசயத்திற்கு வருவோம், சம்பந்தன் தேசியத்தலைவர் அவர்களை அவமதித்தமை இதுதான் முதல்தடவை அல்ல. இதற்கு முன்னரும் நடந்திருக்கிறது. முள்ளிவாய்க்கால் அனர்த்தமே சம்பந்தன் சரியாய் இருந்திருந்தால் நடந்திருக்காது. ஆகவே வெறுமனே கண்டித்து அறிக்கை விடுவதனால் எதுவித பயனும் இல்லை. எண்பது தாண்டின வாழ்கையில் இப்படி எத்தனை அறிக்கையை சம்பந்தன் கண்டிருப் பார். ஆகவே சம்பந்தன் புலம் பெயர்நாடுகளுக்கு வரும்போது அவருக்கு பலமான எதிர்ப்பை காட்ட வேண்டும். அவரகளது கூட்டங்களை முற்றுகையிட்டு அவரை மன்னிப்புக் கோர வைக்கவேண்டும். இவ்வாறான போராட்டங்களில் வன்முறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

*- மணிவாசகர்*

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JANUARY 23, 2015, ISSUE 234

## தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்களா?

மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கம் பதவியேற்றதனைத் தொடர்ந்து, அவ்வரசாங்கத்தின் முக்கியஸ்தர்களிடமிருந்து தினந்தோறும் பல்வேறு அறிவிப்புகள் வெளிவந்த வண்ணமுள்ளன. அவற்றுள் முன்னைய அரசாங்கத்திற்கு பயந்து நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்களையும், மாற்றுக் கருத்தாளர்களையும் நாட்டுக்கு திரும்பி வருமாறு விடுத்த அழைப்பும் அடங்குகிறது. இவ்விடயம் தொடர்பாக இந்திய ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிட்ட சிறிலங்காவின் வெளி நாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர, விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டவர்களையும் நாடு திரும்புமாறு அழைப்பு விடுத்திருக்கிறார். பரபரப்புச் செய்திகளை வெளியிடும் ஊடகங்களால் இவ்வறிவித்தல்கள் மிகைப்படுத்தப் படுகின்ற போதிலும், நடைமுறையில் இத்தகைய நகர்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதாகவோ, அல்லது அதற்கான ஆயத்தங்களில் அரசாங்கம் ஈடுபடுவதாக தெரியவில்லை.

சிறிலங்காவின் சிறைகளிலும், இரகசியத் தடுப்பு முகாம்களிலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் இறுதியுத்தத்தின்போது கைதானவர்கள், சரணடைந்தவர்களில் பெரும்பகுதியானோர் என்னவானார்கள் என்ற தகவல்கள் கூட இதுவரை வெளியிடப்படவில்லை. கடந்த ஐந்தாண்டுகளில் பலதடவைகள் இவ்விபரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கையளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தும் அவ்விதம் எதுவும் நடைபெறவில்லை.

மைத்திரிபாலவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் பலவற்றில் முக்கிய பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பி. இன் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தமிழ் அரசியல் கைதிகள் பற்றி உரையாற்றியிருக்கிறார். ஆயுத முகவராக விருந்த கே.பி. போன்றவர்கள் அரச பாதுகாப்புடன் சுதந்திரமாக நடமாடும் நிலையில், மற்றையவர்கள் சிறை வைக்கப்பட்டிருப்பதனை அவர் கண்டித்து வந்துள்ளார். ஆகவே இப்பிரச்சனையின் தாற்பரியத்தை புதிய அரசாங்கம் அறிந்து வைத்திருக்கிறது எனலாம். இந்நிலையில் தமிழ் மக்களுடனான நல்லிணக்க முயற்சியாகவாவது அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட வேண்டும் என தமிழ்மக்கள் எதிர்பார்ப்பதில் நியாயமிருக்கிறது.

பதவிக்கு வந்து இரண்டே வாரங்களில் கைதிகளின் விடுதலையை நடைமுறைப் படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை யாராலும் புரிந்து கொள்ள முடியும். ஆனால், தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விபரங்களை வெளியிடுவதில் எது வித சிக்கல்களும் இருப்பதாகக் கூறமுடியாது. இவ்விடயத்தில் விரைந்து செயற்படுமாறு புதிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதற்கு அதனை நிபந்தனையின்றி ஆதரிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வரவேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*2009ம் ஆண்டுக்கு பிறகு தமிழ் ஊடகங்களைப் பாத்து இவை முந்தி மாதிரி இல்லை எண்ட பொதுவான அபிப்பிராயம் எல்லாரிட்டையும் இருக்குது. இதிலை உண்மை இல்லாமலில்லை. தேசம் என்ற கட்டமைப்பு சிதைஞ்சு போனால் கலை, கலாச்சாரம் பண்பாடு எல்லாம் சிதைந்து போயிடும். ஆகவே இவற்றை தக்க வைக்க வேண்டும் எண்டதே **'ஒரு பேப்பர்'** இன் இப்போதைய நோக்கமாக இருக்கிறது. **'ஒரு பேப்பர்'** தொடங்கேக்கை இருந்த நோக்கம் வேறையாய் இருந்தது. வேணுமெண்டால், ஒரு நோக்கம்-போக்கம் இல்லாமல் ஏதோ ஆசைப்பாட்டிலை தொடங்கினம் எண்டும் சொல்லலாம். எங்கடை நிலைபாட்டிலை நாங்கள் விட்டுக்கொடுக்காமல் இருக்கிறதாலை இழக்கிற வாய்ப்புகள் அதிகம்தான். ஆனால் இந்த விசயத்திலை விட்டுக்குடுப்புக்கே இடமில்லை எண்டதை சொல்லி வைக்கிறம். தமிழ் மக்கள் தமக்கென்றொரு கலை பண்பாட்டினை பேணிப் பாதுகாக்கோணும் எண்டு சிலர் இயங்கிற மாதிரி இத் தனித்துவத்தை அழிக்கவேணும் எண்டு சில வெளிச்சக்திகள் இயங்குவதையும், அவையளோடை எங்கடை சிலவும் சேர்ந்து திரியிறதைக் காணக் கூடியதாய் இருக்குது. இந்த விசயங்களிலை கொஞ்சம் கவனம் எடுங்கோ எண்டுதான் உங்களைக் கேட்கிறோம்.*

*சிறுகதைப் போட்டி வைக்கிறது பற்றி நாங்கள் கூடிக் கதைக்கக்கிள்ளை எங்கடை கூட்டாளி ஒருவர் சொன்னார். தங்கடை சிறுகதைகளை பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு அனுப்பினால் அவையள் போடுவினமோ ? போடுகிற தரத்திலை இருக்குமோ ? எண்ட ஐமிச்சத்திலை தாங்களே நாலைஞ்சு சிறுகதையளை எழுதி ஒண்டாய் ஒருதொகுதியாக தங்கடை செலவிலை பதிப்பிக்கினமாம். எங்களுக்கும் இப்ப சிறுகதையள் வாறது வலுவாய் குறைஞ்சதுக்கு இதுதான் காரணமோ தெரியேல்லை. நல்ல சிறுகதையள் வராவிட்டால் வாறதை வைச்சு இடத்தை நிரப்பிறதிலை ஆருக்கு என்ன பிரயோசனம்? ஆகவே உங்களது ஆக்கங்கள் பிரசுரிக்கும் தரத்தில் இருக்க வேண்டும் எண்டு நாங்கள் எதிர்பார்க்கிறதிலை பிழை இருக்கிறதாய் தெரியேல்லை.*

*பரிசில் லட்சக்கணக்கான ஆட்கள் திரண்டு வந்து `Charlie Hebdo' க்கு தமது ஆதரவை தெரிவிச்சிருக்கினம். உலகநாட்டு தலைவர்களும் ஆதரவு தெரிவிச்சிருக்கினம். உலகத்தலைவர்களின் ஆதரவிலை என்ன சூட்சுமம் இருக்கோ தெரியாது. ஆனால் இவ்வளவு பெருந்தொகையானவர்கள் ஒரு சஞ்சிகைக்கு ஆதரவு தெரிவித்தது ஊடகங்களின் பலத்தைக் காட்டுவதாக இருக்குது.*

*புலம்பெயர் தமிழ் அமைப்புகள், செயற்பாட்டாளர்கள் பற்றிய விமர்சனங்கள் வரும்போது அதுகளை பிரசுரிக்கிறதிலை நாங்கள் தயக்கம் காட்டுறதில்லை. இதிலை தெரிஞ்சவை தெரியாதவை எண்டு நாங்கள் பார்க்கிறதில்லை. இந்த அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் இந்த விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு தங்களை திருத்த வேண்டும் எண்ட ஒரே நோக்கம்தான் எங்களிட்டை இருக்குது. ஆனால் இது பழைய கறளிலை எழுதினது எண்டு கடுப்போடை இருக்கிறதை விட்டுட்டு உங்கடை பக்க நியாயத்தை தெரியப்படுத்துங்கோ. இல்லாட்டி ஜனநாயகம், கத்தரிக்காய் என்று நீங்கள் சொல்லித்திரியிறதிலை ஒரு அர்த்தமும் இல்லை பாருங்கோ.*

*வேறை என்ன?*

*அடுத்த பேப்பரில் சந்திக்கிறம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Singapore Principles of 2013:
# Tamil polity taken for ride from Oslo to Singapore

**TamilNet**

Right from the Indo-Lanka agreement of 1987 to Oslo Declaration of 2002 and to hitherto unrevealed Singapore Principles of 2013 that brought the Sampanthan polity into a conceptual framework for the recent regime change in Colombo, the external forces seeking to influence the affairs of the island have taken the Eezham Tamils for a ride to confine the Tamil polity into the unitary State of genocidal Sri Lanka without securing any concrete and descriptive guarantee from the Sinhala polity. By its latest move, the ITAK has pushed the Tamils back into the past, Tamil political observers in Jaffna said citing the so-called Singapore Principles from 2013. TamilNet brings out the text of the so-called Singapore Principles for the edification of global Tamils.

All the clauses of the so-called Singapore principles are non-descriptive with regards to a principled approach in resolving the national question.

Mr M.A. Sumanthiran, the non-elected national list ITAK parliamentarian and Mr V.T. Thamilmaran, the dean of the Faculty of Law at the University of Colombo were the Tamil representatives from the island while representatives of the so-called Global Tamil Forum (GTF) were representing the Diaspora Tamils at a meeting in Singapore in 2013 when Dr Jayampathy Wickramaratne came with his proposal points to agree upon a conceptual framework aimed at regime change, the removal of Executive Presidency and other arrangements targeting good governance. Dr Jayampathy Wickramaratne was an adviser to Sri Lanka's past two Presidents.

"Mangala Samaraweera came as a 'beggar' urging Tamil support for regime change and abolition of the executive presidency. It was 2013," said one of the participants, reflecting on the Singapore meeting.

When Tamil aspirations came for discussion, M.A. Sumanthiran wanted to avoid the mentioning of terms such as Nation and Right to Self Determination in the document.

Only the voice of a human rights defender, a Sinhalese, representing the civil society, was in favour of a formula based on the recognition of nationhood to Tamil people with their traditional homeland in the North-East.

V.T. Thamilmaran, who was once respected for his principles on Tamil sovereignty, was silent and was talking only about good governance.

Tamil aspirations went missing in the proposal. Instead, the document was drafted with the intention of being non-descript. But, a consensus was achieved on winning Tamil voters through the TNA for the regime change.

When Tamil aspirations came for discussion, M.A. Sumanthiran wanted to avoid the mentioning of terms such as Nation and Right to Self Determination in the document.

A lawyer from Sri Lanka Muslim Congress was also represented at the meeting apart from several other representatives.

The meeting was organised by South Africa and was funded by two European countries.

The directors of South African 'In Transformation Initiative' Roelf Meyer, Ivor Jenkins and Mohammed Bhabha organised the meeting.

Ironically, the 'approach' of the South African outfit, according to its website is "premised on the philosophy that any solution to differences or even conflict must be designed, must evolve, and must be developed and settled domestically; solutions cannot be prescribed from external actors."

The 'Singapore principles' was giving secondary status to religions other than the Buddhism.

The 10-points agreed between the Sampanthan polity and the regime changers including the new SL Foreign Minister, Mangala Samaraweera, at Singapore in 2013 follow:

*Singapore Principles*

- In describing the nature of the State what is important is the substance; the labels are secondary.
- The Constitution shall be based on basic constitutional principles and values including sovereignty of the people, participatory democracy and supremacy of the Constitution which shall form an unalterable basic structure.
- Power sharing shall be on the basis of self-rule and shared-rule within an undivided Sri Lanka.
- The Executive Presidency shall be abolished and the form of government shall be Parliamentary.
- The pluralist character of Sri Lankan society as well as identities and aspirations of the constituent peoples of Sri Lanka shall be constitutionally recognised.
- There shall be a strong and enforceable Bill of Rights consistent with universally accepted norms and standards.
- There shall be a separation of powers and an independence of judiciary which includes a Constitutional Court.
- Important institutions shall be independent and accountable. Appointments to these and High Posts shall be through a transparent mechanism that provides for a national consensus, example Constitutional Council.
- Institutions of the State shall reflect the pluralist character of Sri Lankan society.
- The Republic of Sri Lanka shall be a secular state. The Foremost place to Buddhism and equal status to other religions shall be assured.

# Reality Check:

# Sri Lanka's New Government

By : Madura Rasaratnam

Maithripala Sirisena's recent victory in Sri Lanka's presidential election has raised hopes that the island's long-standing and ever-deepening ethnic conflict might move towards some form of political resolution. The conflict escalated dramatically during the tenure of his predecessor, Mahinda Rajapakse, who directed a successful military campaign to defeat the LTTE, securing huge popularity among the majority Sinhalese. The war itself came to a brutal end in May 2009 amidst mass atrocities and was followed by the militarisation of the Tamil speaking regions by the almost exclusively Sinhala armed forces which continues to this day. Although Sirisena's past performance and campaign commitments suggest he is as much a committed Sinhala Buddhist nationalist as Rajapakse, ongoing international pressure may inject a powerful check that could move Sinhala leaders and society more broadly towards a just and lasting political solution to the Tamil question.

The new administration takes power at a time when Sri Lanka faces unprecedented levels of international pressure centred largely on accountability for war time abuses, demilitarisation and reconciliation through an inclusive political settlement that addresses Tamil demands for autonomy and equality. In March this year, a UN investigation into war crimes, crimes against humanity and human rights abuses since 2002 will report its findings to the UN Human Rights Commission. The UN probe was mandated after the repeated refusal of Rajapakse government's to acknowledge, let alone credibly investigate, allegations of war crimes and crimes against humanity. Rajapaksa's decision not to recognise or cooperate with the UNHRC-mandated investigation intensified his government's international isolation. More generally, Rajapakse's uncompromising defence of Sri Lanka's Sinhala Buddhist state order, manifest in the government's refusal to seek a political solution to the ethnic crisis or demilitarise the Tamil areas, also fuelled tensions with former allies, principally Western states and India.

Unsurprisingly, international demands for both accountability and reconciliation have already begun to press upon the new government. Indian Prime Minister Modi, the first to congratulate Sirisena, called for 'genuine and effective reconciliation.' US secretary of state John Kerry,while welcoming the new government, also cautioned that 'real challenges' remained, stressing issues of human rights and the 'problems of inclusivity.' Likewise the UN Secretary General, the Canadian Foreign Affairs Minister and the British Prime Minister all stressed the need for accountability and reconciliation in their congra tulatory messages; the latter explicitly calling on the new President to co-operate with the UN investigation.

While Sirisena's stance on accountability for wartime atrocities and reconciliation through a political solution has thus far been indistinguishable from Rajapakse's, it is clear that the new government is keen to reverse Sri Lanka's growing international isolation. In a recent public address from Kandy—the historical seat of Sinhala Buddhist power Sirisena emphasised his intention to normalise Sri Lanka's strained international ties. Further more, his government is closely linked to political figures—former president Chandrika Kumaratunga and newly appointed Prime Minister Ranil Wickramasinghe—who are keen to mend ties with both the West and India. Indeed it is clear international pressure is already having an effect. In response to the renewed international calls for Sri Lanka to cooperate with the UN inquiry which accompanied congratulatory messages, Sirisena's stance on accountability has started to move, with promise of a domestic investigation and prosecution.

In the months before defecting from the Rajapakse government in November, Sirisena attacked the UN investigation as an international conspiracy organised at the behest of the LTTE and vowed to protect Sri Lankan political and military leaders from prosecution, including Rajapakse and his family. Indeed, in his election campaign he boasted of his own role as Acting Defence Minister during the final stages of the war—when many of the worst atrocities occurred. However, in the days after Sirisena assumed office, a spokesperson for the president has suggested that 'mistakes' may well have been made and if individuals had broken the UN mandated laws of war, they would have to be prosecuted. The government's insistence on a domestic rather than international mechanism remains unacceptable given the deeply politicised and compromised nature of the judiciary and criminal justice system. For these reasons, and Sri Lanka's long history of sham domestic investigations into human rights abuses, this is still a long way off meeting international, let alone Tamil expectations. Never theless, the shift in position is notable and suggests a dawning realisation of international realities.

Although Sinhala Buddhist nationalism is a dominant and pervasive force in Sri Lanka, the threat of international isolation is a potent reality check. Indeed, the growing sense that the Rajapakse government had 'mishandled' its foreign relations and had alienated western states as well as India fed his declining popularity, particularly amongst Sri Lanka's political elite. Even former Rajapakse officials and acolytes have argued that foreign policy has gone badly wrong. Rajapakse himself was clearly not immune to international pressure; a spokesperson for Sirisena told reporters that it was diplomatic pressure that deterred Rajapaksa fromstaging a coup so as to hold onto power after his electoral defeat.

Beyond the narrow circles of the political elite, international pressure can also be effective in shifting wider Sinhala society's determination to maintain Sinhala Buddhist nationalist dominance. It is important to note that while Rajapakse lost the elections overall, he won a slight plurality of the Sinhala vote. Conversely, although Sirisena's victory relied heavily on Tamil and Muslim revulsion at the Rajapakse regime, his campaign focussed exclusively on Sinhala concerns, and he repeatedly committed to maintaining the military's tight control of the Tamil speaking regions andrejected Tamil demands for autonomy. But this position makes rapprochement with the international community difficult; the latter's frustration has already prompted mention of sanctions in the event of Sri Lanka's continued non-compliance with the UN investigation.

Such an escalation is not something that could be lightly dismissed and weighs heavily on the economic as well as social orientations of Sinhala society. Sri Lanka's primary export markets are in the West and India is Sri Lanka's largest overall trading partner. Likewise—and despite all the talk of the 'turn' to China—middle class and upwardly mobile Sinhalese, as well as Tamils, aspire to an English education and, where possible, higher education in the West. Furthermore cricket, that key badge of Sri Lankan national identity and pride, links the country to the English speaking Commonwealth. In short, while majority Sinhala opinion is opposed to international demands on accountability for wartime atrocities and political reconciliation with the Tamils, it is nevertheless linked by enduring cultural and economic ties to the very states and societies from which these demands emanate.

The new government's stated eagerness to rebuild strained international ties and restore Sri Lanka's tarnished international image is key leverage that can be used to shift Sinhala leaders and society towards accepting international realities and the need for a just and lasting solution to the ethnic conflict. The broad international coalition—including states, international human rights groups, Tamil diaspora groups and political groups in Tamil Nadu—that has sustained the momentum for accountability and reconciliation should now press for concrete measures that will start to change ground realities.

> In short, while majority Sinhala opinion is opposed to international demands on accountability for wartime atrocities and political reconciliation with the Tamils

Civil society groups in the northeast have already demanded demilitarisation, the return of confiscated land and the repeal of the Prevention of Terrorism Act as urgent concerns. They have also called for the thousands detained without charge sometimes for years—by the Sri Lankan authorities to be either charged or released. Another important step would be to remove the proscription of prominent Tamil diaspora organisations that the Rajapakse government listed as terrorists soon after the March 2014 UN resolution. This would allow the large Tamil diaspora to contribute its much needed and substantial skills as well as financial resources to the urgent tasks of rehabilitation in the war-shattered northeast.

> The government's insistence on a domestic rather than international mechanism remains unacceptable

The end of the Rajapakse government certainly represents an opportunity for change but this does not mean that change is inevitable. In broad terms the election merely saw the replacement of one avowed Sinhala nationalist leader with another equally committed to maintaining a unitary and majoritarian Sinhala Buddhist order. It is this dynamic that has fed the ethnic conflict over the past several decades, and continues to drive the militarised repression and exclusion that characterises relations between the state and the Tamils. What is different about this election is the context of unprecedented international pressure. Only the continuation of this pressure can sustain the reality check that produced last week's election outcome and make its legacy different from those of previous ones.

*Courtesy: Tamil Guardian*

**ஒரு பேப்பர்** உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon..... 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate..... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

**ஒரு பேப்பர்** தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

*எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!*

*ஆசிரியர் குழு:*

*பிரித்தானியா*
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

*கனடா*
**தயா - அரவிந்தன் - சிந்து**

*பொறுப்பாசிரியர்*
**- கோபி -**

*விளம்பரம்*
**அஜந்தா**

*அச்சு*
**தர்சினி (கனடா) - சுகன்யா**

*வடிவமைப்பு*
**மயூரன் - யுகன்**

*முகப்பு வடிவமைப்பு*
**seven zero graphics**

*விளம்பர வடிவமைப்பு*
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

*தமிழ் எழுத்துரு உதவி*
**சுரதா யாழ்வாணன்**

*நிதி – நிர்வாகம்*
**அஜந்தா**

*வழங்கல்*
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**

**உங்கள் தொடர்புகட்கு:**

*தொலைபேசி* (Tel)
**லண்டன்** 020 7043 4310
**கனடா** 416 613 2850

*தொலைநகல்* (Fax)
**லண்டன்** 020 7043 4312
**கனடா** 416 438 7855

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

*மின்னஞ்சல்:*
**info@orupaper.com**

*இணையம்:*
**www.orupaper.com**

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# தமிழ் மக்களின் வாக்குகள் இராஜபக்சவுக்கான தண்டனையே!

**– நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதமர் உருத்ரகுமாரன்**

"நடந்து முடிந்த சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் தமிழின அழிப்பைத் தீவிரமாக மேற்கொண்ட மகிந்த இராஜபக்சவுக்குத் தமிழ் மக்கள் தமது வாக்குகள் ஊடாக வழங்கிய தண்டனையாகக் கருதப்பட வேண்டுமே அன்றி, வெற்றி பெற்ற புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கோ சிறிலங்காவின் ஒற்றையாட்சி அரசியலமைப் புக்கோ வழங்கப்பட்ட அங்கீகாரமாகக் கொள்ள முடியாது. அதனை அங்கீகாரம் என்று எவராவது அர்த்தப்படுத்த முனைந்தால் ஒன்றில் அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் வேட்கையைப் புரியா தவர்களாக இருக்க வேண்டும் அல்லது கபடத் தனம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்" இவ் வாறு நடந்து முடிந்த சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் வெளியிட்டுள்ள அறிக்கை யில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்ரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்து அவர் விடுத்துள்ள அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மகிந்த இராஜபக்ச வேறுயாருமல்ல. தமிழ் மக்களின் வரலாற்றில் மிகப் பெரும் இரத்த சாட்சியமாய் அமைந்த, மக்களின் கூட்டு நினைவு களில் நிலைத்துப் போயிருக்கும் முள்ளிவாய்க் கால் இனஅழிப்பு உள்ளடங்கலாக, சிறிலங்கா அரசு ஈழத்தமிழர் தேசத்தின்மீது நடாத்தும் இனஅழிப்பினைக் கடந்த ஒரு தசாப்தமாகத் தலைமை தாங்கி நடாத்திய சிங்கள தேசத்தின் தலைவர் ஆவர். இவரைத் தமக்குக் கிடைத்த வாய்ப் பினைப் பயன்படுத்தித் தமிழ் மக்கள் ஜனாதி பதித் தேர்தலில் தோற்கடித்துள்ளனர்.

இது தமிழின அழிப்பாளர்களைத் தமிழ் மக்கள் மன்னிக்கவோ அல்லது மறக்கவோ என்றும் தயாராக இல்லை என்பதனையே வெளிப்படுத் துகிறது. மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதி பதியாகப் பதவி ஏற்றுக் கொண்டமை தமிழர் நிலையில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தும் என நாம் கருதவில்லை.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு அடிப் படைக் காரணமே சிங்கள பௌத்த பேரினவாத அரச கட்டமைப்புத்தான். இக் கட்டமைப்பு இந்தத் தேர்தல் ஊடாக ஒரு புதிய முகத்துடன் தன்னை மேலும் நிலை நிறுத்தியுள்ளது என்றே நாம் கருது கிறோம்.

மேலும், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும் தனது கையில் தமிழர்களின் இரத்தம் படிந்தவர்தான் என்பதனை எமது மக்கள் மறந்து விட மாட்டார்கள். முள்ளிவாய்க்கால் போரில் பெரும் கொடுரங்கள் நடைபெற்ற இறுதி நாட்க ளில் மகிந்த இராஜபக்ச வெளிநாட்டில் இருந்த போது பிரதி பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பிலி ருந்ததனால் நடைபெற்ற தமிழின அழிப்புக்கு நேரடிப் பொறுப்பைச் சுமப்பவராவும் மைத்திரி பால சிறிசேன இருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளின் போது இது இவரின் ஒரு சாதனையாகவும் சித்தரிக்கப்பட் டிருந்தது. இந்த வகையில் தமிழ் மக்கள் மீதான சிங்களத்தின் இனஅழிப்புத் தொடர்பாக விசார ணைக்கு உள்ளாக்கப்பட வேண்டிய ஒருவராக வும் இவர் ஏன் கருதப்படக்கூடாது என்ற கேள்வி யும் எமது மக்களிடம் உண்டு.

இத்தகையதொரு சூழலில் எமது மக்கள் எந்த வொரு சிங்களத் தலைவர்களிடமும் நம்பிக்கை வைக்க முடியாது என்பதே தமிழ்த் தேசிய இனத் தின் வரலாற்று அனுபவமாக உள்ளது.

இதனால் தமிழர் தேசத்தின் அடையாளத்தை யும் உரிமைகளையும்; பாதுகாப்பதற்கு அவசிய மானதென நாம் கருதும் சில முன் நிபந்தனை களைத் தாயகத் தலைவர்களின் கவனத்துக்கும் அனைத்துலக சமூகத்தினதுபார்வைக்கும் முன் வைக்கிறோம்.

1. சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான இனஅழிப்புக் குறித்து அனைத்துலக விசா ரணை தேவை. புதிய சிறிலங்கா அரசாங்கம் அனைத்துலக விசாரணைகளுக்கு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரன் வெளிப்படுத்திய கருத்தினை நாம் வரவேற்பதோடு சிறிலங்கா சென்று விசாரணைகளை நடாத்துமாறு ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை ஆணையாளரைக் கோருகிறோம்.

2. நிலம் காவல்துறை உள்ளடங்கிய எல்லா வகை யான அதிகாரங்களையும் மத்தியில் நிலைப் படுத்தும் ஒற்றையாட்சி முறையினை அடிப்ப டையாகக் கொண்ட 13வது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சனைக் கான தீர்வுக்கு வழிவகுக்குமென நாம் ஏற்க முடியாது. பதிலாக நிலையான ஒரு அரசியற் தீர்வை எட்டுவதற்கான முதற்படியாக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும்; விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தைக் காலத்தில் முன் வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபை ஒன்றின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும்.

3. சிங்கள இராணுவத்தினர் தமிழர் பகுதி களில் நிலை கொண்டிருக்கும் போது எமது மக்கள் தாம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள் ளாகியிருப்பதாக உணர்கிறார்கள். இதனால் தமிழர் தாயகத்தின் சிவில் வெளியை உரு வாக்குவதற்கு முன்நிபந்தனையாக தமிழர் தாயகப் பகுதியில் இருந்து சிறிலங்கா இரா ணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும்.

4. தமிழர் தாயகத்தில் சிங்களம் நடாத்தும் நிலக் கபளீகரம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத் தில் ஈடுபட்டார்கள் என்ற காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டுள்ள அரசியற் கைதிகள் அனைவரும் நிபந் தனை ஏதுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

6. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில், யுத்தப் பகுதியில் இருந்து மக்களோடு வெளியேறி சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய் யப்பட்டு இதுவரை உயிரோடு இருக்கிறார் களா இல்லையா என்ற விபரம் தெரியாத நிலையில் உள்ள பாலகுமார், புதுவை இரத்தி னதுரை, யோகி, திலகர் உட்பட்ட போராட்ட அரசியற் தலைவர்களதும் ஏனைய போராளி களதும் நிலை குறித்த தகவல்கள் உடனடி யாக வெளியிடப்பட வேண்டும்.

7. தமிழர் தாயகப் பகுதியின் மேம்பாட்டு நட வடிக்கைகளில் புலம் பெயர் தமிழ்மக்கள் அச்சமின்றிப் பங்குபற்றக்கூடிய வகையிலா னதொரு பொறிமுறை அனைத்துலகச் சமூ கத்தின் பங்குபற்றுதலுடன் உருவாக்கப்பட வேண்டும்.

8. தமிழ்மக்கள் தமது அரசியல் எதிர்காலம் பற்றி ஜனநாயக வழியில் உரையாடவும் விவாதிக் கவும் தடையாகவுள்ள அரசியலமைப்பின் 6வது திருத்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும். இதன் தொடர்ச்சியாக தமிழர் தேசத்தின் தேசியப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண் பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இக் கோரிக்கைகள் நீதியின் அடிப்படையில் அமைந்த ஜனநாயகக் கோரிக்கைகளாகும். இக் கோரிக்கைகளை நிறைவேற்ற சிறிலங்கா அரசாங் கம் ஒத்துழைக்கும் பட்சத்தில் அதுவே எங்கள் மக்களின் ஜனநாயக உரிமையின் அடிப்படையி லான நிரந்தரமான அரசியற்தீர்வு காண்பது பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தும்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## சீக்கிரமே படியுங்கள்!

வாழ்க்கை ஜனனம் முதலே நமக்கு நிறைய கற்றுத் தர ஆரம்பிக்கின்றது. படிக்க மனமில்லா மல் பள்ளி செல்லும் மாணவன் போல நம்மில் அதிகம் பேர் அதை ஒழுங்காகப் படிக்கத் தவறி விடுகிறோம். படித்துப் பாஸ் ஆகும் வரை நாம் திரும்பத் திரும்ப ஒரே பாடத்தைப் பல முறை படிக்க நேரிடுகிறது. நாம் சலித்துக் கொள்கி றோமே ஒழிய அப்போதும் படித்துத் தேற முயல்வ தில்லை. என்ன உபத்திரவம் என்று சலித்துக் கொள்கிறோமே ஒழிய அப்போதும் ஒரு உண் மையை நாம் உணர்வதில்லை. படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளும் வரை வரலாறு மட்டுமல்ல, வாழ்க்கையும் தான் திரும்பத் திரும்ப ஒரே வித அனுபவத்தைத் தந்து கொண்டே இருக்கிறது.

ஜனனத்தில் ஆரம்பித்து மரணம் வரை கிடைக் கும் பாடங்களை யார் விரைவாகக் கற்றுத் தேறு கிறானோ அவனே வெற்றிவாகை சூடுகிறான். அவனே வாழ்க்கையில் நிறைவைக் காண்கிறான். அவனே கால மணலில் தன் காலடித் தடத்தை நிரந் தரமாக விட்டுச் செல்கிறான். மற்றவர்கள் புலம்பி வாழ்ந்து மடியும் போது அவன் மட்டுமே வாழ்க் கையை ரசித்து திருப்தியுடன் விடை பெறுகிறான்.

இந்த வாழ்க்கைப் பள்ளிக் கூடத்தில் ஒரு பிரத்தி யேக வசதி இருக்கிறது. நாம் அடுத்தவர் பாடத்தை யும் படித்துத் தேர்ந்து விடலாம். அப்படித் தேர்ந்து விட்டால், ஒழுங்காகக் கற்றுக் கொண்டு விட்டால் நாம் அந்தப் பாடத்தைத் தனியாகப் படித்துப் பாடு பட வேண்டியதில்லை.

உதாரணத்திற்கு ஒரு சாலையில் ஒரு குழி இருக்கிறது. திடீர் என்று பார்த்தால் அது தெரியாது. அந்தக் குழியைப் பற்றித் தெரிந்து கொள்ள நாம் அதில் விழுந்து எழுந்து தான் ஆக வேண்டும் என்பதில்லை. நமக்கு முன்னால் போகும் ஒருவர் அதில் விழுந்ததைப் பார்த்தாலே போதும் பின் எப்போது அந்தப் பாதையில் போகும் போதும் சர்வ ஜாக்கிரதை நமக்குத் தானாக வந்து விடும். இந்தப் பாதையில் இந்த இடத்தில் ஒரு அபாயமான குழி இருக்கிறது. கவனமாகப் போக வேண்டும் என்ற பாடம் தானாக மனதில் பதிந்து விடும். இனி எந்த நாளும் அந்தக் குழி நமக்கு பிரச்னை அல்ல.

ஆனால் "நான் அடுத்தவர் விழுவதைப் பார்த் தாலும் கற்றுக் கொள்ள மாட்டேன், நானே விழுந் தால் தான் எனக்குப் புரியும்" என்று சொல்லும் நபர் தானாகப் படிக்க விரும்பும் அறிவுக்குறைவா னவர். அவர் விழுந்து எழுந்து தான் கஷ்டப்பட வேண்டும். நானே ஒரு தடவை விழுந்தாலும் அதிலிருந்து கற்றுக் கொள்ள மாட்டேன். ஏனோ அப்படியாகி விட்டது. அடுத்த தடவை அப்படியாக வேண்டும் என்பதில்லை" என்று ஒவ்வொரு தடவை யும் அதே குழி அருகில் அலட்சியமாக நடந்து விழுந்து எழும் நபர் முட்டாள். அவர் கஷ்டப் படவே பிறந்தவர்.

இந்தக் குழி உதாரணம் படிக்கையில் இப்படியும் முட்டாள்தனமாக யாராவது இருப்பார்களா என்று நமக்குத் தோன்றலாம். ஆனால் நம்மில் பலரும் அப்படி முட்டாள்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மை. எத்தனை பேர் சூதாட்டத்தில் பல முறை தாங்கள் சூடுபட்டும் திருந்தாதவர்கள் இருக்கிறார் கள், எத்தனை பேர் பல பேர் சூதினால் சீரழி வதைப் பார்த்த பின்னும் "எனக்கு அப்படி ஆகாது" என்று நினைத்து திரும்பத் திரும்ப சூதாடி அழிந்து போனவர்கள் இருக்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள் புரியும். தீயைத் தொட்டுத் தான் அது சுடும் என்று உணர வேண்டியது இல்லை. அதைத் தொட்டு சுட்டுக் கொண்டவர்களைப் பார்த்தும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். அப்படி படிப்பது தான் புத்திசாலித்தனம்.

ஒவ்வொன்றையும் நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வில் அனுபவித்தே கற்க வேண்டும் என்றிருந் தால் நம் வாழ்க்கையின் நீளம் சில பாடங்க ளுக்கே போதாது. அதில் நிறைய சாதிக்கவும் முடியாது. நம் வாழ்க்கையில் கிடைக்கும் பாடங் களை முதல் தடவையிலேயே ஒழுங்காகப் படிப்பது முக்கியம். அடுத்தவர்கள் அனுபவங்களில் இருந் தும் நிறையவற்றை கூர்மையாகப் பார்த்துக் கற்றுக் கொள்வது புத்திசாலித்தனம். வாழ்க்கைப் பள்ளிக் கூடத்திற்குள் ஒரு முறை நுழைந்து விட்ட பின் தப் பிக்க வழியே இல்லை. எனவே எதையும் புத்திசாலித் தனமாக சீக்கிரமே படித்துத் தேறுங்கள். அதைத் திரும்பத் திரும்ப படிக்க வேண்டி வராது. அந்தப் பாடம் உங்களுக்குப் பாரமாகவும் இருக்காது.

*- என்.கணேசன்*

# ஆட்சி மாற்றம், அடுத்தது என்ன ?




**கோபி**
*ஒரு பேப்பர்*

கனிமவளம்மிக்க மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் (Democratic Republic Congo) அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தற்போது ஜனாதிபதியாக இருக்கும் ஜோசப் கபில்லா மூன்றாவது தடவையும் தேர்தலில் போட்டியிடாமல் புதியவருக்கு வழி விடவேண்டும் என்ற மேற்குலகத்தின் எதிர்பார்ப்பு உள்ளூரில் ஆர்ப்பாட்டங்கள் வடிவில் பிரதிபலிக்க ஆரம்பித்துவிட்டது. அமைதியை ஏற்படுத்துவதாக உலக நாடுகளின் விடயங்களில் மூக்கை நுழைக்கும் சர்வதேச முரண்பாடுகளுக்கான குழு (ICG) அங்கு ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

பெல்ஜியம் நாட்டின் காலனித்துவ ஆட்சிக்குட் பட்டிருந்த கொங்கோ ஜனநாயகக் குடியரசு 1960 இல் விடுதலையடைந்தது. அதன் முதல் பிரதமராக பற்றிஸ் லுமும்பா ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டார். முழு ஆபிரிக்காவின் நம்பிக்கைக்குரிய ஒரு தலைவராகவும், முற்போக்குக் கொள்கைகளைக் கொண்டவராகவும் இருந்த அவர் 1965ம் ஆண்டு ஜனவரி 17ம் நாள் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டதுடன் அந்த நாடு முழுமையான சர்வாதிகார ஆட்சிக்குள் வந்தது. அவரது படுகொலையில் அமெரிக்க உளவு நிறுவனமான சீஐஏ க்கு தொடர்பு இருந்ததாக இன்று வரை சந்தேகிக்கப்படுகிறது. லுமும்பா கொல்லப்பட்டு ஐம்பது வருடங்களின் பின், கொங்கோவில் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு, அமெரிக்கா பெருமளவு நிதியினை வழங்க முன்வந்துள்ளது. செல்லிடப்பேசிகளின் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்படும் கொல்ரான் , மற்றும் செம்பு போன்ற பல கனிமங்கள் நிறைந்து காணப்படும் கொங்கோ விடயத்தில் மேற்குநாடுகள் அக்கறை கொள்வது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடிய விடயமில்லை. இவ் அக்கறையை அந்நாட்டு மக்களின் நலனுடன் சேர்த்துப் பார்ப்பவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள்.

மேற்கின் நலன் சார் நடவடிக்கைகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதனை விளக்கவே கொங்கோவைப் பற்றி கூறவேண்டியிருந்தது. இலங்கை தீவின் ஆட்சிமாற்றத்தை இதனுடன் ஒப்பிடும்போது இங்கு நாம் சில பொதுத்தன்மைகளை அவதானிக்க முடிகிறது. மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கைத் தீவில் 'ஆட்சி மாற்றம்' ஒரு அமைதிப்புரட்சி போல் நடந்தேறியிருக்கிறது. 'அரபு வசந்தம்' போன்று ஆர்பாட்டங்களோ, மக்கள் திரள் போராட்டங்களோ அங்கு நடைபெறவில்லை. மோடியின் வெற்றிக்கு பயன்பட்ட சமூக வலைத்தளங்கள் கூட மைத்திரியின் வெற்றிக்கு பெருமளவில் பங்களிக்கவில்லை. இதனை அத்தீவில் வாழும் எல்லாத்தரப்பினரும் இணைந்து நடாத்திய வானவில் புரட்சி (Rainbow Revolution) என சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர The Economist சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் விபரித்திருக்கிறார். இந்த மாற்றத்தின் பின்னணியில் மேற்குலகமும், இந்தியாவும் இருந்தன என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. ஆனால் இந்த மாற்றம் எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்பது வானவில்லின் வர்ணங்களாக இணைந்திருந்த கட்சிகளுக்கோ பொதுமக்களுக்கோ தெரிந்திருக்கவில்லை. ஆகவே இங்கு ஜனநாயகத்தின் ஒரு முக்கிய கூறான வெளிப்படைத்தன்மை (transparency) பலியிடப்பட்டுள்ளது என்பதனை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்நிலை ஆட்சி மாற்றத்தின் பின்னரும் தொடர்கிறது.

இலங்கை அரசியலில் என்ன நடைபெறுகிறது என்று கேட்டால், வழமையாக விடயம் அறிந்தவர்கள் போல் காட்டிக்கொள்பவர்கள் கூட, "உள்ளுக்குள்ளாலை அலுவல் நடக்குது, குழப்பாமால் இருங்கோ" என்பதுபோல் பதிலளிக்கிறார்கள். உண்மையில் என்ன நடைபெறுகிறதென்று அவர்களுக்கு எதுவுமே தெரியாது என்பது வேறு விடயம். இந்நிலையில் மேற்குநாடுகள் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகளைப் பெற்றுதருவார்கள் என தமிழர்களில் சிலர், குறிப்பாக முன்னைய தலைமுறையினைச் சேர்ந்தவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளார்கள் போல் தெரிகிறது. அது போல் அருட்தந்தை இமானுவலின் தமிழர் பேரவை போன்ற ஒரிரு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் வெளிச்சக்திகளை மாத்திரம் நம்பியிருக்கும் ஒட்டுண்ணி அரசியலுக்கு தமிழ் மக்களை அழைத்துச் செல்ல முயல்கின்றன. இவர்கள் பாவிக்கும் வார்த்தைப் பிரயோகங்கள் கூட வெளித்தரப்பினர் கூறுவதை அட்சரம் பிசகாமல் ஒப்பிப்பது போன்று அமைந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

### வெளிவிவகாரக் கொள்கை

மைத்திரி - ரணில் கூட்டின் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த இரண்டு வாரங்களில் எதைச் சாதித்ததோ, இல்லையோ, தமது வெளிவிவகாரக் கொள்கையை உடனடியாகவே அறிவித்துவிட்டது. "உங்களுடனான வியாபரத்திற்கு நாம் கடையை திறந்து வைத்திருக்கிறோம்" என மேற்குலகத்திற்கும், இந்தியாவிற்கும் பகிரங்கமாகவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சீனாவிற்கு வழங்கப்பட்ட கொழும்புத் துறைமுக விஸ்தரிப்புத் திட்டமும் கைவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மங்கள சமரவீர இந்தியாவுக்கு பயணம் செய்து பிரதமர் மோடி, வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். இந்தியப் பத்திரிகையாளர்களுடான ஒரு சந்திப்பில், வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவது உட்பட இதுவரை வேறெங்கும் வழங்காத வாக்குறுதிகளை யெல்லாம் அவர் அள்ளி வழங்கியிருக்கிறார். இவ்வரசாங்கம் தொடருமாயின் இந்தியாவுடனான வர்த்தக உறவுகள் மேலும் மேம்பாடு அடையும் என்பதனை மாத்திரம் இப்போதைக்கு உறுதிபடக் கூறமுடியும்.

### புலம்பெயர் அமைப்புகளுடனான தொடர்பாடல்

மங்கள சமரவீர இந்திய ஊடகங்களுக்கு வழங்கிய செவ்விகளிலும், The Economist சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியிலும், தாம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் தொடர்பாடலை மேற்கொள்ள விரும்புவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். முன்னைய அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட குழுக்களைச் சேர்ந்த பலரை தான் லண்டனில் சந்தித்துள்ளதாகவும், அவர்களைத் தீவிரவாதிகள் என தன்னால் நம்ப முடியவில்லை எனவும் கூறியிருக்கிறார். லண்டனில் அருட்தந்தை இமானுவல் குழுவைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தமையையே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். புலம்பெயர் அமைப்புகளுடனான உறவாடல் என்பது ('Engaging Diaspora') ஆட்சிமாற்ற முயற்சியின் ஒரு பகுதியாக நீண்ட நாட்களாகவே நடைபெற்றுவருவது தெரிந்ததே. எனினும் தாயகத்தைப்போன்று தமிழ் அலைந்துழல்வு சமூகத்திலும் மிதவாதத் தலைமைகளைக் கொண்ட பொம்மை அமைப்புகளை நிறுவும் மேற்கின் முயற்சிகளையிட்டு தமிழ்த் தேசிய சக்திகள் அவதானமாகவே இருக்க வேண்டும்.

### ஐ.நா. மனிதவுரிமைச் சபையின் நகர்வுகள் எவ்வாறிருக்கும்?

மைத்திரி - ரணில் - சந்திரிகாவின் அரசாங்கம் முழுமையாகவே தன்னை இந்தியா, மற்றும் மேற்குலகத்தின் நண்பர்களாக மாற்றிவரும் நிலையில். பதிலுக்கு அவை என்ன செய்யப்போகின்றன என்பதுதான் இப்போதுள்ள கேள்வியாக உள்ளது. இந்தியாவுடன் ஒத்துழைக்கும் விடயத்தில் இந்திய வர்த்தக, மற்றும் பாதுகாப்புத் தொடர்பான நலன்களே முக்கிய இடத்தை வகிக்கும் என்பதனால், சீனாவிலிருந்து விலகியிருக்க முயலும் புதிய அரசாங்கத்திற்கு இந்தியாவுடன் நெருங்கிய உறவினைப் பேணுவதில் சிக்கல்கள் இருக்கப் போவதில்லை. இம்முறை ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் சிறிலங்கா தொடர்பாக தீர்மானம் கொண்டு வரப்பட்டால் அதனை எதிர்த்து இந்தியா வாக்களிக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால் மனிதவுரிமைகளின் காவலர்களாக தம்மை காட்டிக்கொள்ளும் மேற்குலகத்தின் உறவினைப் பேணுவதில் மனிதவுரிமை, பொறுப்புக் கூறல் போன்ற விடயங்கள் புதிய அரசாங்கத்திற்கு நெருடலாகவே அமையும்.

**இலங்கை அரசியலில் என்ன நடைபெறுகிறது என்று கேட்டால், வழமையாக விடயம் அறிந்தவர்கள் போல் காட்டிக்கொள்பவர்கள் கூட, "உள்ளுக்குள்ளாலை அலுவல் நடக்குது, குழப்பாமால் இருங்கோ" என்பதுபோல் பதிலளிக்கிறார்கள்.**

இவ்வாரம் பிரித்தானியப் பாராளுமன்றத்தில் சிறிலங்காவின் ஆட்சி மாற்றம் பற்றிப் பேசப்பட்ட போது அங்கு உரையாற்றிய கொமென்வெல்த் நாடுகளுக்கான வெளிவிவகார அமைச்சர் ஹ்யுகோ சுவையர் (Hugo Swire) குறிப்பிட்ட விடயம் கவனத்திற்குரியது. "எம்மைப்பொறுத்தவரை வர்த்தக உறவுகள் முக்கியமானவைதான், அதுபோலவே மனிதவுரிமை விடயங்களும் முக்கியமானவை. எமதுநாட்டில் இரண்டுதரப்பைச் (தமிழ், சிங்களம்) சேர்ந்தவர்களைக் கொண்ட பெரிய அலைந்துழல்வு சமூகத்தினர் உள்ளனர், சமாதானமும் நல்லிணக்கமும் முக்கியமானவை. நீதியும், சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்படும்வரை வர்த்தக முயற்சிகள் மேம்பாடு அடையமாட்டாது என நாம் நம்புகிறோம்" எனத் தெரிவித்திருந்தார்.

புதிய அரசாங்கத்திற்கு உதவி செய்யும் வகையில் இலங்கை தொடர்பான ஐ. நா விசாரணையை பிற்போட வேண்டும் என முன்னர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய Teresita C. Schaffer அவர்கள் அமெரிக்க மூலோபாய நலன்பேணும் சிந்தனை மையமான Brookings Institute இணையதளத்திற்கு வழங்கிய ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். சமாதான காலத்தில் நோர்வேயின் அனுசரணையாளராகப் பணியாற்றிய எரிக் சொல்ஹெய்ம் அவர்களும் 'The Hindu' பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் இதுபோன்ற கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில், ஐ.நா. மனிதவுரிமைச்சபையின் உதவியுடன் உள்ளூரில் விசாரணையை நடாத்த விருப்பதாக சிறிலங்கா அரச தரப்பினர் கூற ஆரம்பித்துள்ளார்கள். இவற்றிலிருந்து ஐ.நா. மனித வுரிமைச்சபையின் சிறிலங்கா தொடர்பான நடவடிக்கைகள் வீரியம் குன்றிவிடும் அபாயம் தோன்றியுள்ளமை தெளிவாகிறது.



**ஒரு பேப்பர்**

கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ..... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ..... 020 8605 0434
Murugan Kovil ..... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ..... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store ..... 020 8672 3200
Ayngaran ..... 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya ..... 020 8540 8192

**Croydon**
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa ..... 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

**Lewisham**
Chandra ..... 020 8333 8680
Eelam Shop ..... 020 8690 6545
Katpagam ..... 020 8694 8810
AJ Video ..... 020 8691 8888
Sivan Kovil ..... 020 8318 9844
KRS Supermarket... 020 8297 9432
Best Food ..... 020 8692 9811

**Eastham**
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ..... 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ..... 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan..... 020 8514 1744
Angels ..... 020 8553 0490
Sri store ltd ..... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans ..... 020 7609 1912
Prabas ..... 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
North Harrow C&C.. 020 8863 6160
Prabhas ..... 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc..... 020 8795 0648

**Ealing**
Amman kovil..... 020 8810 0835

**Greenford**
Ambiha ..... 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C..... 020 8606 9900
Abi Fast Food ..... 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C..... 020 8571 4599
Tamilan C & C..... 020 8561 8174
Lady Margret..... 020 8571 4434

# JSN HEAT SUPPLIES LTD

MERLYN M · KUDOS · hansgrohe · Hudson Reed · GROHE · GRUNDFOS

## WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS

**Complete 2 Bedroom House**

5 yr guarantee, A rated energy saving
25 Kilo Watt boiler, with flue and timer
Plus 5 radiators, 1 towel rail, TRV Valve,
2 bundles 22mm copper pipe,
1 Bundle 15mm Copper pipe

**£1,370** inc. VAT

GROHE

EUROSMART BASIN MIXER + BATH SHOWER MIXER PACK **£233.20** inc. VAT

GROHE



COSMO SHOWER BUNDLE **£432** inc. VAT

SINGLE LEVER BASIN MIXER
LIMITED OFFER **£18.99** inc. VAT

SINGLE LEVER BATH/SHOWER
LIMITED OFFER **£32.00** inc. VAT

NEPTUNE SINGLE LEVER SINK MIXER
LIMITED OFFER **£18.90** inc. VAT

KITCHEN AND BATHROOM FREE DESIGN AND QUOTATION. FITTING SERVICE AVAILABLE.

SPECIAL OFFER
Thermostatic
2 way outlet
LIMITED OFFER
←£169 inc. VAT
£149→ inc. VAT



LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT

Starts from **£14** inc. VAT

COMPACT FURNITURE PACK
550x300mm basin unit, 500 x 300mm WC unit, Siamp Tru-Flow concealed Cistern, Rak compact pan & standard seat.

**£249** inc. VAT

1200mm
6MM SAFETY GLASS
CLEAR SEALED LIFETIME GUARANTEE
SLIDING DOOR
**£189** inc. VAT

WALL AND CEILING PANELS

STARTING FROM **£22 + VAT**

ALL KINDS OF BOILER CONTROLS AND PARTS AVAILABLE AT SPECIAL PRICES

Vaillant · Roca · MAIN · Armitage Shanks · Glow-worm · Ideal Standard · AQUALISA · AQUALOX · mira · ARISTON · KESTON · saneux

• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553

# sarasas

SOUTH INDIAN RESTAURANT

- தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
- சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
- நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே

*** Outdoor catering * Function hall * Party orders**

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது

## SARASAS CATERING

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

We make 30 different Types of Dosa

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

**Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)**

# அதிகாரவாசிகளால் மறுக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்வு திரும்புமா ?

பயங்கரவாதத தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளிலும், இரகசிய முகாம்களிலும் தடுத்து வைக்கப் பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளின் பெயர் மற்றும் வழக்கு விபரங்களையும், கட்சித்தலைவர்கள் மற்றும் சிவில் தலைவர்கள் உள்ளடங்கிய தேசிய நிறைவேற்று சபைக்கு சமர்ப்பித்து, இந்த நெடுங்காலப் பிரச்சினைக்கு தீர்வு காணும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் படிஜனநாயகமக்கள்முன்னணிதலைவர்மனோ கணேசன் அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கிணங்க, இந்த விபரங்களை திரட்டி தேசிய நிறைவேற்று சபை உறுப்பினர்களின் கவனத்துக்கு சமர்ப்பிக்குமாறு சபையின் செயலாளர் திலக் ரணவிராஜாவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று நம்பப் படுகிறது.

போர்க்குற்ற- இனப்படுகொலை குறித்தான சர்வதேச சுயாதீன விசாரணைக்கு முன்பாக, முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் இராணுவத்திடம் சரணடைந்த போராளிகள்- பொதுமக்கள் பற்றியதான தரவுகள் இப்போது அவசியமாகிறது.

புனர் வாழ்வு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும், சரணடைந்தவர்களின் எண்ணிக்கையும் சமனா? என்கிற விவகாரம், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது பல பிரதேசங்களில் மேற் கொண்ட விசாரணைகளில் கேள்விக்கு உட் படுத்தப்பட்டது.

கணவனை, பிள்ளைகளை இராணுவத்திடம் ஒப்படைத்த பெண்கள் பலர், மகிந்த உருவாக்கிய எல்.எல்.ஆர்.சி (LLRC)யிடம், தமது உறவுகள் எங்கே ? என்று கேட்டுள்ளார்கள்.

தாங்களே சாட்சியென அப்பெண்கள் சொன்ன போது, விபரங்களைப் பதிவு செய்து சனாதிபதியிடம் ஒப்படைப்பது மட்டுமே தங்களுக்கு இடப்பட்ட அரசகட்டளை என்று ஆணைக்குழுவினர் நழுவிச்சென்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

உதாரணத்திற்கு சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். மக்களால் பெரிதும் அறியப்பட்டவர்களான புதுவை இரத்தினதுரை, க.வே.பாலகுமாரன் மற்றும் விடுதலைப் புலிகளின் திருக்கோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் (சசிதரன்) போன்றவர்களின் மனைவியர், தமது கணவன் மார் எங்கே என்று இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் போன்று பலர், தமது உறவுகளை எங்கே தேடுவது என்பதறியாமல் சர்வதேச மன்னிப்புச் சபையிடமும், மனித உரிமைச் சங்கங்களிடமும் முறையிடுகின்றார்கள். எங்கே முறையிட்டாலும், 'தேடல்' என்பது இங்கேதான் நிகழவேண்டும்.

அதற்கு முன்னைய அரசும், குறிப்பாக கோத்தபாய இராஜபக்சவும் இணங்கவில்லை. 'உயிரோடு தடுத்துவைக்கப்பட்டிருப் பவர்களின் பெயர்ப்பட்டியலையாவது தாருங்கள்' என்று கூட்டமைப்பின் தலைவர்களும், தமிழ்தேசிய மக்கள் முன்னணியினரும் பல தடவைகள் அரசிடம் கோரிக்கை விடுத்தும், அதைவிட சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டும், மகிந்த அரசு அசையவில்லை.

மனிதாபிமானப்போர் (?) தொடுத்து தமிழ் மக்களைப் படுகொலை செய்த முன்னைய அரசு, சிங்கள மக்கள் தம்மோடு இருக்கின்றார்கள் என்கிற வாக்குவங்கித் திமிரிலும், ஆசிய பொருண்மிய வல்லரசின் கடாட்சம் எப்போதும் இருக்குமென்கிற நம்பிக்கையிலும், பக்கத்து வீட்டுச் சுவாமிகளின் ஆசீர்வாத அரவணைப் பிலும் மூழ்கியிருந்தது.

ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் பெரும் பான்மையான, சிறுபான்மைத்தேசிய இன மக்கள் மகிந்தாவின் ஆட்சியை நிராகரித்து விட்டார்கள். அத்தோடு போர் வெற்றியை வைத்து, அடித்தட்டு மக்களை தொடர்ந்தும் ஒடுக்க முடியாது என்பதனை ஓரளவிற்கு சிங்கள மக்களும் உணர்த்தியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இப்போது, காணாமல் போகடிக்கப்பட்ட மக்களின் சார்பாக தொடர் போராட்டங்களை ஓய்வின்றி நடாத்திவந்த மனோ கணேசன் அவர்களே, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய இப் பிரச்சினையை தேசிய நிறைவேற்று சபை முன் கொண்டு சென்றுள்ளார் என்பது வரவேற் கத்தக்கது .

சரணடைந்த போராளிகளில் ஒரு பிரிவினர், 10-15 பேர் கொண்ட சிறுசிறு குழுக்களாக பெரிய படைத் தளங்களிலும், சிறிய நகர்புற முகாம் களிலும் தடுத்து வைக்கபட்டிருப்பதாக தகவல் கள் கசிகின்றன.

சரணடைவின் சாட்சிகள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதால், அது குறித்த விசாரணை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே மனித உரிமை ஆர்வலர் களின் கோரிக்கையாக இருக்கிறது.

இவைதவிர 90 ஆயிரம் விதவைகள் வட - கிழக்கில் இருப்பதாக கூறப்படுகிறது. அந்த எண்ணிக்கை குறித்து, மகிந்த அமைச்சர்கள் குறைந்த புள்ளிவிபரங்களை முன்வைத்தார்கள். அது பற்றியதான சரியான தகவல்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதில் கொடுமையான விடயம் என்னவென் றால், கணவன் உயிருடன் இருக்கின்றாரா? அல்லது கொல்லப்பட்டுவிட்டாரா? என்பதுகூடத் தெரியாமல் விதவைகள் போல் வாழும் பெருங் கூட்டம், இன்னமும் இந்தச் சமூகத்தில் இருக்கிறது.

அதுமட்டுமல்லாது, புலனாய்வுப் பிரிவினராலும் காவல் துறையினராலும் தினமும் கண் காணிப்பிற்கு உள்ளாக்கப்படும் போராளிகள், சமூகத்திலிருந்து அன்னியமாகி வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். 'புனர்வாழ்வு அளிக் கப்பட்டவர்கள்' என்று சொல்லப்பட்டவர்களும் சபிக்கப்பட்ட பலியாடுகள் போல் இயல்பு வாழ்வு மறுக்கப்பட்டு மூன்றாம்தரப் பிரசைகள் போல் வாழ்கின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளாக தமிழ் சமூகத்தின் பொதுவான இயங்குநிலை, படையதிகாரத்தினால் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வடமாகாண சபையின் அடிப்படையான தின சரி செயற்பாடுகளைக்கூட , படையதிகாரி ஜி.ஏ. சந்திரசிறி கட்டுப்படுத்திய நிஜவரலாறு நேற்று வரை நடந்தது. அபிவிருத்திக்கூட்டங்களில், மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இது தொடராமல் இருக்க வேண்டுமாயின், மாகாணசபை இயக்கத்தில் ஆளுநரின் அதிகாரம் மேலோங்கக் கூடாது. அவர் மத்திய அரசிற்கு ஒரு செய்தி காவியாக இருப்பதே சிறப்பு.

தமிழ்நாட்டில் இருப்பது போன்று, குடியரசு தினத்தன்று ஆளுநரின் உரை இருந்தாலே போதும்.

இதனைவிட தமிழ்த்தேசிய இனம் ஒரு 'தேசம்' (Nation) என்கிற அங்கீகாரம் அரசியலமைப் பில் உள்வாங்கப்பட்டு, இணைந்த வட - கிழக்கு பிரதேசத்திற்கு சுயாட்சி அதிகாரம் வழங்கப் பட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஆனாலும் 13 வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலேயே தீர்வு முன்மொழியப்படு மென தனது வழமையான இந்திய மந்திரங் களை பிரதமர் ஓதினாலும், அதனைக்கூட ஏற்க மறுக்கும் பெருந்தேசிய இனவாத சக்திகள், 'நாட்டைப்பிரிக்க சூழ்ச்சி செய்கிறார் இரணில்' என்று ஊளையிடத் தொடங்கிவிடும்.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

அதிகாரவாசிகள் ஒன்றைச் சொல்வதும், கடும்போக்குவாதிகள் அதனை எதிர்ப்பதுமான ஒரு தரப்பு விளையாட்டால் தமிழினம் அழிக்கப்படுவதே வரலாறாகிவிட்டது.

இப்போது யாழ்.குடாவில் என்ன நடக்கிறது?

பெரும் வல்லரசுகள் தமது அணுக்கழிவுகளை கடலில் கொட்டி இயற்கை அனர்த்தங்கள் விளைவதற்கு துணைபோவது போன்று, மின் நிலைய எண்ணெய்க் கழிவுகள் யாழ். கிணறுகளை பாழுங்கிணறுகளாக மாற்றும் நிலைகுறித்து விடுக்கப்படும் எச்சரிக்கை கவனிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும். திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் நகர்வா இது? என்கிற கேள்வியும் எழுகின்றது.

'சுன்னாகம் அனல் மின் நிலையத்தின் கழிவு நீர் பிரச்சினையை அனைவரும் அறிந்திருப்பீர்கள், அதன் தீவிரத்தன்மை தற்போது அதிகமாகி வருகின்றது, நிலத்தடியில் கழிவு எண்ணெய் பரவுதல் அதிகரித்துள்ளது. இன்னும் சில நாட்களில் இதன் ஆபத்து பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது' என்கிற எச்சரிக்கை விடப்படுகிறது.

இது குறித்த விழிப்புணர்வுப் போராட்டங்களில் அம்மண்ணில் வாழும் எழுத்தாளர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்கிற அழைப்பு, சமூக வலைத்தளங்களில் பரிமாறப்படுகிறது.

புலம் பெயர் மக்களால், சர்வதேச மக்களின் கவனத்தை ஈர்க்கும்வகையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அறிகின்றோம் இவை தவிர, நிலத்திற்கும் மக்களுக்கும் இடையிலான பிரதான முரண்பாடு குறித்து பேச வேண்டும்.

திட்டமிட்ட குடியேற்றங்கள் ஊடாக அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் நிலஉரிமை மறுக்கப்பட்டது கிழக்கு மாகாண அரசியல் வரலாற்றின் இருண்ட பக்கம். ஆட்சிமாற்றத்திற்கு வாக்களித்த சம்பூர் மக்கள், இன்னமும் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்வது குறித்து, இந்தியா சென்று திரும்பிய மங்கள சமரவீராவிடம் கேட்க வேண்டும்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களிலும், இடைத்தங்கல் முகாம்களிலும், தமிழ் நாட்டிலும் ஏதிலிகளாக வாழும் தமிழ் மக்களின் குடியிருப்பு நிலங்கள் அடாத்தாக அபகரிப்பட்டது அண்மைகால வரலாறு.

இதுவரை நடைமுறையிலுள்ள, மக்களின் உரித்துக் காணிகளை தேசியபாதுகாப்பு என்கிற போர்வையில் எழுந்தமானமாகக் கைப் பற்றும் அதிகாரத்தைக் கைவிடுமா இப்புதிய அரசாங்கம்?.

17 வது திருத்தச் சட்டத்தைவிட, தமிழ்பேசும் மக்களின் நிலம் சார்ந்த அடிப்படை உரிமையை பாதுகாக்க வேண்டியது அவசியம். இடம் பெயர்ந்து சென்றவர்களை, 'அவர்களின் சொந்த இடத்தில் குடியமர்த்துவோம்' என்பதற்கு இப்புதிய அரசு உத்தரவாதம் அளித்தால், தமிழ் நாட்டில் அகதி அந்தஸ்து இல்லாமல் ஏதிலிகளாக வாழும் ஈழமக்களை, அவர்கள் விரும்பினால் அழைத்து வரலாம்.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் நீண்ட கால அவல வாழ்வினை, குறைந்தபட்சம் ஏனைய மக்கள் அனுபவிக்கும் இயல்பு வாழ்வு போல மாற்றுவதற்கு, 11 பேர் கொண்ட தேசியநிறைவேற்று சபை ஈடுபடுமா? என்று கேட்கத் தோன்றுகிறது.

இதில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளான இரா.சம்பந்தன், மனோ கணேசன், மற்றும் ரவூப் ஹக்கீம் போன்றோரின் பங்களிப்பு அவசியமாகிறது. குறிப்பாக, இலங்கை வரலாற்றில் சொந்த வீடற்று நிலமற்று, 150 வருடங்களிற்கு மேலாக அகதிகள் போல் வாழும் மலையக தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை குறித்து தமிழ் தலைமைகள் அக்கறை செலுத்த வேண்டும். தேர்தல் காலத்து வாக்குறுதிகள், வழமை போன்று மலைமுகட்டின் மீது வீசும் காற்றோடு கரைந்து விடக்கூடாது.

அதேவேளை இழந்த காணிகளை மீட்கும் மக்கள் போராட்டங்களும் யாழ் மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. பேச்சும், போராட்டமும் என்கிற சமாந்தரவகைப் பட்ட உத்தியினைக் கையாள்வதே சரியானது போல் தெரிகிறது.

ஐ.நா.தீர்மானத்திற்கு 'இடைக்கால ஓய்வு' வழங்கும் திட்டம் குறித்து பரிசீலிக்க வேண்டுமென அமெரிக்க இராசதந்திரிகள் இப்போதே பேசத் தொடங்கி விட்டார்கள்.

ஆகவே ஆட்சிமாற்றத்தின் மறுபக்கம் குறித்து விவாதிக்காவிட்டால், வட - கிழக்குப் பிரச்சினையை வடக்குப் பிரச்சினை என்று குறுக்கியது போல, இது நல்லாட்சிப் பிரச்சினை என்று ஒட்டுமொத்தமாக பூசி மெழுகிவிடுவார்கள்.


CARLTON LEISURE
Worldwide Travel & Tours

LOW SEASON OFFER

| | | | |
|---|---|---|---|
| TORONTO | fr£421 | DUBAI | fr£245 |
| VANCOUVER | fr£439 | SINGAPORE | fr£457 |
| CALGARY | fr£456 | BANGKOK | fr£438 |
| NEW YORK | fr£455 | KUALA LUMPUR | fr£438 |

Low season fares are from and include taxes, subject to availability & conditions apply.

Hundreds of airlines and thousands of destinations worldwide
Book online@ www.carltonleisure.com

SPECIAL FARES

| | 30KG | | 40KG | | |
|---|---|---|---|---|---|
| | ETIHAD AIRWAYS | Emirates | OMAN AIR | QATAR AIRWAYS | SriLankan Airlines |
| COLOMBO | From £438 INCLUDING TAXES | From £502 INCLUDING TAXES | From £422 INCLUDING TAXES | From £468 INCLUDING TAXES | From £485 INCLUDING TAXES |
| CHENNAI | From £415 INCLUDING TAXES | From £411 INCLUDING TAXES | From £415 INCLUDING TAXES | From £395 INCLUDING TAXES | From £421 INCLUDING TAXES |

Book By 14 Jan

Low season fares are from and include taxes. subject to availability & conditions apply.

இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில் முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்

RAYNERS LANE 020 8426 1266 | ILFORD 020 8554 4200 | EAST HAM 020 8552 6125 | TOOTING 020 8672 5757

# அடுத்த தலைமுறையும், நாமும்...

**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

இப்போது ஒரு சில வாரங்களுக்குள் அடுத் தடுத்து தற்கொலை செய்திகளை கேள்விப் பட்டோம், எல்லோருமே இளவயதினர். எமது வரும்காலச் சந்ததிகள். இவர்கள் எல்லோ ருமேபுலத்தில்வாழ்எமதுஇளம்சந்ததிகள்.ஒரு காலத்தில் தற்கொடைக்கு பேர் போன இனம், இன்று தற்கொலைகளால் மனம் விம்மி வெம்புகிறது. இதற்கு காரணம் (Depression) மனஅழுத்தம், மனச்சோர்வு என்று சொல் கிறார்கள். எமது பிள்ளைகள் இவ்மனவழுத் தத்தால் பாதிக்கப்படும் போது, எம்மில் பல ருக்கு அதை எப்படி கையாளுவது என்று தெரிவ தில்லை. எமது அணுகுமுறை, சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்பது போல இருப்பதை இன்னும் மோசமாக்கி விடும்.

ஏம்மில் அநேகர், பலவிதமான சோதனை களையும், வேதனைகளையும் தாங்கி நாட்டை விட்டு வந்ததாலும், பலவந்தமாக, பலவிதமான நிர்பந்தத்தின் பேரில் பிறந்த நாட்டைவிட்டு நாம் வெளியேற்றப்பட்டதாலும் நாம் எமது கடமை குறிந்து ஒரு குற்ற உணர்வுள்ளவர்களாகவே இருக்கின்றோம். இது ஏதோ ஒரு விதத்தில் எம்மை அந்த இடைவெளியைக் குறைப்பதற் காக முயற்சியிலும், அங்குள்ளவர்களுக்கு உதவுவதற்காக வேலைகளிலும் (இரவு, பகல் என்று பாராது உழைத்தல்), அது இயலாவிடின் அங்கிருந்து இங்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவுவற்காக முயற்சிகளிலும், அங்கு நடக் கும் விடையங்களை வெளிக்கொணரும் முயற் சிகளிலும், அரசியல்களிலும் கூட ஈடுபட வைக் கிறது. இது எம்மை ஒரு குறுகிய காலப்பகுதி யில் உலகளாவிய ரீதியில் தமிழ் கோயில்கள், பாடசாலைகள், சமூக நல நிறுவங்கள், பத்திரி கைகள், வானொலிகள், தொலைக்காட்சி, இணை யத்தளங்கள். புத்தங்கள், தமிழர் விளை யாட்டு கழகங்கள், நிறுவனங்கள், போன்ற வற்றை அமைக்க உதவியதோடு உள்ளூ ராட்சி தலைவர்கள், அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், தொண்டர் நிறுவன தலைவர் கள், இணையதள ஆசிரியர்கள், பத்திரிகையா சிரியர்கள், கதைஞர்கள், பத்தி எழுத்தாளர்கள், கோயில் தலைவர்கள், தொலைக்காட்சி உரிமை யாளர், தலைவர் போன்ற பதவிகளையும், அப் பெயருக்கு பின்னால் கடமைகளையும், பொறுப் புக்களையும் கூடவே உருவாக்கியுள்ளது.

இந்நிலை அனேகமான பெற்றோர்களை மிகவும் இக்கட்டமான நேரமின்மை அல்லது பற்றாக்குறையான சூழலுக்குள் தள்ளிவிடு கின்றது. இதனால் நாம் எமது பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கும் நேரம் மிகக்குறைவாகவே உள்ளது. இதுவும் இவ் மனஅழுத்தத்தை கண்டுபிடிக்க தவறுவதற்கும், புரிந்துணர்வின் மைக்கும் காரணமாகின்றது. இது ஒரு பொது வான வருத்தம், இங்கு பொதுவாக பத்து பேரில் ஏழு பேர் இந்நிலையால் அவதிப்படுகிறார்கள் எனப் புள்ளிவிபரம் சொல்கிறது.

பொதுவாக சாப்பிடுவதில் விரும்பம் இன் மையால் எடைகுறைதல் அல்லது அதிக விருப் பத்தால் எடை கூடுதல், சோர்வு, எரிந்து விழுதல் அல்லது மெதுவான செயல்பாடுகள், கவனக் குறைவு, வாசிக்க வேலை செய்ய முடியாமை, நித்திரை இன்மை, அல்லது அதிகமாக நித்திரை கொள்ளுதல், தன்னம்பிக்கை இன்மை, அல் லது அதீதமான தன்னம்பிக்கை வாழ்வதில் விருப்பமின்மை, சாவதற்கு அஞ்சாமை இதில் குறைந்தது ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட அறிகுறிகள் இருந்தால் நீங்கள் மன அழுத்தத் தால் வருந்துகிறீர்கள் எனச் சொல்கிறார்கள். இது உங்களின் சாதாரணமான கடமைகளை செய்ய விடாது தடுக்கும், அத்தோடு இரண்டு மூன்று கிழமைகளுக்கு மேலாக நீடிக்கும். சில நேரம் வேறு மருந்துகளின் பக்க விளைவாலும், அல்லது தைரோட் சுரப்பி குறைவாக செயல் படுதல் போன்ற வருத்தங்களும் மன அழுத் தத்தை ஏற்படுத்தும்.

மன அழுத்தத்தால் அவதிப்படுபவர்கள் காலையில் இது அதிகமாக உள்ளதாகவும், அத் தோடு இதுதலையிடி, நெஞ்சுநோ, உடம்புநோ போன்ற மற்ற அறிகுறிகளையும் தோற்றுவிக் கிறது. அத்தோடு மிக கடுமையான உடல் வலு விழந்தோரும் மன அழுத்தத்திற்கு உள்ளாகி றார்கள். மிக உச்சமான மனஅழுத்தம், மனப் பிரேமைகளையும் தோற்றுவிக்கிறது. இல்லாத தொன்றை பார்ப்பதாகவும், கேட்பதாகவும், உணர்வதாகவும், மணப்பதாகவும், சுவைப் பதாகவும் உணர்கிறார்கள்.

மனஅழுத்திற்கு இதுதான் காரணம் என்று சொல்லமுடியாது. ஒரே விடயம் ஒருவருக்கு மனஅழுத்தை கொடுக்கும் போது, இன்னெ ருவருக்கு அது சாதாரண நிகழ்வாக இருக்க லாம். சில நிகழ்வுகள் இழப்புகள், தோல்வி கள், வேலைஇழப்பு, வேலைப்பளு போன்றன மனஅழுத்தத்தை தூண்டும் காரணியாகலாம். பெண்கள் ஆண்களை விட அதிகமாக பிள்ளை பிறந்தபின்பு அல்லது இறுதி மாதவிடாய் காலங் களில் இதனால் அவதியுறுகிறார்கள்.

மனஅழுத்ததால் உங்கள் சிறார்கள் பாதிக் கப்படுகிறார்கள் என்று தெரித்தால் அவர்க ளோடு சரிசமமாக எரிந்து விழாதீர்கள். மாடு மாதிரி படுத்திருக்கிறாய், நாங்கள் ஊரில் சூரியன் வரமுதல் எழும்பிவிடுவோம் என்று கதாபிரசங்கம் வைக்காதீர்கள். அவர்களை ஏளனம் செய்வது போல பேசாதீர்கள். அவர் களுக்கு உங்கள் ஆதரவும், அரவணைப்பும் தேவை.

**மனஅழுத்திற்கு இதுதான் காரணம் என்று சொல்லமுடியாது. ஒரே விடயம் ஒருவருக்கு மன அழுத்தை கொடுக்கும் போது, இன்னொருவருக்கு அது சாதாரண நிகழ்வாக இருக்கலாம்.**

அதைவிடுத்து நீங்கள் “கனக்கா யோசிக் கிறீங்கள், நீங்கள் விசர் மாதிரி கதைக்கிறீர்கள், அங்கு ஊரில் இதைவிட பிரச்சனை யோடு எவ்வளவு பிள்ளைகள் இருக்கிறார்கள், மற்ற வர்களை பார்த்தென்றாலும் திருந்துமன், ஏன் நீங்கள் வெளியில போய் மற்றவர்களை போல சந்தோசமாக இருக்கக் கூடாது, உங்களுக்கு நாங்கள் என்ன குறை வைச்சம், ஏன் எங்களுக் குத்தான் இப்பிடி வருகுது” என்று அவர்க ளுக்கு முன் ஒப்பாரி வைத்து உங்களின் தன்னி ரக்கத்தை காட்டாதீர்கள். முக்கியமாக மற்ற வர்களோடு ஒப்பிடாதீர்கள். வேண்டும் என்றால் அவர்களை எவ்வாறு கையாளுவது என்று அறி வுரை எடுங்கள், அவர்களின் மனஅழுத்தத்தின் பாதிப்பின் அளவை மதிப்பிடுங்கள், சரியான உதவியை நாடப்பாருங்கள், அல்லது கொஞ் சம் அமைதியாக, புரிந்துணர்வுடன், பரிவாக பிரச் சனையை அவர்களின் பக்கத்தில் இருந்தும் பாருங்கள். நிறைய இது பற்றி வாசியுங்கள்.

www.depressionuk.org
www.depressionalliance.org
www.beatingtheblues.co.uk


MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

* Packers * Movers * Shippers

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

We Offer the Best Services than all the Other in the trade!

உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.



Special rates for Containers and Machinery

4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon

T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30

FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com

*Condition Apply - No hidden charges - No bogus promotions



New and used shop shelving
For all your shop shelving and refrigeration needs please call or visit our show room for a free quote and see how we can help

Gondola shelving
Wall shelving
Magazine shelving
Veg displays
Shopping baskets

Shelving4Shops.co.uk
01455 221512

New and refurbished refrigeration

Cold freeze specialise in the installation of new and refurbished refrigeration

Bottle fridges
Dairy cabinets
Multideck chillers

coldfreeze refrigeration .co.uk
with lots to choose from our Hinckley site or visit our web site
Unit A1, Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3JG

# வியூக முக்கியத்துவம் மிக்க தமிழ் வாக்குகள்

நிலாந்தன்

மஹிந்த ராஜபக்ச இவ்வளவு அமைதியாகக் கவிழ்க்கப்படுவார் என்று யாருமே எதிர்பார்த் திருக்கவில்லை அவரும் கூடத்தான். அவர் இவ் வளவு அமைதியாக ஆட்சிப்பொறுப்பை மைத் திரியிடம் கையளிப்பார் என்றும் அநேகமான வர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. தேர்தலில் அவர் தோற்றால் ஆட்சிப்பொறுப்பை கைய ளிக்கமறுத்துபடைத்தரப்பின்உதவியைப்பெறக் கூடும் என்றவாறான ஊகங்கள் ஏற்கனவேமேற் கத்தேய தூதரகங்கள் மத்தியில் காணப் பட்டன. சக்திமிக்க நாடொன்றின் தூதுவர் இது தொடர்பாக கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒரு வரோடு உரையாடியிருக்கிறார்.

ஆனாலும், கத்தியின்றி இரத்தமின்றி ஆட்சி மாற்றம் நிகழ்ந்துவிட்டது. அது மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீதான பிடியை அவர் அமைதியாகக் கைவிட்டதும் இதற்குள் அடங்கும்.

அரபு வசந்தத்தைப் போன்று ஒரு இரத்தம் சிந்தும் நடவடிக்கை மூலமே தன்னைக் கவிழ்க்க முடியும் என்று மஹிந்த நம்பிக் கொண்டிருந்தார். கடாபியைப்போலவும் சதாம் ஹுசைனைப் போலவும் தன்னைக் கவிழ்க்க முடியாது என்று அவர் சிங்கள மக்களுக்குக் கூறியுமிருக்கிறார். வெற்றிவாதத்தின் எதிரி களை அவர் வெற்றிவாதத்திற்கு வெளியில்தான் தேடினார். ஆனால், வெற்றிவாதத்தின் எதிரிகள் வெற்றிவாதத்திற்குள் இருந்தே கிளம்ப முடி யும் என்பதை அவர் குறைத்து மதிப்பிட்டு விட்டார். சரத் பொன்சேகாவை வெற்றிகரமாக முறியடித்த பின் தனது வெற்றியில் பங்கு கேட்க தனது பங்காளிகளின் மத்தியில் இருந்து எவரும் எழமாட்டார்கள் என்றும் அவர் நம்பியிருந்திருக் கக் கூடும். சிறிலங்காவை நெருக்கமாக அவதா னிக்கும் அனைத்துலக அவதானிகளில் பல ரும், உள்நாட்டில் அரசியல் ஆய்வாளர்கள்பலரும் மஹிந்த ராஜபக்சவை இப்படி அமைதியாகக் கவிழ்க்க முடியும் என்று கருதியிருக்கவில்லை.

ஏனெனில், ராஜபக்சவின் அரசு எனப்படுவது அதற்கு முன்பிருந்த அரசுகள் பலவற்றில் இருந்தும் துலக்கமான விதங்களில் வேறுபட்ட ஒன்றாகக் காணப்பட்டது.

முதலாவது வேறுபாடு - அது சிங்கள மக்க ளால் வெல்ல முடியாத எதிரி என்று கருதப்பட்ட புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்தமை.

இரண்டாவது வேறுபாடு - அந்த வெற்றிக்காக அவர் கொடுக்கத் தயாராக இருந்த விலை.

மூன்றாவது - அந்த வெற்றியை முதலீடாக வைத்து வெற்றிவாதத்திற்கு தலைமை தாங்கும் ஒரு அரசியலை முன்னெடுத்தமை.

நான்காவது - அந்த வெற்றியை அடை வதற்காக அவர் எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டார் என்பதும், அந்த வழிமுறை களே வெற்றிக்குப் பின் அவரைச் சுற்றி வளைத் தன என்பதும்.

ஐந்தாவது - போர்க்குற்றம் தொடர்பில் அனைத் துலக அளவில் விமர்சனங்களுக்குரிய ஒரு தலைவராக அவர் காணப்பட்டார் என்பதும்.

ஆறாவது - வெற்றியை அவர், அந்த வெற்றி யின் பங்காளிகளாக இருந்த தளபதியோடும் தனது கட்சியின் மூத்த உறுப்பினர்களோடும் பங்கிடத் தயாராக இருக்கவில்லை என்பதும் அந்த வெற்றியை பெருமளவுக்கு குடும்பச் சொத்தாகப் பேண முற்பட்டமை என்பதும்.

மேற்கண்ட காரணங்களின் விளைவாக ராஜபக்சவின் அரசு கடந்த பல தசாப்தங்களில் இச்சிறுதீவை ஆண்ட எல்லா அரசுகளிடம் இருந்தும் துலக்கமான விதங்களில் வேறு பட்டுக் காணப்பட்டது. இவ்வாறான அதன் அசா தாரணத் தன்மை காரணமாக அது எளிதில் கவிழ்க்கப்பட முடியாத ஒன்றாகவும் தோன்றி யது. பெரும்பாலான அவதானிகள் இந்த அரசை பாரம்பரியமான வழிமுறைகளின் ஊடாகத் தோற்கடிப்பது இலகுவானதல்ல என்றேகருதிக் கொண்டிருந்தார்கள். ஆனால், எல்லாரும் மஹிந்தவின் எதிரிகளை அவருடைய அரசிற்கு வெளியே தேடிக்கொண்டிருக்க உலகின் சக்தி மிக்க நாடுகளோ அவருடைய கோட்டைக்குள் இருந்தே எதிரிகளை உற்பத்தி செய்துவிட்டார் கள். வெற்றிவாதம் எப்பொழுதும் உட்சுருங்கும் தன்மை கொண்டது. உலகம் முழுவதும் அது அப்படித்தான் இருந்திருக்கிறது. இங்கேயும் அது உட்சுருங்கி உட்சுருங்கி ஒரு கட்டத்தில் இறுகி வெடிப்புக் கண்டது.

ராஜபக்சவைக் கவிழ்க்கப் போகிறோம் என்பதை மேற்கத்தேய இராஜதந்திரிகளும் பிரதானிகளும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுக ளுக்கு முன்பிருந்தே கூறத் தொடங்கிவிட்டார் கள். இது தொடர்பாக அவர்கள் தமிழ் அரசியல் பிரமுகர்களோடும், செயற்பாட்டாளர்களோ டும் நேரடியாகவே கதைத்தும் இருக்கிறார்கள். ராஜபக்வுக்கும் இது நன்கு தெரியும். எல் லாருடைய முற்கற்பிதங்களிலும் ஆழப்பதிந் திருந்தது ஓர் அரபு வசந்தமே. ஆனால், அரபு நாடுகளைப் போலன்றி இங்கே கத்தியின்றி இரத்தமின்றி கனகச்சிதமாக ஓர் ஆட்சிமாற்றம் செய்யப்பட்டுவிட்டது. திரை மறைவில் நடந் திருக்கக் கூடியவற்றைக் கருதிக் கூறின் இதை ஒரு வழமையான ஆட்சி மாற்றம் என்று கூற லாமா? இத்தகைய பொருள்பட சற்றுக் கலைத் துவமாகக் கூறின், இலங்கைத் தீவில் இப் பொழுது நடந்து கொண்டிருப்பதை சிறிலங்கா வின் வசந்தம் எனலாமா?

தான் ஆட்சியில் இருந்த காலம் வரை மஹிந்த பெருமையாகக் கூறிக்கொண்ட ஆசியாவின் அதிசயம் எனப்படுவது அவர் பதவியில் இருந்து அகற்றப்பட்ட விதம்தானா என்று கேட்கத் தோன்றுகிறது. இலங்கைத்தீவில் படைத்தரப் பானது அரசியலைத் தீர்மானிக்கும் ஒரு சக்தி யாக எப்பொழுதோ எழுச்சிபெற்றுவிட்டது. எனி னும், ஆட்சி மாற்றங்களின் போது படைத்தரப் பின் தலையீடு என்பது அநேகமாகத் தவிர்க்கப் பட்டே வந்திருக்கின்றது. இராணுவ சதிப்புரட்சி களுக்கான வாய்ப்புகள் குறித்து ஊகங்கள் நில வியகால கட்டங்களிலுங்கூட ஆட்சிக் கைமாற்றங் கள் சூமுகமாகவேநடந்துவந்துள்ளன. அனைத் துலக அரங்கில் இச்சிறுதீவுக்குப் பெருமை சேர்க் கும் பாரம்பரியங்களில் இதுவும் ஒன்று. இம் முறையும் அவ்வாறு பலவிதமான ஊகங்கள், அச்சங்கள், முற்கற்பிதங்கள், ஆரூடங்கள் என் பவற்றின் மத்தியிலும் ராஜபக்ச மிகவும் அமை தியாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்.

அவரை அவ்வாறு கவிழ்த்ததில் தமிழ் வாக் காளர்களுக்கு கணிசமான பங்குண்டு. இதை இன்னொரு விதமாகச் சொன்னால் அரபு வசந் தங்களைப்போல இரத்தம் சிந்தாமல்மிக அமை தியாக சிறிலங்காவின் வசந்தம் முன்னெடுக் கப்பட்டதில் தமிழ் வாக்காளர்களுக்குப் பெரிய பங்குண்டு. இதை அனைத்துலகப் பரிமாணத்தில் வைத்துக் கூறின் மேற்கு நாடுகளின் வியூகம் ஒன்றை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தமிழ் வாக்காளர்கள் பெருமள விற்கு உதவியுள்ளார் கள் எனலாம். தமிழ் வாக்குகள் இல்லை என்றால் சிறிலங்காவின் வசந்தம் நடந்தேயிருக்காது.

எனவே, மேற்கு நாடுகளின் உலகளாவிய வியூகம் ஒன்றின் கருவிகளாக தமிழ் வாக்கா ளர்கள் பங்காற்றியிருக்கிறார்கள். ராஜபக்சவை அகற்றுவது என்று தீர்மானித்துத்தான் பெரும் பாலான தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால், தங்களுடைய வாக்குகளுக்கு இப்படி யொரு அனைத்துலக வியூக முக்கியத்துவம் உண்டு என்பது அவர்களுக்கே தெரியுமா? அல்லது அவர்களை வாக்களிக்கக் கேட்ட அவர் களுடைய தலைவர்களுக்குத் தெரியுமா?

2005இல் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விட்டதன் மூலம் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளின் வியூகத்தைக் குழப்பினார் கள். மறுவளமாக சீனாவின் முத்துமாலை வியூ கத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ வழிகளை இலகுவாக்கிக் கொடுத்தார்கள். இந்த முறை வாக்களித்ததன் மூலம் தமிழ் மக்கள் மேற்கு நாடுகளின் வியூகத்திற்கு வழிகளை இலகுவாக் கிக் கொடுத்திருக்கிறார்கள். அதேசமயம், சீனா வின் பிராந்திய வியூகத்தைக் குழப்பியுமிருக் கிறார்கள்.

ஆட்சி மாற்றமானது இலங்கைத் தீவில் இருந்து சீனாவின் பிரசன்னத்தை உடனடியாக முழுமையாக அகற்றிவிடாது. அரசுக்கும் அர சுக்கும் இடையிலான கட்டமைக்கப்பட்ட உறவு கள் தொடர்ந்தும் நீடித்திருக்கும். மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் மேற்கு நாடுகளுக்கும் சிறி லங்காவிற்கும் இடையிலான கட்டமைக்கப் பட்ட உறவுகள் தொடர்ச்சியறாது நீடித்ததைப் போல. அதோடு, திறந்த சந்தைப் பொருளா தாரக் கட்டமைப்புக்குள் உலகம் ஏறக்குறைய ஓர் அலகாகிவிட்டது. இப்பூகோளச் சந்தையில் சீனாவுக்கும் சிறிலங்காவிற்கும் இடையிலான வர்த்தக உறவுகள் தொடர்ந்துமிருக்கும். ஆனால், மஹிந்தவின் காலத்தில் இருந்தது போல ஒரு அரசியல் உரித்துடமை அல்லது அரசியல் அந் தஸ்து இனி இச் சிறுதீவில் சீனாவிற்கு இருக் குமா என்பது சந்தேகமே. இத்தகைய பொருள் படக் கூறின், முத்துமாலை வியூகமும் கடல் வழிப் பட்டுப்பாதையும் புதிய உபாயங்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்.

அதாவது, தமிழ் வாக்காளர்கள் சீனாவின் பிராந்திய இலக்குகளை நெருக்கடிக்கு உள் ளாக்கியிருக்கிறார்கள். இவ்வாறுதான் 1983இல் இருந்து 1987 வரையிலும் அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான பூகோள யுத்தம் ஒன்றில் தமிழ் மக்களும் பங்காளிக ளாய் இருந்தார்கள். அமெரிக்கச் சார்பு ஜெய வர்த்தன அரசை நெருக்கடிக்கு உள்ளாக்குவ தற்காக சோவியத் சார்பு இந்தியா ஈழப்போரை ஊக்குவித்தது.

இவ்வாறாக கடந்த சில தசாப்தங்களாக பேரரசுகளும் பிராந்தியப் பேரரசுகளும் தமிழ் மக்களைக் கருவிகளாகக் கையாண்டு வந்துள் ளன. பேரரசுகளுக்கு நிழல் யுத்தம், தமிழ் மக்க ளுக்கோ நிஜ யுத்தம். பேரரசுகளுடைய வியூகங் களில் சிக்கி தமிழ் மக்களே பலியாடுகளானார் கள். நடந்து முடிந்த தேர்தலும் அதைத்தான் நிரூபித்திருக்கின்றது.

பொதுவாக அரசற்ற தரப்புக்களின் பேரம் பேசும் சக்தி பற்றிய உரையாடல்களின் போது அரசற்றமக்கள்திரள்களுக்கிருக்கக்கூடியசந்தை கவர்ச்சிமிக்க இயற்கை வளங்கள் மற்றும் புவி சார் அரசியல் அமைவிடம் காரணமாக ஏற்படும் கேந்திர முக்கியத்துவங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
THE LAW SOCIETY ACCREDITED Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk
Emergency
079 4764 1876
079 1225 3418

# பாரிஸ் தாக்குதல்: அல் கெய்தா - ஐ.எஸ் இடையிலான மோதலா ஒற்றுமையா ?



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

பாரிஸ் தாக்குதலுக்குப் பின்னர் அல் கெய்தா அமைப்பும் ஐ. எஸ் அமைப்பும் ஒன்று பட்டு விட்டனவா அல்லது மேலும் தீவிரமாக மோதிக் கொள்கின்றனவா என்ற கேள்வி பெரிதாக அடிபடத் தொடங்கி விட்டது

2014-ம் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிராகக் குண்டு வீசத் தொடங்கியதில் இருந்து ஐ எஸ் தனது ஆதிக்க நிலப்பரப்பை இரட்டிப்பாக்கியுள்ளது. சிரியாவின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி தற்போது ஐ. எஸ் இன் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. சிரிய அதிபர் பஷார் அல் அசாத்திற்கு எதிராகப் போராடும் அமெரிக்க சார்பு அமைப்புக்கள் ஐ எஸ் அமைப்பிற்கு ஈடு கொடுக்க முடியாமல் தடுமாறுகின்றன. இதனால் அமெரிக்காவின் பாதுகாப்புத் துறையான பெண்டகன் 400 படைத் துறை நிபுணர்களை சிரியப் போர் முனைக்கு அனுப்பி 5400 போராளிகளைப் பயிற்றுவிப் பதாக முடிவு செய்துள்ளது.

### ◆ பாரிஸ் தாக்குதல்கள்

பிரான்ஸில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் செய்த தாக்குதல் அவர்கள் தமது தாக்குதல் களுக்கு ஒரு புதிய வடிவம் கொடுத்துள்ளனர் எனச் சுட்டிக் காட்டுகின்றது. தற்கொடைத் தாக் குதல் நேரக் குண்டுகள் போன்றவை மூலம் தாக்குதல் ஆகியவை மட்டுமே இதுவரை நடந்த பல தாக்குதல்களின் வடிவங்களாக இருந்தது. துப்பாக்கி ஏந்தி மக்கள் அதிக நடமாட்டம் உள்ள நகரங்களில் பொது மக்கள் மீது தாக்குதல் நடாத்துவதும் அவர்களைப் பணயக் கைதிக ளாக்கிக் கொண்டு தப்பிச் செல்வதும் ஒரு புதிய தீவிரவாதத் தாக்குதல் முறைமையாகக் கருதப்படுகின்றது. அண்மையில் தலிபானும் குண்டுத்தாக்குதல்களில் இருந்து விலகிமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் துப் பாக்கித் தாக்குதல்களை நடத்துவதை அதிகரித் துள்ளது. Urban warfae எனப்படும் நகர்சார் போர் முறை உத்திகளை கையாண்டு தீவிரவாதிகள் தமது எதிரிகள் மீது தாக்குதல் நடாத்துவது முதன் முறையாக இந்தியாவின் மும்பாய் நகரில் 2008-ம் ஆண்டு நடாத்தப் பட்டது. இத்தாக்குத லின் வெற்றியை உணர்ந்த அல் கெய்தா அமைப் பினர் அத்தாக்குதல் பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொண்டனர். இசுலாமிய மதத்தை இழிவு படுத்தும் வகையில் மேற்கு நாடுகளின் ஊடகங்களில் ஏதாவது பிரசுரமானால் அதற்கு எதிராக கடுமையான தீவிரவாதத் தாக்குதல் நடக்கும் என்பது நிச்சயமாகத் தெரிந்திருந்தும் 'ஷார்லி எப்டோ' சஞ்சிகையில் ஒரு கருத்துப் படம் வெளியிடப்பட்டது. ஆனால் அந்த ஊடகப் பணிமனைக்குப் போதிய பாதுகாப்புக் கொடுக் கப்படவில்லை. அதுவும் போதாது என்று அடுத்த பிரசுரத்தில் மீண்டும் அட்டைப்படமாக இசுலாமியர்களின் கடவுளின் உருவம் பிரசுரிக் கப்பட்டது. அதை வாங்குவதற்கு அதிகாலை யில் இருந்தே மக்கள் வரிசையாகக் காத்திருந் தனர். இப்படிப் பட்ட செய்கைகள் மூலம் தமது நாடுகளில் உள்ள தீவிரவாதப் போக்குடைய இசுலாமியர்களை இனம் காண்பதற்கு இப்படித் தூண்டில் போடப்படுகின்றனவா?

### ◆ ஐ. எஸ் அல் கெய்தா முறுகலும் மோதலும்

உலகெங்கும் இசுலாமிய அரசுகள் உருவாக் கப்பட வேண்டும், உலகெங்கும் ஷரியா சட்டப் படி ஆளப்பட வேண்டும் என்பது அல் கெய்தா அமைப்பினதும் ஐ. எஸ் அமைப்பினதும் கொள் கையாகும். ஐ.எஸ் ஈராக்கியரான அபூபக்கர் அல் பக்தாடி தலைமையிலான ஒரு சுனி முசுலிம் அமைப்பாகும். ஐ.எஸ் அல் கெய்தாவின் ஒரு இணை இயக்கமாக இருந்தது. ஈராக்கில் செயற் பட்டுக்கொண்டிருந்த ஐஎஸ் அமைப்பு தனது நடவடிக்கையை சிரியாவிற்கும் விரிவு படுத்தி யதை அல் கெய்தா விரும்பவில்லை. சிரியாவில் அல் கெய்தாவின் கிளை அமைப்பான அல் நஸ்ரா செயற்பட்டுக் கொண்டிருந்தது. அபூ பக்கர் அல் பக்தாடி தலைமையிலான ஐ.எஸ். ஐஎஸ் அமைப்பிற்கும் அல் நஸ்ரா அமைப்பிற் கும் சிரியாவில் மோதல் உருவானது. பின்னர் ஐ.எஸ் சிரியாவில் செய்த சகோதரக் கொலை களால் அல் கெய்தா அதிருப்தி அடைந்து தனக் கும் ஐ.எஸ் இற்கும் தொடர்பு இப்போது இல்லை என 2014-ம் ஆண்டு ஜனவரியில் அறிவித்தது. இதைத் தொடர்ந்து இவர்களிடையில் நிதி திரட்டல், ஆட் சேர்ப்பு, உலகப் புகழ் ஆகியவற் றிற்குப் போட்டி உருவானது. ஐ எஸ் அமைப்பு அய்மன் அல் ஜவஹ்ரி தலைமையில் இயங்கும் அல் கெய்தா அமைப்பு பின்லாடனின் பாதை யில் இருந்து விலகி விட்டது எனக் குற்றம் சாட்டு கின்றது. இரண்டு அமைப்புக்களும் முகாமை ரீதியிலும் வேறுபடுகின்றன. அல் கெய்தா அமைப்பு ஒரு தலைமைக்குக் கீழ் இருந்து செயற் படும் அமைப்பு. ஐ எஸ் அமைப்பு ஒரு குழு வின் கீழ் செயற்படுகின்றது. அல் கெய்தா தனது ஆட்சேர்ப்பில் கடுமையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றது. சிறந்த விசுவாசிகளாகக் கருதப்படுபவர்கள் மட்டுமே இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். ஐ. எஸ் அமைப்பு கண்ட படி ஆட்களை தனது ஆளணிக்குச் சேர்கின்றது. அல் கெய்தா 9/11 போன்ற பேரழிவு விளை விக்கும் தாக்குதல்களில் நம்பிக்கை கொண் டுள்ளது. ஐ எஸ் அமைப்பு கொடூரமாக ஆட்க ளைக் கொலை செய்யும் காணொளிகள் மூலம் தனது பரப்புரைகளைச் செய்கின்றது. ஐ. எஸ் அமைப்பின் ஈராக்கில் உள்ள கிரிஸ்த்துவர்க ளையும் யதீஷியர்களையும் முற்றாக ஒழிக்கும் செயற்பாட்டை அல் கெய்தா விரும்பவில்லை.

### ◆ தலை இருக்க ஆடும் வால்கள்

பின் லாடனின் மறைவின் பின் எகிப்த்திய அரசு சினாய் பாலைவனத்திலும், எகிப்தும் ஐக் கிய அரபு அமீரகமும் லிபியாவிலும் அல் கெய் தா அமைப்பினர் மீது இரகசியமாகத் தாக்குதல் நடாத்தின. யேமனில் செயற்படும் அல் கெய்தா வின் கிளை அமைப்பான அரபு வளைகுடாவிற் கான அல் கெய்தா தனது நடவடிக்கைகளை ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகளுக்கு விரிவு படுத்தியுள்ளது. அல் கெய்தாவின் இன்னும் ஒரு கிளை அமைப்பான அல் ஷபாப் சோமாலியா, உகாண்டா, கென்யா ஆகிய நாடுகளில் தன் நடவடிக்கைகளை விரிவு படுத்தியுள்ளது. அல் கெய்தாவின் துணை அமைப்பான பொக்கோ ஹரம் நைஜீரியா, கமரூன், நிகர் ஆகிய நாடு களில் தனது தாக்குதல்களைச் செய்து கொண் டிருக்கின்றது. மற்ற அமைப்புக்கள் உலகெங் கும் இருந்து தமக்கு ஆட்சேர்ப்புச் செய்து தமது கட்டுப்பாட்டுப் பிராந்தியத்தை விரிவு படுத்திக் கொண்டிருக்க அல் கெய்தா தனது போராளி களை வேறு வேறு நாடுகளில் தாக்குதல் செய்யப் பண்ணுகின்றது. அல் கெய்தா தனது நிதியை நன் கொடை மூலம் பெற்றுக் கொள் கின்றது. ஐ. எஸ் அமைப்பு தனது நிதியை நன் கொடைகளில் இருந்து மட்டுமல்ல பல வித சட்ட விரோத நடவடிக்கைகளில் இருந்தும் திரட்டுகின்றது. உலகெங்கும் நடக்கும் புனிதப் போர்களிற்கு யார் தலைமை தாங்குவது என்ப தில் இரு அமைப்புக்களும்முரண்படுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அல் கெய்தாவிலும் பார்க்க ஐ. எஸ் அமைப்பிற்கு இசுலாமிய இளை ஞர்கள் மத்தியில் அதிக வரவேற்பு உண்டு. ஐ. எஸ் அமைப்பு அல் கெய்தாவின் கிளை அமைப் பான அரபுக் குடாநாட்டிற்கான அல் கெய்தாவை தன்னுடன் இணைக்கும் முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டிருந்தது.

### ◆ மீளிணைப்பு

ஆனால் பாரிஸில் ஷார்லி எப்தோ சஞ்சிகைப் பணிமனையில் நடந்த தாக்குதல் அல் கெய்தா மீளவும் வீறு கொண்டு எழுகின்றது என்பதைக் காட்டுகின்றது. சஞ்சிகைப் பணிமனையில் நடந்த தாக்குதலை அல் கெய்தாவும் யூத உணவு விற் பனை நிலையத்தில் நடந்த தாக்குதலை ஐ. எஸ் அமைப்பும் செய்திருக்கலாம் என நம்பப்படு கின்றது. இரண்டு அமைப்புக்களும் இணைந்து இத்தாக்குதல்களைச் செய்திருக்கலாம் என வும் நம்பப்படுகின்றது. பெல்ஜியத்தில் செய்த அதிரடிக் கைதுகளும் பாரிஸ்த்தாக்குதல்களைத் தொடர்ந்து திரட்டப்பட்ட உளவுத் தகவல்களும் இசுலாமியத் தீவிரவாத அமைப்புக்களிடை நடந்த தொடர்பாடல்களும் அல் கெய்தாவிற்கும் ஐ. எஸ் அமைப்பிற்கும் இடையில் ஒத்துழைப்பும் ஒற்றுமையும் மீள உருவாகிவிட்டது எனச் சுட்டிக் காட்டுகின்றன. சிரியாவில் தீவிரவாதக் குழுக்களிடை நடக்கும் செயற்பாடுகளும் இரு அமைப்புக்களிடை ஒற்றுமை உருவாகிவிட்டது எனக் காட்டுகின்றது. அரபுக் குடாநாட்டிற்கான அல் கெய்தாக் குழுவைச் சேர்ந்த முன்னணிப் போராளிகள் அல் கெய்தாத் தலைமை அமைப் பிற்கும் ஐ. எஸ் அமைப்பிற்கும் இடையில் ஒற் றுமை ஏற்படுத்த முயற்சி சிரியாவில் வெற்றி யளித்துள்ளது. கொரசோன் அமைப்பின் முன்னணிப் போராளிகளுக்கும் அரபுக் குடா விற்கான அல் கெய்தாவின் தலைவர் நசார் அல் வஹய்ஷிக்கும் ( Nasser al-Wuhayshi) இடையில் நல்ல ஒற்றுமையும் புரிந்துணர்வும் உண்டு. 2014 நவம்பர் மாதம் இருதரப்பினருக்கும் இடையி லான கூட்டம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந் தது. லெபனானிற்கும் சிரியாவிற்கும் இடையில் உள்ள குவாலமௌன் (Qualamoun) மலைப் பிராந்தியத்தில் அல் கெய்தாவின் கிளை அமைப் புக்களான அல் நஸ்ரா, கொரோசன் போன்ற வையும் ஐ. எஸ் அமைப்பும் இணைந்து செயற் படத் தொடங்கி விட்டன. இருந்தும் ஐ. எஸ் அமைப்புடன் இணைந்து செயற்பட அல் கெய்தா அமைப்பு தனது செயற்பாடுகளைத் தீவிர மாக்க வேண்டி இருந்தது. இந்த தீவிரமாக் கும் முயற்சியில் அல் நஸ்ராவின் மிதவாதத் தலைவர்கள் பலர் அதிருப்தி கொண்டிருப்பதா கத் தெரிகின்றது.

பாரிஸில் ஷார்லி இப்தோ சஞ்சிகைப் பணி மனைமீதுதாக்குதல்நடாத்தியசகோதரர்களின் மனைவிமார்களிற்கிடையில் நடந்த 500 தொலை பேசி உரையாடல் பதிவுகளை உளவுத் துறை யினர் பரிசீலனை செய்த போது அவர்கள் தமது கணவன்மார்களின் தீவிரவாத நடவடிக்கைகள் பற்றிய கதைகள் எதுவும் இருந்ததில்லை.

அல் கெய்தாவும் ஐ. எஸ் அமைப்பும் ஒன்று பட்டு விட்டதை வேறு சிலர் ஏற்க மறுக்கின்றனர். ஐ. எஸ் அமைப்பின் இசுலாமிய அரசை அரபுக் குடாநாட்டிற்கான அல் கெய்தாவின் அறிஞர்கள் ஏற்க மறுத்திருந்தனர். 2014-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐ. எஸ்ஸின் பத்திரிகையான தபீக்கில் அல் கெய்தா அமைப்பைத் தாக்கி இரு கட்டுரைகள் வெளிவந்தன.

அல் கெய்தாவிற்கும் ஐ.எஸ் அமைப்பிற்கும் இடையில் உள்ள போட்டி நிலை அவர்களுக்கி டையில் மோதலைத் தீவிரப்படுத்துமா அல்லது இரண்டு அமைப்புக்களும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு மேற்கத்திய நாடுக ளுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற் கொள்ளுமா?

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
"பச்சபுல்மோட்டைக்குள்ளதான் காணாமல் போனவர். ஆனந்தபுர பொக்ஸ் அடிக்குள்ள அவர் மாட்டிட்டார். ஆள் சரியான பயந்த சுபாவம். சின்ன வெடிச்சத்தம் கேட்டாலே பங்கருக்குள்ள ஓடிடுவார். அந்த ஷெல்லடிச் சத்தத்துக்குள்ள தடுமாறிப் போனார். எங்க போறதெண்டு தெரியேல்ல. கலியாணம் செய்த மற்ற மகள் ஆக்களோட ஆமிட்ட போகப் போறம் எண்டு வெளிக்கிட்டிட்டார். நான் பிள்ளையளோட மாத்தளன்ல இருக்கேக்கத்தான், பொக்ஸ் அடிக்குள்ள சிக்கிட்டினம். அதுக்குள்ள நிண்டு, இந்த ஷெல் எல்லாம் எங்க விழுகுது எண்டு கேட்டாராம். யாரோ உங்கட வீட்டுக்காரர் இருக்கிற பக்கம்தான் விழுகுது எண்டு சொல்லியிருக்கினம். உடன ஆமிக்காரர் அவர ட்ராக்கட்டர்ல ஏத்திக்கொண்டுபோயிட்டாங்களாம். அவரின்ட ஐ.சி, மோதிரம், சேட் எல்லாத்தையும் கழட்டி மகளிட்ட ஆமிக்காரர் குடுத்திருக்கிறாங்கள்."

அவரைச் சூழ அமர்ந்திருக்கும் எல்லா பிள்ளைகளும் மிகுந்த அமைதியாக இருந்து அம்மா சொல்லும் கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். யாருடைய கண்ணிலும் உயிரில்லை. செயலில் சலசலப்பில்லை. இறுதிப் போர்க்கதையை நினைவுபடுத்தும்போது ஏற்படும் மனஉறைவை அப்படியேபிரதிபலித்த படி இருக்கின்றனர்.

"அண்டையிலயிருந்து நாங்கள் தேடாத இடமில்லை. புல்மோட்டைக்குப் போனம். கந்தளாய் போனம். மட்டக்களப்பு போனம். கொழும்பில இருக்கிற ஜெயில் எல்லாம் போய் பாத்தம் எங்கயுமே அப்பா இல்ல. ஆனா காணாமல் போனவர் பட்டியலில அப்பாவின்ர பேரும் வந்திருக்கு. செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணைக்குழு, விசாரணைக்குழு எல்லாத்திட்டயும் குடுத்தம். எல்லாரும் தேடிக் கொண்டிருக்கிறம், இருந்தா சொல்லுவம் எண்டுதான் சொன்னவ" மன உறைவை உடைத்து அனைவரையும் நடப்புலகத்துக்கு இழுத்துவந்தாள் மாலினி.

"ஓம் தம்பி, தேடித் தேடிக் களைச்சுப் போயிட்டம். எந்த முடிவும் இல்லாமல் அலைஞ்சு களைச் சுப் போய் இருந்திட்டம். இந்த ஒரு மகனின்ர உழைப்பில பிள்ளையள், சாப்பாடு, அவரையும் அலைஞ்சு தேடுறதெண்டால்? வார்த்தையை முந்திக்கொண்டு கண்ணீர் விழுகிறது. அம்மாவின் அழுகை பிள்ளைகளின் கண்ணிலும் பிரதிபலிக்கிறது. அழுவதற்கான அமைதி. எந்தக் கேள்வியைக் கேட்பது ? என்ன ஆறுதல் சொல்வது ? சிந்திப்பில் மூழ்கினேன். அழுகை வெளியை முடிவுக்குக் கொண்டு வர மூத்த ஆண்மகன் கதையைத் தொடங்குகிறார்.

"அண்டைக்கு தேர்தல் பிரச்சாரம் நடந்தது. அதுக்கு இந்த இடங்களிலெல்லாம் மஹிந்த வின்ர ஆக்கள் நோட்டீஸ் குடுத்தவங்கள். நான் வாங்கேல்ல. விட்டிட்டு வந்திட்டன். சித்தப்பா (காணாமல் போனவரின் தம்பி) றோட்டால வரேக்க அந்த நோட்டீஸ் ஒண்டில அப்பாவின்ர படம் இருக்கிறத கண்டிட்டார். அங்க அங்க கிழிஞ்சு கிடந்ததெல்லாம் எடுத்து ஒண்டாக்கி பாத்த நோட்டீஸ்ல எங்கட அப்பா தோட்டத்துக்குத் தண்ணி பிடிச்சிக் கொண்டிருக்கிறார். பிறகு இங்க எல்லா இடமும் திரிஞ்சி வேற கொஞ்ச நோட்டீஸ்களையும் வாங்கி எல்லாத்தையும் பார்த்தா அது அப்பாவேதான். எங்கயே? பண்ணையில அப்பாவ வச்சி வேலை வாங்குகினம். வேலை செய்யேக்க சேட் போடமாட்டார். இதிலயும் அப்பிடியேதான் இருக்கிறார். பாருங்கோ தே சுருள் தலைமுடி".....

மகன் சொல்லி முடிக்க முதல் அம்மா அந்த நோட்டீஸ், அதிலிருப்பதுபோலவே தலையை சரித்தபடி அவர் வீட்டிலிருந்த காலத்தில் இருந்த எல்லா புகைப்படங்களையும் எடுத்துவந்து பொருத்திக் காட்டுகிறார். சாயல் ஒரே மாதிரியிருக்கிறது. வயதுக்கேற்ற முதிர்ச்சி அவரில் தெரிவதாக மாலினி படத்தைப் பார்த்து விளக்க மளிக்கிறாள்.

"நாங்கள் இதை எடுத்துக்கொண்டு செஞ்சிலுவ சங்கத்திட்டயும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிட்டயும் போனம். அவை இந்த நோட்டீஸ் அடிச்ச இடத்த எங்கள கண்டுபிடிக்கட்டாம். அதை நாங்கள் எப்பிடி கண்டுபிடிக்கிறது" இங்க அந்த நோட்டீஸ் குடுக்க பொறுப்பா இருந்தவர் தேர்தல் தோல்வியோட வீட்டவிட்டே எங்கயோ போயிட்டார். நோட்டீஸ்ல இருக்கிறவ எல்லாம் பெரிய அரசியல்வாதியள். அவையள நாங்க எங்க தேடிப் பிடிக்கிறது " கேள்வியோடு முடித்துக்கொள்கிறார் மூத்த மகன்.

நான் என்ன சொல்வேன் என்று என்னை எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். என்னால் என்ன செய்யமுடியும். "நான் எழுதுறன் பாப்பம்" அவர்களிடமிருந்து புறப்படத் தயாராகிறேன். எல்லோரும் வாசல் வரை வந்து நிற்கின்றனர்.

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven | zero**
graphic designers
**020 7043 4310**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**

# தமிழினத்தின் அடுத்த நகர்வு என்னவாக இருக்கவேண்டும் ?

**வேல்ஸ் இலிருந்து அருஷ்**

சிறீலங்காவில் ஏற்பட்டுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தின் மூலம் சிங்கள தேசத்திற்கு தமிழ் இனம் ஒரு காத்திரமான செய்தியை வழங்கியுள்ளது. அதாவது அரசியல் செல்வாக்குக்காக மேற் கொள்ளப்படும் இனப்போரை எமது இராஜதந் திரத்தால் உங்களுக்கு எதிராக பயன்படுத்த முடியும் என்பதே அது.

2009 ஆம் ஆண்டுபோர் நிறைவடைந்தபோது எதிர்வரும் 30 வருடங்களுக்கு தன்னை அசைக்க முடியாது என்றே மகிந்தா எண்ணியிருப்பார். ஏன் பல ஊடகங்களும், ஆய்வாளர்களும் அத னையே தெரிவித்தனர். ஆனால் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவருக்கான தேர்தலின் போது சரத் பொன்சேக்காவை ஆத ரிப்பது என முடிவெடுத்தபோதே மகிந்தாவின் செல்வாக்கு ஆட்டம்காண ஆரம்பித்திருந்தது. எனினும் அன்று மயிரிழையில் தப்பிப்பிழைத்த அவரை இரண்டாவது ஆட்டத்தில் தமிழ் மக்கள் தோற்கடித்துள்ளனர்.

இந்த தேர்தலில் தமிழ் மக்களின் முடிவு எவ்வாறு அமையும், அதற்கான காரணம் என்ன ? என்பது தொடர்பில் இரண்டு பத்திகளை தேர்த லுக்கு முன்னர் நான் எழுதியிருந்தேன். அதில் கூறப்பட்டதைப்போலவவே தமிழ் மக்களின் முடிவு ஒரு பழிவாங்கும் நடவடிக்கையாகவே அமைந்துள்ளதுடன், தேர்தலில் தமிழ் மக்கள் முழு அளவில் பங்கெடுத்திருந்தனர்.

சிறீலங்காவில் இடம்பெற்ற அரச தலைவருக் கான தேர்தலில் வழமையாக தமிழ் மக்கள் இவ்வளவு பெருமெடுப்பில் பங்கெடுப்ப தில்லை, ஆனால் இந்த தடவை அவர்கள் ஆயு தத்தால் வழங்கமுடியாத தண்டனையை தமது வாக்குகளால் வழங்கியுள்ளனர்.

இந்த தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக் காது விட்டால் தன்னால் வெற்றியீட்ட முடியும் என கருதிய ராஜபக்சா அரசு தமிழ் மக்களை வாக்களிக்கவிடாது தடுப்பதற்கு தன்னால் இயன்ற பல தடைகளை மேற்கொண்டபோதும் அதனை தமிழ் மக்கள் முறியடித்துவிட்டனர்.

மகிந்தாவினதும் அவரின் ஒட்டுக்குழுக்களி னதும் அதிகாரத்தை தமிழ் மக்கள் பறித்துள்ள நிலையில் அவர்களின் அரசியல் இருப்பை அழிக்கும் முயற்சிகளை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன. எனவே இனிவரும் சில காலத்திற்கு மகிந்தா வின் கதைகளே ஊடகங்களை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

எனது முதலாவது பத்தியில் குறிப்பிட்டது போல தமது முதல் கட்ட நடவடிக்கையில் தமிழ் மக்கள் வெற்றியீட்டியுள்ளனர். இனிவரும் காலங்களில் இரண்டாம் கட்ட செயற்திட்டத் திற்கு நாம் தயாராக வேண்டும்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரில் மேற் கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துவதுடன், போர்க் குற்றங்கள் அதற்கான காரணங்கள் எல்லாம் அனைத்துலக மட்டத்தில் வெளிக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதுடன் குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் வேண்டும்.

அதுவே எதிர்வரும் காலத்தில் ஒரு இனப் படுகொலை நடைபெறுவதை தடுக்கும், சிறீலங் காவில் இடம்பெற்றது ஒரு இனப்படுகொலை என்பதை அனைத்துலகம் ஏற்றுக்கொள்ளும் நிலையையும் ஏற்படுத்தும். மகிந்தாவையும் அவருடன் இணைந்து இனப்படுகொலைகளை மேற்கொண்டவர்களையும் தண்டிப்பதன் ஊடாக புதிய அரசுக்கு தமிழ் மக்கள் அனைத்துலக அழுத்தங்களையும் ஏற்படுத்த முடியும்.

சிறீலங்காவில் புதிய அரசு பதவி ஏற்ற பின்னர் பிரித்தானியா பிரதமர் டேவிட் கமரன் தெரிவித்த கருத்திலும் ஐக்கிய நாடுகள் சபை யின்மனிதஉரிமைகள்ஆணைக்குழுவின்விசார ணைகளுக்கு சிறீலங்கா அரசு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்என தெரிவித்திருந்தார். எனவே புதிய அரசு பதவியேற்ற போதும் ஐ.நா விசாரணை என்ற தனது நிலையில் இருந்து மேற்குலகம் பின்வாங்க வில்லை என்பதையே இந்த கருத்து பிரதிபலிக்கின்றது. ஆனால் அதனை வலுப்படுத்த வேண்டிய கடமை எமது கரங்களில் தான் உள்ளது.

புதிய அரசுக்கு கொடுக்கப்படும் அனைத்து லக அழுத்தங்களின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்குழுவை சிறீலங்கா மண்ணில் களமிறக்குவோமாக இருந்தால் அது எமது அடுத்த வெற்றியாக அமையும். மகிந் தாவை தேர்தலில் தோற்கடிக்க தாயக மக்கள் எவ்வளவு உறுதியாகவும், ஒற்றுமையாகவும் செயலாற்றினார்களோ. அதனைப்போலவே ஐ.நா விசாரணையை துரிதப்படுத்த புலம்பெயர் தமிழ் சமூகமும், தமிழகமும், உலகத்தமிழ் இன மும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

இன்றைய பூகோள அரசியலில் தமிழ் இனம் பல நன்மைகளை பெறமுடியும். உக்ரேன் ஊடாக ரஸ்யாவின் கொல்லைப்புறத்திற்குள் நுளைந்துள்ள மேற்குலகம் ரஸ்யாவின் பாது காப்பு வலையத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. அதனை முறியடிப்பதற்கு உக்ரேனில் ஒரு உள்நாட்டுப் போரை ரஸ்யா தோற்றுவித்தபோதும்தற்போதுஎண்ணைவிலை யில் வீழ்ச்சியை உருவாக்கி ரஸ்யாவின் பொரு ளாதரத்தை மேற்குலகம் முடக்கியுள்ளது.

இந்தநிலையில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஏறத்தாள 30 படைத்தளங்களை நகர்த்து வதற்கு அமெரிக்க தற்போது திட்டமிட்டுள்ளது. இந்த படைத்தளங்கள் ஆசிய பசுபிக் பிராந் தியங்களுக்கு நகர்த்தப்படவுள்ளதாக அமெரிக் காவின் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த படை நகர்வின் உள்நோக்கம் என்பது 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரபு உலகின் வசந்தம் போன்றதொரு வசந்தமானது ஆசிய பிராந்தியத்தில் உருவாக்கப்போகின்றது என்ப தையே காண்பிக்கின்றது. பல இனங்களை அடக்கி ஆட்சி செய்தவாறு ஜனநாயகம் என்ற போர்வையில் வல்லரசாகும் கனவில் மிதக்கும் பல ஆசிய நாடுகளில் வசிக்கும் இனங்களின் விடுதலைக்கான நேரம் நெருங்குகின்றது.

மேற்குலகமும், இந்தியாவும் இணைந்து செயற்படுகின்றது என்று நாம் எண்ணலாம், ஆனால் விடுதலைப்புலிகளை அழிக்கும் போது மேற்குலகமும் மகிந்தாவும் இணைந்தே பணியாற்றியிருந்தனர். 1980 களில் ஈரான் - ஈராக் போரில் சதாம் கூசைனும் அமெரிக்காவும் இணைந்தே பணியாற்றியிருந்தனர். ஆப்கா னிஸ்த்தான் - ரஸ்யா போரில் பின்லாடனும் அமெ ரிக்காவும் இணைந்தே பணியாற்றியிருந்தனர். இவ்வாறுபலஉதாரணங்களைகூறலாம்.ஆனால் தற்போதுள்ள பிரச்சனை என்ன வெனில் சிறீ லங்காவில் ஐ.நாவின் விசாரணைக் குழு கள மிறங்குவதற்கான அனுமதியை ஒரு அழுத் தத்தின் மூலம் பெறவேண்டும்.

அதேசமயம் அனைத்துலக சமூகத்திற்கு வழங்கப்படும் இந்த அழுத்தங்களைப்போல தயாகத்தில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் சிறீலங்கா அரசுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தி தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந் தனைகள் எதுவுமின்றி விடுதலை செய்வது டன், தமிழ் மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட காணிகளையும் மீறப்பெறும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

முன்னைய அரசாங்கத்தின் காலப்பகுதியில் அரச படையினராலும், அதனுடன் இணைந்து செயற்பட்ட ஒட்டுக்குழுக்களினாலும் கடத்தப் பட்டு காணாமல்போன தமிழ் மக்கள் தொடர் பான தகவல்கள் அறியப்படவும் வேண்டும். இதனை மேற்கொள்ள சிறீலங்கா அரசு தயங்கி னால் அதனை ஐ.நா விசாரணைக்குழு மூலம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

**மகிந்தாவினதும் அவரின் ஒட்டுக்குழுக்களினதும் அதிகாரத்தை தமிழ் மக்கள் பறித்துள்ள நிலையில் அவர்களின் அரசியல் இருப்பை அழிக்கும் முயற்சிகளை தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன. எனவே இனிவரும் சில காலத்திற்கு மகிந்தாவின் கதைகளே ஊடகங்களை ஆக்கிரமித்துக் கொள்ளும்.**

அது மட்டுமல்லாது படை முகாம்கள் படிப் படியாக குறைக்கப்படுவதுடன், ஒட்டுக்குழுக் களின்ஆயுதங்கள்முற்றாககளையப்பட்டுஅவை கலைக்கப்படவும் வேண்டும். இந்த நடிவடிக் கைகளுக்கு தமிழ் மக்கள் தமது பங்களிப்பை அவசியம் வழங்குவார்கள் என்பதுடன், சிறீ லங்காவில் உள்ள அனைத்துலக நாடுக ளின் குறிப்பாக மேற்குலக நாடுகளின் உதவி யையும் தமிழ் அரசியல் கட்சிகள் நாடலாம்.

**மகிந்தாவை தேர்தலில் தோற்கடிக்க தாயக மக்கள் எவ்வளவு உறுதியாகவும், ஒற்றுமையாகவும் செயலாற்றினார்களோ அதனைப் போலவே ஐ.நா விசாரணையை துரிதப்படுத்த புலம்பெயர் தமிழ் சமூகமும், தமிழகமும், உலகத்தமிழ் இனமும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.**

எனவே தற்போது தமிழ் மக்கள் மேற் கொள்ளவேண்டியது முக்கியமான இரண்டு நகர்வுகள் உண்டு. ஒன்று போர்க்குற்ற விசார ணைகள் மற்றும் அரசியல் தீர்வுக்கான வழி களை பலப்படுத்துவது. இரண்டாவது தாயகத் தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வை உறுதிப்படுத்துவதுடன், அவர்களின் தேடல்களுக்கான பதிலை கண்டறிவதுமாகும்.

*நன்றி - ஈழம் ஈ நியூஸ்*


3 Course Set Meal

£12 Per person
(T&C Apply)

Starters:
Any two from the list
- Calamari or Fried Squid
- Garlic Chilli Mogo or Chilli Paneer
- Nairobi Bhajia or Potato & Spinach Dumpling
- Sheekh Kebab or Mutton Roll
- Masala Dosa

Main Course:
Any two curries from
- Chicken Tikka Masala or Lamb Madras
- Kadai Paneer or Aubergine Masala
- Bombay Aloo or Tadka Dal
- And Pilau Rice and Naan or Kerala Paratha

- Dessert: Gajar Ka Halwa or Gulab Jamun or Ice Cream

FUSHIA

TEL - 020 8680 8833
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA
web : www.fushiauk.com Mail : info@fushiauk.com



60 ACRES PRIVATE LAND FOR SALE !
60 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

வவுனியா தமிழ்ப் பகுதியில்
60 ஏக்கர் வயல், தோட்டம்
செய்யக்கூடிய நீர் வளமுள்ள
குடி இருக்கக்கூடிய காணி
விற்பனைக்கு உண்டு.

Only Genuine buyers call. Preferable charitable organizations.

தொடர்புகளுக்கு - ராமநாதன் - 07932456464

# ஏறு தழுவல் மேற்கத்தைய பண்பாடா ?

**இ.பு.ஞானப்பிரகாசன்**

வரலாறு, பண்பாடு போன்றவை பற்றியெல்லாம் நாட்டில் யார்தான் பேசுவது என வர வர வரைமுறையே இல்லாமல் போய்விட்டது. அதுவும் தமிழர்களுடையவை என வந்துவிட்டால் யார் வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பேசலாம். காரணம், போயும் போயும் தமிழர்கள் தானே! என்ன செய்துவிட முடியும்? அட, ஒன்றரை லட்சம் பேர் கண்ணெதிரே கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று குவிக்கப்பட்ட பொழுதே ஒன்றும் கிழிக்க முடியாதவர்கள்தானே? அந்த வகையில், தமிழர் பண்பாட்டு அடையாளம் ஒன்றைப் பற்றி அண்மையில் திருவாய் மலர்ந்திருப்பவர், தமிழினத்தை ஒழிப்பதற்காகவே கங்கணம் கட்டிக் கொண்டு திரியும் குடும்பத்தைச் சேர்ந்தவரான மேனகா காந்தி அவர்கள்!

"ஜல்லிக்கட்டு என்பது மேற்கத்தைய பண்பாடு. அதில் மாடுகள் மட்டுமல்லாமல் மனிதர்களும் கொல்லப்படுகிறார்கள். பா.ஜ.க ஒரு போதும் இதை ஏற்றுக் கொள்ளாது" என்று இவர் பேசியிருப்பது தங்கள் பாரம்பரிய விளையாட்டைத் தடை செய்துவிட்டார்களே என ஏற்கெனவே வெந்து போயிருக்கும் தமிழ் நெஞ்சங்களில் வேண்டுமென்றே வேல் பாய்ச்சும் வேலை!

நேற்று வரை விலங்கு நல ஆர்வலராக மட்டுமே அறியப்பட்ட மேனகா காந்தி எப்பொழுது முதல் வரலாற்று ஆசிரியரானார்? இவர் கூறுவது எந்த அளவுக்கு உண்மை? இதோ, சில வரிகளில்...

"பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரிகத்திலும் 'ஏறு தழுவல்' நிகழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஏறு தழுவுதல் (மஞ்சு விரட்டுதல்) என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராகப் பயின்று வருகிறது. கொல்லக் கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் 'கொல்லேறு தழுவுதல்' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. புது தில்லி தேசியக் கண்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற சிந்து வெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உயிரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து கி.மு 2000 ஆண்டு அளவிலேயே 'ஏறு தழுவல்' வழக்கத்தில் இருந்தது என்று ஐராவதம் மகாதேவன் போன்ற அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்."

- இஃ்து 'ஏறுதழுவல்' எனும் தலைப்பில் தமிழ் விக்கிப்பீடியாவில் உள்ள கட்டுரையின் பகுதி. மேற்கண்ட கருத்துக்கான சான்றுகளும் அந்தக் கட்டுரையின் அடியில் காட்டப்பட்டுள்ளன.

இதே கட்டுரையில் அடுத்து, சங்க காலத்திலேயே 'ஏறு தழுவல்' இருந்திருக்கிறது என்பதற்கான சான்றும் கொடுக்கப்பட்டுள்ளது.

'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை
மறுமையும்
புல்லாளே ஆய மகள்'

எனும் அந்த வரியின் பொருள், 'கொல்ல வரும் காளையின் கொம்புக்கு அஞ்சுபவனைத் தமிழ்ப் பெண் மறுபிறப்பில் கூட மணக்க விரும்ப மாட்டாள்' என்பது. சிந்துவெளி நாகரிகம் மட்டுமில்லை, சங்க காலம் என்பதும் கிறித்து பிறப்பதற்கு முன்புதான் என்பது இங்கு நாம் உணர வேண்டியது. (சான்று: Tamil classical period - சங்க காலம் பற்றிய ஆங்கில விக்கிப்பீடியா கட்டுரை).

இவை இரண்டு மட்டுமல்ல, 'ஏறு தழுவல்' தமிழர் பண்பாடுதான் என்பதற்கு இன்னும் இன்னும் ஏராளமான சான்றுகள் கொட்டிக்கிடக்கின்றன. ஆக, கிறித்து பிறப்பதற்கு முன்பே - இன்னும் சொல்லப் போனால், மேலை நாடுகளில் நாகரிகம் வளர்வதற்கு முன்பே 'இங்கு தமிழர்களால் ஆடப்பட்டு வந்த ஒரு விளையாட்டு எப்படி மேற்கத்திய பண்பாடு ஆகும்' ஊடகங்கள் தன் முன்னால் ஒலிவாங்கியை (mic) நீட்டிக் காத்திருக்கும் மட்டத்தில் இருக்கிறோம் என்பதற்காக என்னவேண்டுமானாலும் பேசுவதா?

ஏறு தழுவல் பற்றி மட்டுமில்லை, சங்க காலம் பற்றியும், தமிழர்களின் இன்ன பிற விழுமியங்கள் பற்றியும் யார் வேண்டுமானாலும் பார்க்கக் கூடிய வகையில் விக்கிப்பீடியாவில் ஆங்கிலத் திலேயே நிறையக் கட்டுரைகள் உள்ளன. இவற்றையெல்லாம் மேனகா காந்தி பார்த்தது கூடக் கிடையாதா?...

பல ஆண்டுகளாகத் தான் வாழ்ந்து வருகிற பகுதியில் (புது தில்லி) உள்ள வரலாற்று அருங்காட்சியகத்தில் இருக்கும் வரலாற்றுச் சின்னத்தைக் கூட மேனகா காந்தி பார்த்ததில்லையா?...

ஆம் எனில், அப்படி மேலெழுந்தவாரியாகக் கூட அறியாமல் (அல்லது அறிந்தே), ஓர் இனத்தின் பழம்பெரும் அடையாளம் ஒன்றினைப் பற்றித் தவறுதலாக, சிறுமைப்படுத்தும் விதமாக நாடாளுமன்ற உறுப்பினர் - அதுவும் ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பேசலாமா ? அதிலும் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிற கட்சியின் நிலைப்பாடே அதுதான் எனச் சொல்லலாமா?

'சரி, ஏதோ தெரியாமல் பேசிவிட்டார். அவர் என்ன தமிழரா ? அல்லது, தமிழ்நாட்டு மக்களுடனோ தமிழ்நாட்டு அரசியல் புள்ளிகளுடனோ நெருக்கமான தொடர்பில் உள்ளவரா, இவை தெரிந்திருக்க? விடுங்களேன்' எனப் பலரும் நினைக்கலாம். ஆனால், அது தவறு!

விலங்கு நலப் போராளியாகப் பல ஆண்டுகளாகக் களத்திலிருப்பவர் மேனகா காந்தி. அப்படிப்பட்டவருக்கு, விலங்குகளுக்கு ஊறு விளைவிக்கும் விளையாட்டு எனப் பல ஆண்டுகளாகத் தவறாகப் பேசப்பட்டு வரும் இந்த விவகாரத்தில் தமிழர்கள் தரப்பில் எடுத்து வைக்கப்பட்டு வரும் இந்த முதன்மையான கருத்துப் பற்றி 'அதாவது, இது தங்கள் பல்லாண்டு காலப் பாரம்பரிய விளையாட்டு என்பதால் தடை செய்யக்கூடாது என வலியுறுத்தப்படுவது பற்றித் தெரியாதா'

ஒவ்வொரு முறை இப்படித் தடை போடப்படும்பொழுதும் தமிழ்நாட்டு அரசு தம் அறிக்கைகளிலும் நடுவணரசுக்கான கடிதங்களிலும் தமிழர் பாரம்பரிய அடையாளங்களில் ஒன்று என இதைக் குறிப்பிட்டுத் தடை விலக்குக் கோருவது இத்தனை ஆண்டுகளாக அரசியலில் இருப்பவருக்குத் தெரியாது என்றால் அது நம்பக்கூடியதா?

ஆக, வட இந்தியப் பண்பாடுதான் இந்தியப் பண்பாடு, வட இந்திய வரலாறுதான் இந்திய வரலாறு, உணவு, உடை, நாகரிகம், பழக்க வழக்கங்கள் என எல்லா வகைகளிலும் வட இந்தியர்களுடைவைதான் ஒட்டுமொத்த இந்தியாவின் அடையாளங்கள் என மீண்டும் மீண்டும் நிறுவி வரும் இந்திய அரசியலாளர்களுடைய போக்கின் ஒரு நீட்சியாகத்தானே இது தென்படுகிறது அத்தகைய மனப்பான்மையிலிருந்து எழும் சொற்களாகத்தானே இந்தக் கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது?

ஒருவேளை, மேனகா காந்தி அறியாமல், தெரியாமல் இப்படிப் பேசியதாகவே இருந்தாலும், அப்படியும் நமக்கு இது தொடர்பாக வேறு சில கேள்விகள் எழுகின்றன தவிர்க்க முடியாமல்.

இதே போல, இந்தியாவின் வேறு எந்தப் பண்பாட்டைப் பற்றியாவது இப்படி ஒரு தெரியாத்தனமான கருத்தை, வாய்க்கு வந்தபடி அவரால் உதிர்க்க முடியுமா?

ஏறு தழுவலால் விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு விளைவதாக இவர் கூறுவதை உண்மை என்பதாகவே வைத்துக் கொண்டாலும், இந்த ஒரு விளையாட்டில் மட்டும்தான் இது நடக்கிறதா? இஃ்து ஒன்றைத் தவிர, இந்தியாவின் மற்ற பாரம்பரிய விளையாட்டுகள் அனைத்துமே யாருக்கும் எதற்கும் தீங்கு நேராத வகையில்தான் நடத்தப்படுகின்றனவா?

**வட இந்தியப் பண்பாடுதான் இந்தியப் பண்பாடு, வட இந்திய வரலாறுதான் இந்திய வரலாறு, உணவு, உடை, நாகரிகம், பழக்க வழக்கங்கள் என எல்லா வகைகளிலும் வட இந்தியர்களுடைவைதான் ஒட்டுமொத்த இந்தியாவின் அடையாளங்கள் என மீண்டும் மீண்டும் நிறுவி வரும் இந்திய அரசியலாளர்களுடைய போக்கின் ஒரு நீட்சியாகத்தானே இது தென்படுகிறது**

அப்படி இல்லை எனில், அவற்றையெல்லாம் விட்டுவிட்டுத் தமிழர் பாரம்பரிய விளையாட்டைத் தடை செய்ய மட்டும் இவ்வளவு ஆர்வம் எதற்காக? தமிழ் மக்கள் மீது அந்த அளவுக்கா அக்கறை பொங்கி வழிகிறது உங்களுக்கு?

இதே போல, ஏறு தழுவல் மேலைநாட்டுப் பண்பாடு என்ற இவருடைய வரலாற்றுச் சிறப்பு மிக்க கூற்றையும் ஒரு பேச்சுக்காக உண்மை எனவே ஒப்புக் கொண்டாலும், இந்திய விளையாட்டுக்களிலேயே இஃ்து ஒன்றுதான் மேலை நாட்டுப் பாரம்பரியமா?

குதிரைப் பந்தயம், மகிழுந்துப் (car) பந்தயம், ஈருருளிப் (bike) பந்தயம் முதலியவையெல்லாம் என்ன, பகவத் கீதையில் பரிந்துரைக்கப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்களா?

*- நன்றி : கீற்று*

# கே.பாலச்சந்தர்

சில பொழுது தயக்கத்துக்குப் பின்னரே இதனை எழுதுகிறேன். அவரது கலை ஆளுமை குறித்து எனக்கு ஒரு வகை சிலிர்ப்பு உண்டு. அதேசமயம் அவரது காழ்ப்பு அரசியல் குறித்த கசப்பும் உண்டு. கே.பாலச்சந்தர் என்று நினைக்கையில் 'தண்ணீர்... தண்ணீர்..' திரைப்படம் நினைவுக்கு வருகையில் 'புன்னகை மன்னன்' படத்தில் ஈழப்போராளிகளை அவதூறாக காட்சிப்படுத்தியவிதமும், நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை. ஆயினும், அவரது கலை ஆளுமை கருதி அவற்றை ஒரு புறத்தே ஒதுக்கி வைத்து விட்டு இனிப் பேசுகிறேன்.

தமிழ்த் திரை வரலாற்றில் உச்சாணிக் கொம்பில் ஏறி, சிம்மாசனம் வைத்து அமர்ந்திருந்தவர் கே.பாலச்சந்தர் அவர்கள். பீம்சிங், பந்துலு, இராமண்ணா போன்ற முக்கிய ஆளுமைகளைக் கண்டது தமிழ்த் திரைஉலகம். அவர்களிடமிருந்து தம்மை வேறுபடுத்தி வெளிவந்தவர்கள் வீணை எஸ்.பாலச்சந்தர், ஸ்ரீதர் ஆகியோர். தமிழ்ச் சினிமாவின் திருப்பத்தை முதலில் நிகழ்த்தியவர் ஸ்ரீதர் என்றாலும் அத்திருப்பத்தின் உச்சம் கே.பாலச்சந்தர் அவர்களே. ஏங்கல்சும் எழுதினாலும் கார்ல் மார்க்ஸின் பெயராலேயே மார்க்சீயம் அறியப்படுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் கே.பாலச்சந்தர் அவர்களது கைபடிந்திருக்கிறது. எண்ணிக்கையை மாத்திரம் சொல்ல வில்லை. அவர் எண்ணங்களையும் சேர்த்தே சொல்லுகின்றேன். '100 பூக்கள்' அவர் எண்ணங்களில் மலர்ந்திருக்கின்றன. இது லேசுப்பட்ட காரியமல்ல. அவர் நாடகங்களை திரைப்படமாக்குகின்றார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவரை அப்புறப்படுத்த முடியாது. சிவாஜி கணேசனின் நடிப்பினை நாடக நடிப்பு என்று தான் சொன்னோம். ஆனால், அவரது நடிப்பு ஆளுமைக்கு முன் இன்றும், இனியும் எவர் தான் நின்றார், நிற்பார்?

பெரியாரின், பிராமணியத்தின் மீதான கண்டன அரசியல் பிராமணர் மீதும் பரவத் தொடங்கிய காலம் அது. ஏழைப் பிராமணர்களை அது வெகுவாகப் பாதித்தது. பாலச்சந்தர் அவர்களால் செய்ய முடிந்தது ஒன்று தான். 'அரங்கேற்றம்' என்று ஒரு திரைப்படத்தை எடுத்து தன் கலை ஆளுமையால் பதிலிறுத்தார். மிகமிகச் சுட்டது அத்திரைப்படம்.

காந்தீயம் செத்து விட்டதா என்று பலர் அங்கலாய்த்த போது, உண்மையை முகத்துக்கு நேரேயே வைத்தார். ஓம், செத்துவிட்டது. அவர் அதற்காக ஒரு கவிதையோ, கட்டுரையோ எழுதவில்லை. 'புன்னகை' என்று ஒரு திரைப்படம் தந்தார். அது நாடகமா, திரைப்படமா என்ற கேள்விகள் என்னிடமில்லை. பாலச்சந்தரின் அரசியல் முகம் கலை முகமாயிற்று. அவ்வளவுதான்.

இவற்றை ஏன் குறிப்பிடுகின்றேன் எனில், அப்போது எந்தத் தமிழ்த் திரைப்பட இயக்குநருக்கும் இல்லாத நெஞ்சுத்திராணி இவரிடம் இருந்திருக்கிறது என்பதனைச் சொல்லவே. அது மிகமுக்கியமான ஒரு பண்பு. சமகால அரசியலிலும், ஒரு கலைஞர் சக பயணியாக பயணப்பட வேண்டும். தன் கலை ஆளுமையை அந்த அரசியலில் தேனீருடன் சீனியைப் போல கலையாமல் அரிசிக்குள் பயறுபோல கலக்க வேண்டும். பாலச்சந்தர் அதனைச் செய்தார்.

'வறுமையின் நிறம் சிவப்பு' எனும் திரைப்படம் வருகின்ற காலத்தைப் பாருங்கள். வேலையில்லா திண்டாட்டம் பெருகிய அதனால் கொமியுனிச சித்தாந்தம் இளைஞர்களிடையே பரவிய ஒரு காலம், அப்போது நானும் இளந்தாரி. பாலச்சந்தர் எனக்காகவும் அத்திரைப்படத்தை எடுத்தார் என நான் நம்பினேன். அத்திரைப்படத் தலைப்பே எத்தகைய திரைப்படம் என்று அறியத் தருகின்றது அல்லவா?

பாலச்சந்தரது அரசியல் பிரச்சார பாங்கிலானது அல்ல. கலை ஆளுமை செறிந்தது. 'நெல் மணிகள் நிறைந்திருக்கின்ற கிடாரம் போன்ற ஒரு பாத்திரம், அதில் இப்போது ஒரு நெல்மணி தானும் கிடையாது. தன் வாயை ஆவெனத் திறந்தபடி டங்..டங் என்று வெற்றொலி எழுப்புகின்றது அப்பாத்திரம்.' ஏழைப் பிராமணக் குடும்பத்தில் மூத்த வளாக பிறந்த நாயகி வீட்டில் உணவில்லாக் கொடுமையையும், தம்பி மருத்துவம் படிக்க வேண்டிய விருப்பையும் தங்கை பாடகியாகும் கனவுடன் இருக்கும் ஆசையை கண்டவுடன் நாயகி இவையாவற்றுக்காகவும் வேலை தேடி நகரத்திற்குப் போகிறாள். நகரம் அவளை பாலியல் தொழிலாளியாக்குகின்றது. இது 'அரங்கேற்றம்' திரைப்படக் கதை. இதனைப் பார்க்கின்றபோது ஏழைப் பிராமணர்கள் மீதான கழிவிரக்கமே எழுகின்றது. பிராமணியம் மீதான பெரியாரின் எதிர்ப்பு அரசியலை, தன் கலை முகத்தால் ஒன்றும் இல்லாதது ஆக்குகின்றார் பாலச்சந்தர். பிராமணியம் மீதான எதிர்ப்பு அரசியலை பிராமணர்கள் மீதான எதிர்ப்பு அரசியலாக செய்தவர்கள் மீதான கோபம் நியாயமானது.

கே.பாலச்சந்தர் பற்றி பேசுகின்றபோது, அவரது 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படத்தை தவிர்த்து விட்டு அப்பால் போக முடியாது. அது கோமல் சுவாமிநாதனின் நாடகம் என்றபோதும், சினிமாவுக்கேற்றவாறு அதனை திரைக்கதையாக்கி, நெறியாழ்கை செய்து ஓர் உன்னத திரைப்படம் எனும் நிலைக்குக் கொண்டு வந்தார் பாலச்சந்தர்.

## இரவி அருணாசலம்

**எழுதுவது என்னவெனில்**

தமிழில் முதல் சிறந்த 10 திரைப்படங்கள் என்று என் கைவிரல்கள் மடியத் தொடங்கினால், 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படத்தைக் குறியாமல் என் ஒரு விரலும் கூட மடியாது. 'உதிரிப் பூக்கள்', 'நாயகன்', 'தில்லானா மோகனாம்பாள்' ஆகியனவும் என் கைவிரல் மடிப்புக்குள் அடங்கும். ஆனால், 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படம் அதன் அரசியலாலும், இவற்றை விட உயர்ந்து நிற்கின்றது.

அத்திரைப்படத்தில் ஒரு காட்சி, மழையே காணாத கரிசல்காட்டுக் கிராமம் நிலம் பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கிறது. ஒருநாள் பெருமழையல்ல, மழையே அல்ல. ஒரு துளி நாயகியின் (சரிதா) கையில் விழுகிறது. அவள் வானைப் பார்ப்பாள் மேகங்கள் சுழல்கின்றன. அவள் முகத்தில் புழுகம். கையில் விழுந்த அந்த ஒரு துளியை பொத்திப் பாதுகாத்தவாறு ஊரில் ஓடி ஓடி யாவருக்கும் காட்டுவாள். அந்தக் காட்சி இருக்கின்றதே, ஓர் உன்னத கலைஞன் அல்லால் வேறு யாராலும் இப்படி நுட்பமாக செதுக்கியிருக்க முடியாது. 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படம் நிறைவுறுகின்றபோது, முத்தாய்ப்பாக ஒரு காட்சி. கரிசல் காட்டு கிராமத்தின் இளைஞன் ஒருவன் காட்டுப் பக்கமாய் ஒளித்து ஒளித்துப் போகின்றான். அவன் 'நக்சலைட்' ஆகிவிட்டான் என்பது பாலச்சந்தர் சொன்ன செய்தி. 80 களின் ஆரம்பத்தில் அவ்வாறு சொல்வதற்கு அசாத்தியத் துணிச்சல் வேண்டும். 'தண்ணீர் தண்ணீர்' திரைப்படம் எடுத்த ஒன்றுக்காகவேனும் அவருக்காக என் தலை குனியும்.

யாராலும் சாத்தியப்படாத கலை ஆளுமை ஒன்றினை அவர் தன்னகத்தே வைத்திருந்தார். 'அவள் ஒரு தொடர்கதை', 'அபூர்வ ராகங்கள்' ஆகிய திரைப்படங்களின் திரைக்கதை தமிழ்ச்சினிமா கண்டடைந்த திரைக் கதைகளில் மிகமுக்கியமானவை. திரைக்கதைக்கான ஒரு இலக்கணமாக அவற்றையும் கொள்ளலாம். இதனை அவர் 'ஓர் அறையெடுத்து ஐந்தாறு பேருடன் கூடிச் சேர்ந்து செய்யவில்லை'. அவரது கலை ஆளுமையிலிருந்து மாத்திரமே அத்திரைக்கதைப் பிரதிகள் மிதந்தன.

சினிமாவின் மொழியில் அவரது உத்திகள், குறியீடுகள், படிமங்கள் பெரும் பங்கை வகித்தன. கூர் தீட்டப்பட்ட, நுண்ணிதான வசனங்களை இங்கு குறித்தல் சாலும். 'எதிர்நீச்சல்' திரைப்படத்தில் மூடப்பட்ட ஒரு அறை. அதிலிருந்து அடிக்கடி இருமல் சத்தம். சூழ்நிலைக்கேற்ப இருமல் சத்தத்தின் தொனி மாறுபடும். இவ்வுத்தியை அதுவரை எந்த தமிழ்ச் சினிமாவும் கண்டதில்லை.

தமிழ்த்திரை வரலாற்றில் பாலச்சந்தருக்கு முன், பாலசந்தருக்கு பின் என்றும் சொல்லும் தகுதி படைத்த ஒன்றே ஒருவரான பாலச்சந்தருக்கு என் தலையைத் தாழ்த்துகிறேன்.

# கூட்டமைப்பு மைத்ரி அரசிடம் கேட்க வேண்டிய முதல் கோரிக்கை

கூட்டமைப்பு மைத்ரி அரசிடம் கேட்க வேண்டிய முதல் கோரிக்கையை விடுத்து விட்டு ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறது. அதாவது முதலில் இன அழிப்பு வதை முகாம்களில் உள்ளவர்களின் முழுமையான பட்டியலை கோர வேண்டும். அதை இன அழிப்பு அரசு தருமா என்பது கேள்விக்குறிதான். ஆனால் கூட்டமைப்பு வைக்க வேண்டிய முதல் கோரிக்கை அதுதான். ஏனென்றால் ஆயிரக்கணக்கான பெண்கள் தங்கள் கணவன்மார் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையில் மறுமணமும் செய்யாமல் பெரும் அவலத்திற்குள் சிக்கி தவிக்கிறார்கள்.

இன அழிப்பு அரசு அவர்களது இருப்பு குறித்து எந்த பதிலும் தர மறுக்கிறது.

ஒரு இனத்தின் அடிப்படையும் ஆதாரமும் பெண்கள்தான். அந்தப் பெண்களை குறிவைப்பதன் ஆழமான அரசியல் பின்புலம் இன அழிப்பு சிந்தனைகளிலிருந்தே தோற்றம் பெறுகிறது. கொல்லப்பட்டிருந்தால் அதைத்தன்னும் உறுதிப்படுத்து என்றே அவர்கள் கேட்கிறார்கள். (உண்மையில் ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் கொல்லப்பட்டு விட்டதே உண்மை) ஆனால் திட்டமிட்ட இன அழிப்பு நோக்குடன் அந்த பட்டியலை வெளியிடாமல் தொடர்ந்து மறுத்து வருகிறது சிங்களம். இதனால் அந்த பெண்ணகளினதும் அவர்கள் குழந்தைகளினதும் எதிர்காலம் குறித்து எதையும் சொல்லமுடியவில்லை. அவர்களில் பலர் தமது நிலையை உணர்ந்து மறுமணம் செய்ய தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் இறந்து விட்டார்களா என்று உறுதியாக தெரியாமல் எப்படி மறுமணம் செய்ய முடியும்? இதனால் மே - 18 ற்கு பிறகான பல பொருளாதார வாழ்வியற் சிக்கல்களுடன் பல உளவியற் சிக்கல்களும் பாலியல் முரண்பாடுகளுமாக எமது இனத்து பெண்களின் வாழ்வு சூறையாடப்படுகிறது. 2009 இன அழிப்பை அடுத்து கொல்லப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், விதவைகள், அரைவிதவைகள் (Half widows) என்று கிட்டத்தட்ட எமது இனம் முடங்கிவிட்டது. தொடர்ந்து நடைபெறும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பில் எமது இனப் பரம்பலும் சனத்தொகையும் தான் சிங்களத்தால் Ż்ட்டமாக குறிவைக்கப் பட்டுள்ளது. அதன் ஒரு பகுதிதான் இந்த பட்டியலை வெளிட மறுப்பதன் பின்னணியாகும். இன அழிப்பு அரசு கட்டாய கருத்தடை தொடக்கம் காணாமல்போனவர்கள் குறித்து எந்த பதிலும் தராது எமது இனப்பெண்களின் பெரும்பகுதியை 'அரைவிதவைகள்' என்ற சமூகநிலைக்குள் வைத்து தொடர்ந்து பேணுவதால் எமது பிறப்பு வீதம் முற்றாக வீழ்ச்சியடைந்து வருகிறது.

அண்மையில் யாழ் பல்கலையில் 'தமிழரின் எதிர்காலம்: ஒரு குடித்தொகையியல் நோக்கு' என்ற கருத்தரங்கில் உரையாற்றிய சமுதாய மருத்துவநிபுணர் வைத்தியகலாநிதி முரளி வல்லிபுரநாதன் இலங்கையில் தமிழினம் அழிவு அபாயத்தை எதிர் நோக்குவதாக கடந்தகால தமிழர் குடித்தொகை வளர்ச்சி வீதத்தையும் ஏனைய தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டு ஆதாரத்துடன் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

நானும் எனது சக நண்பர்களும் இது குறித்து நீண்ட ஆய்வுகளை செய்திருக்கிறோம். தொடர்ந்து எச்சரித்தும் வருகிறோம். ஒரு இனத்தின் எதிர்காலம் அவர்களின் கருவளத்திலேயே பிரதானமாக தங்கி இருக்கிறது. ஒரு இனம் தன்னை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமெனின் அவ்வினத்தின் மொத்த கருவள வீதம் 2.1 இலும் அதிகமாக இருக்க வேண்டும். அதாவது சராசரியாக ஒரு பெண் 2 பிள்ளைகளுக்கு மேலாக 2.1 அளவில் பெற்றால் மாத்திரமே அதை மாற்றீடு செய்யும் கருவளவீதம் அதாவது குடித்தொகை குறையாமல் இருக்கும் ஒருநிலை என்று கூறமுடியும்.

ஆனால் இன அழிப்பு அரசு இந்த சமநிலையை பேணவிடாது தடுத்து எமது இனப்பரம்பலின் சமநிலையை குலைக்கிறது. அதற்கு இந்த பட்டியலை வெளியிடாமல் தடுத்து வைத்திருப்பது முதன்மை காரணமாகும். அரசியல் தீர்வுகள் குறித்து நாம் விவாதிப்பதற்கு முன்பாக எமது இருப்பை உறுதி செய்ய வேண்டியது முக்கியம். எனவே கூட்டமைப்பு உடனடியாக பேச வேண்டிய விடயம் இதுதான்.

*- பரணி கிருஸ்ணரஜனி*

# சைவமுறைத் தைப்பொங்கல்

இனிய தைப்பொங்கல் தமிழர் திருநாளாக உழவர் விழாவாக, தமிழர் செறிவாக வாழுகின்ற பகுதிகளில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. புலம்பெயர் நாடுகளில் கோயில்கள், தமிழ்ப்பாடசாலைகள், தமிழர் சார்ந்த அமைப்புகள் என்பன, இவற்றை கொண்டாடி வருகின்றன. வழமைபோலவே இவ்வாண்டும் பஞ்சாங்கத்தில் தை பிறப்பு நாள் பற்றிய குழப்பம், ஆங்கில 14ஆம் நாளா அல்லது 15ஆம் நாளா தை முதல் நாள் என்பதன் குழப்பத்தின் காரணமாக தத்தம் நம்பிக்கையின்படி இருநாட்களில் தைப்பொங்கல் எங்கும் கொண்டாடப்பட்டது. புலம்பெயர் நாட்டு தமிழர்கள் அமைப்புகள் பொங்கல் நாளைத் தொடர்ந்து வருகின்றன, சனி அல்லது ஞாயிறு தினங்களிலேயே தைப்பொங்கலைக் கொண்டாடப்படுகின்றன. விடுமுறை கருதிய அவசிய தேவையாக இது இருக்கின்றது. முற்றத்தில் கோலம் போட்டு நடுவில் பொங்கல் பானையை வைத்து நிறை குடம் வைத்து குத்துவிளக்கு சாணகப் பிள்ளையார் வெற்றிலை சகிதம் அலங்கரிக்க சுற்றிலும் மாவிலை தோரணம், கரும்பு, மஞ்சள் என்ற அலங்காரங்களுடன் சூரியப் பொங்கல் எங்கும் இடம்பெறுவது வழமை.

புலம்பெயர் நாட்டில் தாயகத்தில் நடைபெற்று வருகின்ற தைப்பொங்கல் நாளைப் பற்றிய ஒளியாக்கங்களையும் காணொளியூடாகப் பார்க்க முடிந்தது. இவ்வாண்டும் புலம்பெயர் நாட்டில் காட்சிப்படுத்தக் கூடிய ஜீ.ரிவி, தீபம், பாமுகம், கலைஞர் தொலைக்காட்சி என்ற எல்லாமே எங்கும் நடைபெற்ற விழாக்களை காணொளிப்படுத்தி வந்தன. இவை எல்லாவற்றிலுமே பொங்கல் விழாக்கள், சைவ முறைப்படி தமிழர் திருநாளாக உழவர் விழாவாக கொண்டாடப்படுவதை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. பொங்கல் பானையும் அலங்கரிக்கப்பட்டு தமிழ் கலாசார உடுப்புகளுடனேயே கலந்து கொண்ட தமிழர்கள் எல்லோரும் பொங்கல் விழாக்களில் காணப்படுகின்றார்கள். தேவார பாராணயம் ஓதப்படுவதும் எங்கும் வழமையாகின்றது. சைவ முறைப்படி தைப்பொங்கல் திருநாள் நடைபெறுவதை காணமுடிகிறது.

கிறிஸ்தவ சமயத்தவரோ, இஸ்லாமிய சமயத்தவரோ இதனை கொண்டாடுவதை தாயகத்திலும், புலம் பெயர் நாடுகளிலும் காணப்படுவதில்லை. நாடு கடந்த அரசாங்கம் தாயக முறைப்படி தென்பகுதி பிராந்திய அமைப்பு இம்முறையும் பெல்தம் நட்சத்திர மண்டபத்தில் சிறப்பாக பொங்கல் விழாவை மண்டபத்தின் முற்றத்தில் பொங்கியது. மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது. அந்தப் பொங்கல் விழாவும் சைவமுறைப்படி தான் இடம்பெற்றது. தமிழர் திருநாள் என்று சொல்லப் படுகின்ற தைப்பொங்கல் நாள் காலாகாலமாக சைவ முறைப்படி நடைபெற்று வருவதும் இது வழமையாகி விட்டது நிதர்சனமாகிவிட்டது.

உழவர் திருநாளாக உழவர்கள் தமது வயல் விளைச் சலுக்கு உதவியாக நின்ற சூரியபகவானுக்கு நன்றி கூறி விளைச்சலுக்கு பக்க துணையாக இருந்த விவசாய கூலித் தொழிலாளர்களை மகிழ்ச்சிப்படுத்தி அவர்களுடன் இணைந்து புதிய அரிசியில் பொங்கி படைத்து வணங்கி அனைவருக்கும் பொங்கலைப் பரிமாறுவது என்பது தைப்பொங்கலுடைய நிகழ்வாக உள்ளது. இது கொண்டாட்டத்தின் நடைமுறையும் கூட. இதன் ஒரு அம்சமாகவே மண்ணை உழுது பண்படுத்த பயன்பட்ட காளை மாடுகளுக்கும் மற்றும் பாலைப் பொழிந்து தருகின்ற மாடுகளுக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் என்று கொண்டாடப்படுகிறது. மஞ்சு விரட்டல், மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி என்று மாடுகள் தொடர்பான நிகழ்வுகள் இந்த இருநாட்களும் எங்கும் இடம்பெற்று வருகின்றது.

சிந்துநாகரிக காலம் முதல் நிலையான ஒரு சமுதாய மாக ஒரு நிலப்பரப்பில் வாழும் வாழ்க்கை முறை ஏற்பட்ட போது விவசாயம் முக்கிய ஆதாரத் தொழிலானது. தமிழ் மன்னர்கள், சேர சோழ மன்னர்களும் சைவ சமயத்தவர்களாகவே இருந்து, நிலையாக இன்றும் வானளாவ காட்சியளிக்கின்ற சைவத் திருத்தலங்களை கட்டியெழுப்பியவர்களாக இருக்கின்றார்கள். சமண சமயம் தோற்றம் பெற்றபோது அது நிலைத்திருக்க வில்லை. இராவணன், எல்லாளன், சங்கிலியன் என்ற தமிழ் மன்னர்களும் சைவர்களாகவே இருந்தார்கள். உழவுத் தொழில் தொடர்பான தைப்பொங்கல் சைவ முறைப்படி கொண்டாடப்படுகின்ற வழமை, முற்றிலும் வைசசமயத்தவர்களைக் கொண்டிருந்த அந்த நாட்களில் தொடர்ந்திருந்தது. ஆனால், அந்நியர்களுடைய வருகை யோடு தாயக பூமியில் பிற சமயங்கள் முளைத்து, நிலைத்த காரணத்தினாலே அவர்களும் விவசாயிகள் ஆனபோதிலும், தைப்பொங்கலோடு இணைந்ததாக தெரியவில்லை.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

எல்லோருமே புதிர் எடுக்கின்ற புதிய விளைச்சலை அறுவடை நாளாக கொண்டாடுகின்ற வழக்கத்தைக் கொண்டிருக்கின்றார்கள். ஆங்கிலேய நாட்டிலே கூட இது ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது. தைப்பூசம் புதிர் எடுத்து புதிதாகக் கொண்டாடப்படும் பொங்கலைக் கொண்ட அறுவடை தினமாக சைவர்களால் கொண்டாடப் படுகின்றது. தைப்பொங்கல் உழவர் திருநாளாக தமிழர் கள் சைவ முறைப்படி கொண்டாடப்படுவது நிலைபெற்று விட்டது. இறைவன் உருவம் அற்றவன் என்று கூறும் இஸ்லாமிய நண்பர்கள் படைத்த பொங்கலை விலத்தி பானையிலுள்ள பொங்கலையே பரிமாறும்போது ஏற்றுக் கொள்கிறார்கள். இந்நிலையில் இவர்கள் சூரியப் பொங்கலை தமிழர்களோடு இணைந்து நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. தவிர, நல்லநாள் திதி என்று பார்ப்பதும் திதிப்படி தை முதலாம் நாள் தைப்பொங்கலை கொண்டாடுவது காலாகால வழமையாகிவிட்டது.

**தைப்பொங்கலை உழவர் விழாவாக தமிழர் விழாவாக முன்னெடுக்க ஏனைய சமயத்தவரையும் இணைத்து தமிழர் திருநாளாக கொண்டுவர தமிழ் சார்ந்த அமைப்புகள் முன்னெடுக் குமானால் எதிர்காலத்தில் அது சிறப்பாக இருக்கும்.**

இத்தகைய திதி நாள் முறைகூட சைவசமய முறை யாகவே காணப்படுகிறது. தாய் மொழியை முன்னிறுத்தி அரசியல் கட்சிகளை அமைத்து நிற்கும் தமிழர்களாகிய நாங்கள் எம்மதமும் சம்மதம் என்ற சகோதரத்துவ கொள் கையோடு இயங்கிவருகின்றோம். தைப்பொங்கலை உழவர் விழாவாக தமிழர் விழாவாக முன்னெடுக்க ஏனைய சமயத்தவரையும் இணைத்து தமிழர் திருநாளாக கொண்டுவர தமிழ் சார்ந்த அமைப்புகள் முன்னெடுக் குமானால் எதிர்காலத்தில் அது சிறப்பாக இருக்கும். தமி ழர்களுடைய ஐக்கியத்திற்கும் தாய்நாடுகளிலும் புலம் பெயர் நாடுகளிலும் அது இன்னும் இறுக்கமான உதவி யாக அமையும் என்பதில் ஐயமில்லை.

# கோர்த்து விடும் செய்திகள்

■ **கறாராக நின்ற சம்பந்தர்**

கிழக்கு மாகாண சபைக்கு யார் அடுத்த முதலமைச்சர் என்ற பேச்சு வார்த் தையில் தமக்குத் தான் அந்தப் பதவி வேண்டும் என அடம்பிடித்த இசுலாமியக் கட்சிகளுடன் சம்பந்தர் மிகவும் கண்டிப்புடனும் கறாராகவும் நடந்து கொன்டா தாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நீங்கள் எங்களுடன் ஒத்து ழைத்து எமது கட்சியைச் சேர்ந்தவரை முதல்வர் ஆக்குங்கள் அல்லது நாம் சிங்களக் கட்சிகளுடன் இணைதந்து மாகாண ஆட்சியைப் பிடிப்போம் எனச் சம்பந்தர் சூளுரைத்தாராம். இதே கண்டிப்பை ஐயா கொழும்பிலும் கடைப் பிடிப்பாரா?

■ **தேர்வில் குதிரை ஓடிய பரம்பரை குதிரைகளையும் விட்டு ஓடியது**

சட்டக் கல்லூரியின் தேர்வுகளில் குதிரை ஓடிய தாத்தாவும் புத்தாவும் தங்கள் செல்லப் பிராணிக் குதிரைகள் நான்கை வெள்ளைப் பூ மாளிகையில் அனாத வராக விட்டு இரவோடு இரவாகத் தப்பி ஓடினராம். அது சரி நுவரேலியாவில் இருக்கும் வெள்ளைக் குதிரைக்கு என்ன நடந்தது?

■ **இதுவும் மக்களாட்சியாம்**

வெளிநாட்டுக்காரர்கள் பல கோடிகள் செலவு செய்து கட்சிதாவல்கள் பல செய்து நடாத்திய தேர்தலை மக்களாட்சிக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்கின்றன கோடிகள் செலவழித்தவர்களின் நாடுகளின் ஊடகங்கள்.

■ **அது போன மாதம் இது இந்த மாதம்**

இலங்கைச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் 130வது ஆண்டு விழாவிற்கு வந்து சிறப்பிக்குமாறு தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. பின்னர் ஜனவரி 19ம் திகதி விழா நடக்கும் போது விழா விற்கு வர வேண்டாம் என சட்டமா அதிபர் தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸுக்கு அறிவுறுத்தல்(அச்சுறுத்தல்?) விடுத்தாராம். அதனால் இலங்கை யில் வரலாற்றில் முதல் தடவையாக தலைமை நீதியரசர் இல்லாமல் சட்டமா திணைக்களத்தின் ஆண்டு விழா நடந்ததாம். குடியரசுத் தலைவருக்கு முதன்மை விருந்தினர் அழைப்பு விடுக்கும் போது பெயர் குறிப்பிடாமல் குடி யரசுத் தலைவர் என்று மட்டும் திட்டமிட்டு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததாம். அதனால் தற்போதைய குடியரசுத் தலைவர் முதன்மை விருந்தினரானார்.

■ **மீண்டும் ஆரம்பிச்சுட்டாங்கயா**

இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கே 13-ம் திருத்தத்தின் படி தமிழர்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் எனச் சொன்னதுடன் தமிழ்நாட்டில் உள்ள பேரினவாதிகளின் வால்பிடித் தலைவர்கள் துள்ளிக் குதிக்க ஆரம்பித்து விட்டனர். 13ஆல் ஒன்றும் ஆகப் போவதில்லை என எத்தனை தரம் சொன்னாலும் இவர்கள் மண்டையில் ஏறமாட்டுதா அல்லது பேரினவாதிகளிடம் மண்டியிட்டு நிற்கும் இந்தக் கும்பல் அவர்கள் சொல்லச் சொன்னதைச் சொல்கின்றார்களா?

*- ஊருளவாளி*

nachiyar events
PROUDLY PRESENTS
www.nachiyarevents.com
LONDON TAMIL MARKET
2015ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இலண்டன் தமிழர் சந்தை
2015
London Tamil Market
www.londontamilmarket.com
The countdown has started to the mega London tamil market trade show for the first time in London
11TH & 12TH APRIL 2015
AT 10.00 AM TO 8.00 PM
BYRON HALL, HARROW LEISURE CENTRE,
HARROW, MIDDLESEX, HA3 5BD LONDON
Activities for Kids | Huge Varity of stalls | Vibrant multicultural shows | Many exiting activities for all ages
அறுசுவை தாயக உணவுகளின் சங்கமம் Contacts; info@nachiyarevents.com T:0207 706 1122 M : 079 5184 7840 , 079 8882 6507

# வங்கக் கடலில் மூட்டிய தீ இன்னும் சுடுகிறது



**ச.ச.முத்து**

அங்கு தாயகத்தில் போராட்டகளத்தில் ஒரு சின்ன தடங்கல் நான் போனால் அதனை தீர்க்க முடியும் என்றுநம்பிக்கையுடன் சொல்லிசென்ற கிட்டுவல்லாதிக்கதுரோகத்தனத்தால் வங்ககடலில் ஒன்பது தோழர்களுடன் ஆகுதி ஆகி இருபத்துஇரண்டுவருசங்கள் ஓடிமறைந்துவிட்டன.

2009 மே க்கு பின்னர் ஏறத்தாள முழு இனமுமே ராஜதந்திரிகளாக பரிணமித்திருக்கும் ஒரு பொழுதில் கிட்டு போன்ற முழுமையான வீரமும், தியாகமும், அர்ப்பணமும், அதே நேரம் ராஜதந்திரமும் நிறைந்த வீரர்களே இந்த இனத்துக்கு தேவையாக இருக்கும் ஒரு தருணத்தில் இப்போது அவனதும் அவனுடன் வங்ககடலில் தீயுடன் கலந்த ஒன்பது மாவீரர்களின் நினைவு வந்துள்ளது. கிட்டுவின் எல்லாவிதமான ஆளுமைகளுக்குள்ளும் அதி சிறப்பானது எதுவென்றால் அவனது தேடல் தெரிந்து கொள்ளும் ஆவல். அதனைத்தான் சொல்லலாம்.

ஏறத்தாள பூஜ்ஜியத்தில் இருந்து தொடங்கிய பொழுதுகளில் இருந்தே கிட்டு இந்த விடுதலை அமைப்பினுள் இருந்ததால் எல்லாவிதமான வளங்கள் அவை பெரிதோ சிறிதோ அவை அனைத்தையும் விடுதலைக்காக எப்படி பயன் படுத்துவது என்பதற்காகவே அவன் தேடினான். இந்த தேடலுக்கு ஊடாகவே அவனது அனைத்து ஆளுமைகளும் வளர்ந்தன என்று சொல்லலாம். ஒரு பீல்ட்மார்சலையும் விட அதிகப்படியான போரியல்அறிவும் நுணுக்கங்களும் அவனுள் எழுந்தது எப்படி என்று பார்த்தால் அவன் தினமும் கற்றுக்கொண்டு இருந்ததாலேயே என்று சொல்லலாம்.

கற்பது என்றால் வெறுமனே புத்தகத்தை படிப்பது என்று அர்த்தம் அல்ல.அவன் பார்க்கும் கேட்கும், படிக்கும், அறியும் ஒவ்வொன்றையும் தனது தாயகவிடுதலைக்காக எப்படி பயன்படுத்துவது என்பதே அவனது கற்றலாக இருந்தது. 80களின் ஆரம்பத்தில் தலைவருடன் தமிழ்நாட்டில் நீண்டகாலம் நின்றே ஆக வேண்டும் என்ற ஒரு கட்டாயம் ஏற்பட்டபோது அந்த காலப்பகுதியையும் ஏதாவது கற்பதற்கே பயன்படுத்தினான்.தங்க இருப்பிடமும் உணவும் கேள்விக்குறியாக இருந்த அந்த பொழுதுகளில் நாளைய வளர்ச்சியை மனதில் கொண்டு தலைவரின் அனுமதியை பெற்று லித்தோ பிரிண்டிங், ஸ்கிறீன் பிரிண்டிங், புகைப்படம் அச்சிடுதல் என எல்லாம் கற்றான்.

பின்பொருநாள்மிககவலையுடன்சொன்னான் ராகங்களை பற்றி மதுரையில் படிப்பதற்கு தயாராகிகொண்டிருந்த பொழுதில்தான் தலைவரின் கட்டளைக்கு இணங்க பொன்னம்மானுடன் தாயகம் திரும்பவேண்டி வந்துவிட்டது என்று. இல்லையென்றால் எங்கள் விடுதலை கானங்களுக்கு இன்னும் செழுமை சேர்ந்திருக்க முடியும் என்று.. அவனது கற்றல் என்பது பிராந்திய வல்லாதிக்க புலானாய்வு ஓநாய்கள் எந்தநேரமும் அவனை வட்டமிட்ட பொழுதுகளிலும் இங்கிருந்து அவனுக்கு முன்பின் அறிமுகமே இல்லாத மெக்சிக்கோவில் ஒரு பெரும் ராஜதந்திர முன்னெடுப்புக்காக போய்நின்ற நேரத்திலும் அங்கும் ஓவியத்தை கற்றுக் கொண்டு அதனை எமது தமிழீழ எழுச்சிக்கு உரம்சேர்க்க பயன்படுத்திய எல்லைவரை நீண்டது.

போரியல் என்று எடுத்து கொண்டாலும் அவனது மிகச்சிறந்த பல்கலை நாட்களாக அண்ணையுடன் தமிழ்நாட்டில் நின்றிருந்த காலங்களே அமைந்திருந்தன.நாள் ஒன்றின் 24 மணிநேரமும் தலைவருடன் நின்றிருந்த அந்த நாட்களில் தலைவர் தனது பட்டறிவுகளை, நுணுக்கங்களை எல்லாம் கிட்டுவுடன் கதைக்க கதைக்க இவனும் கேள்வி கேள்வி களை தொடுத்து இன்னும் இன்னும் பெற்றுக் கொண்டான்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் முதலாவது சிங்கள காவல்நிலையம் மீதான தாக்குதல், முதலாவதுகண்ணிவெடிதாக்குதல்போன்றன வற்றில் கிட்டு பங்குகொள்ளமுடியாமல் தமிழ் நாட்டில் நின்றிருந்தாலும் இங்கே நடந்த தாக்கு தல்களின் ஒவ்வொரு அசைவுகளும் கிட்டுவாலும் தலைவராலும் அலசி அலசி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதனூடான பெறுபேறுகள் பாடங்கள் என்பன ஒரு பெரும் எதிர்கால தாக்கு தல்களுக்கு அடித்தளமான அறிவை பெற அமைந்தன என்றால் மிகை இல்லை.கிட்டு தமிழ்நாட்டில் இருந்து 82 இறுதியில் வந்து இறங்கும்போது முழுமையான தளபதிக்குரிய தயார்நிலையிலேயே தலைவரால் உருவாக்கப் பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றான். தேசிய விடுதலைப்போராட்டம் வேகம் பெறவேண்டிய நேரத்தை உணர்ந்த தலைவரின் வழிநடாத்தலில் தாயகத்தில் சீலனும் கிட்டுவும் சேர்ந்து மிகமிக வேகமாக செயற்பாடுகளில் இறங்குகிறார்கள்.

அதிலும் உமையாள்புரம் தாக்குதலில் தற் செயலாக வெடித்துவிட்ட கண்ணிவெடியால் தயார்நிலைக்குவந்த சிங்களராணுவ கவச வாகனம் போராளிகள் நின்றிருந்த இடத்தை நோக்கி செறிவான சூடுகளை கொடுத்தபடி வந்து கொண்டிருந்த போது கிட்டு தனது ஜி3 ஆல் மிக துணிவுடன் கவசவாகனத்தை சுட்டு நிலை தடுமாற வைத்ததால்தான் அன்று போராட்டம் காப்பாற்றப்பட்டது.அந்த சம்பவம் கிட்டுவின் நேரக்கணிப்பு,அசாத்தியமான அசாதாரணமான நிலையிலும்கூட நிலை தடுமாறாமல் குறிபார்த்து தாக்கு நடாத்தும் துணிவு, சாவைப் பற்றி கவலைப்படாத வீரம் என்பனவற்றை அமைப்பு முழுமையாக தெரிந்துகொண்டது.

அந்த துணிவும் தகுந்த தருணத்தில் உகந்த முடிவை எடுக்கும் ஆற்றலும்தான் நூற்றுக் கணக்கான வருடங்களுக்கு பிறகு தமிழர்கள் தமது மண்ணில் எவரது ஆக்கரமிப்பும் இன்றி சுதந்திரமாகநிற்கும் நிலையை உருவாக்கியது. யாழ் காவல்நிலைய தாக்குதலின் மறுநாள் பலாலியில் இருந்து யாழ் குருநகருக்கு வந்த கடைசி வாகன அணியுடன் யாழ்மண்ணில் சிங்களபடை நடமாட்டம் முடக்கப்பட்ட அந்த நாளில் இருந்து 2009 மே 18ம்நாள் வரைக்கும் தமிழர்களின் மண்ணின் ஏதாவது ஒரு பகுதி சுதந்திரமாகவே இருந்தது.இதற்கு முன்னுரை எழுதிய வீரன் என்ற முறையில் கிட்டுகாலத்தை வென்று நிற்பான்.மிகக்குறைந்த போராளிகளை வைத்து கொண்டு மரபுவழியிலான ஒரு ராணுவத்தை முடக்கிவைத்திருக்கும்போரியல் என்பது கிட்டுவின் அதிநுட்பம் நிறைந்த ஆற்றலே. இவை எல்லாவற்றையும் அவன் சாதிக்க காரணமாக அமைந்தது அவன் முழுமையாக இதனை பற்றியே சிந்தித்தவன் என்ற ஒரே காரணத்தால்தான்.

சும்மா இருப்பது என்பது அவனது அகராதியில் இல்லாத வார்த்தை.ஏதாவது ஒரு கொஞ்ச நேரம் கிடைத்தால்கூட 'அந்த இரசாயன மாஸ்ரரிடம் போவோம் என்று சொல்லி கரணவாய்பகுதியில்வாழ்ந்த அவரிடம்சென்றுஎப்படி குண்டுகளில்பாதுகாப்பாக இரசாயணபொருட்களை பொருத்துவது என்று பாடம் கேட்க தொடங்கி விடுவான். திடீரென களத்தில் பத்திரிகைக்கு அச்சு கோக்க போய்விடுவான். இல்லையென்றால் தெருவில் யாராவது வயோதிப தந்தையுடனோ தாயுடனோ அவர்களின் அரசியலை கேட்டபடி இருப்பான்.

இரவுகளின் நெடுநேரங்களுக்கு வாசிக்கும் ஒரு அசுரபசி அவனுக்கு..தலைவர் நீண்ட ஓய்வில்லாது புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு என்பது இதனை குறிப்பிட்டுத்தான். ஆம்... அவன் ஓய்வில்லாத ஒரு போராளி. இந்த இடத்தில் தலைவரின் ஒரு குணாதிசயம் பற்றி சொல்லி விட்டுத்தான் அங்கால் செல்ல முடியும்.

கிட்டுவின் மிகச்சிறிய வயதில் இருந்தே நட்பு வட்டத்தில் இருந்தவர்களாலேயே உணர்ந்து கொள்ள முடியாத அவனது ஆற்றல்களை எல்லாம் அடையாளம் காண எப்படித்தான் தலைவரால் முடிந்ததோ இன்னும் இன்றும் ஆச்சயர்யமே.அதிலும் கிட்டுவுக்கே தெரியாது அவனுள் ஆழ்ந்திருந்த ஆற்றல்களை எப்படித் தான் அவனுக்கே அடையாளம் காட்ட இந்த மகத்தான தலைவனால் முடிந்ததோ..

கிட்டு என்பது தலைவரின் உருவாக்கம். இப்படி மிகமிகச் சிறிய விடயம் மிகமிக பெரிய விடயம் என்று அவன் எதிலுமே பாகுபாடு பார்ப்பது இல்லை.செய்நேர்த்தி என்பது எல்லாவற்றிலும் இருக்கவேண்டும்.அது ஒழுங்காக இருந்தால் என்றாவது வெற்றி பெறலாம் என்பதில் நம்பிக்கை கொண்டவன் அவன். அவனது கவனிப்பில வெளியான களத்தில் பத்திரிகையாகட்டும், புலம்பெயர் தேசமொன்றில் மக்களுக்கு அறிவிக்க வேண்டிய ஒரு துண்டுப்பிரசுமாகட்டும் எல்லாவற்றிலும் ஏதேனும் பிழைகள் இல்லாமல் அழகாக நேர்த்தியாக மக்களுக்கு புரியும்படி இருக்கவேண்டும் என்பதே அவனது குறிக்கோள்.

இந்த செய்நேர்த்தி அச்சுஊடகத்தில் மட்டும் என்றில்லை ஒளிவீச்சில்,அமைப்பின் ஒலிபரப்பில், தலைவர் முதன்முதலில் அனிதாபிரதாப்க்கு கொடுத்த பேட்டியின்போது தலைவரின் தலை முடி இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தானே முடிவெட்டியது வரை அவனது ஈடுபாடு.

போராட வெளிக்கிட்டபோது எங்களைப் போன்றே ஒருவன் அவன். முழுமையாக அவன் தன் வீடு துறந்து வெளிக்கிட்ட அந்த நாளில் இருந்து வங்ககடலில் தீயுடன் சங்கமமாகும் வரைக்கும் போராடுவதற்காக கற்றுக்கொண்டு இருந்த மகத்தானவன் கிட்டு.

ஏராளம் கனவுகள் அவனுக்கு..

வாழவேண்டும் என்ற கனவுகள் அல்ல அவை. எமது மக்களை இப்படி இப்படி வளமாகவாழ்வைக்கவேண்டும்.உலகின் அனைத்து அறிவுகளும் எம் மண்ணில் கொண்டுவந்து குவிக்க வேண்டும் என்று ஆயிரமாயிரம் கனவுகள்.

அவை எல்லாம் வெறுமனே ஒரு கடற் பரப்பில்ஆதிக்கம்நாணிநிற்கதமிழரின்வீரத்தை சொல்லியபடி தீக்குள் வெந்த அந்த நாளுடன் முடிந்துவிடுமா..? முடிந்துவிடத்தான் விட முடியுமா..? கிட்டுவும் அவனுடன் மரணித்த தோழர்களும் எமக்கு என்றென்றும் சொல்லிக் கொண்டிருக்கும் பாடம் ஒன்றே ஒன்றுதான். விடுதலைப் போராட்டம் என்பது பகுதிநேர ஓய்வுநேர பொழுதுபோக்கு வேலை அல்ல. முழுமையான ஈகம்.

முழுநேரமும் விடுதலைக்காக வாழ்தல் போராடுதல் என்பதே அவர்கள் மரணிப்பின் செய்திகள் ஆகும். இந்த இருபத்திஇரண்டாவது நினைவுநாளில் இதனை மனம் செலுத்தி நினைவுகொள்வோம்.


**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹரோ)**

தேவை – பணிநிலை : உதவி சிவாச்சாரியார் – (Religious Worker)

தகைமைகள்: விண்ணப்பதாரர் சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் குறைந்தது 2 வருடம் சிவாச்சாரியராக பணி செய்திருக்க வேண்டும்.

கடமைகள்: வேத ஆகம விதி முறைப்படி ஆலயத்தில் பூஜை செய்திருக்க வேண்டும்.

வேதனம்: பிரித்தானிய வேதன முறைகளுக்கமைவானது.

விண்ணப்ப முடிவு திகதி: 20-02-2015

சுய விபரக் கோவையை ஆலய முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்.

Shri Sithi Vinayagar Thevasthanam (Harrow)
1, Forum House, Empire Way, Wembley, HA9 0AB
Email: shrisithivinayagar01@gmail.com

**வீட்டு வேலைக்கு ஆள் தேவை**

முழு நேரமும் வீட்டில் தங்கியிருந்து அல்லது இரவு நேரத்தில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவராகவும், குழந்தைகளைப் பராமரிப்பதற்கும் Harrow பகுதியில் பெண் பராமரிப்பாளர் தேவை.

30 வயதுக்கும் 55 வயதுக்கும் உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்

Contact Raj - 07440038793

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


**பிரித்தானியா:**
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

**கனடா:**
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**

## மணமகள் தேவை

1. 35 வயது, 5'2" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5298

2. 35 வயது, 5'9" Asylum seeker Engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5294

3. 31 வயது, 5'11" Work permit visa working as a civil engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5290

4. 37 வயது, 6'0" British and Australia citizen divorced working in a IT department living in Australia தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5284

5. 28 வயது, 5'8" work permit visa Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5281

6. 46 வயது, 5'7" British Citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5275

7. 34 வயது, 5'7" Graduate, Student visa in uk, working as a sale assistance, divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5274

8. 33 வயது, 5'5" Permanent Resident in uk, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5267

9. 32 வயது, 5'5" Self employed living in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5265

10. 52 வயது, 5'10" British citizen in uk graduate working in a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5263

11. 23 வயது, 5'3" born and brought up in uk working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5261

12. 31 வயது, 5'10" Asylum seeker in uk finished diploma தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5260

13. 32 வயது, 5'6" Permanent residence in UK graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5258

14. 35 வயது, 5'9" Asylum seeker in UK Software Engineering தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5256

15. 30 வயது, 5'8" Permanent residence in UK working in a super தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5255

16. 46 வயது, 5'6" German Citizen divorced working in supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4660

17. 30 வயது, 6'0" Engineer work permit visa working in a company in Singapore தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5254

18. 28 வயது, 5'8" Graduate work permit visa in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5251

19. 39 வயது, 5'7" Permanent residence divorced self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5250

20. 35 வயது, 6'0" work permit visa engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5249

21. 34 வயது, 5'4" 10 years visa in france working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5243

22. 33 வயது, 5'7" British citizen Engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5237

23. 33 வயது, 5'10" British citizen lawyer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5205

24. 28 வயது, 6'1" Permanent residence in uk working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5203

25. 31 வயது, 5'10" HSMP visa graduate working in a company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5197

26. 31 வயது, 6'0" Work permit visa graduate working as a manager in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5195

27. 33 வயது, 6'1" British citizen working in a food court தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5191

28. 38 வயது, 5'4" British citizen working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5190

29. 34 வயது, 5'9" Permanent residence in uk graduate working as a manager in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5185

30. 33 வயது, 5'6" Canandian citizen working as a sales manager in Canada தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5184

31. 38 வயது, 5'7" British citizen divorced working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5183

32. 31 வயது, 5'9" Permanent residence in uk working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5181

33. 25 வயது, 5'7" Permanent residence in uk working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5180

34. 41 வயது, 5'6" British citizen divorced graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

35. 27 வயது, 5'8" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5182

36. 25 வயது, 4'7" doctor in Ireland தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5177

37. 26 வயது, 5'8" British citizen graduate self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4544

38. 32 வயது, 5'6" Permanent residence in uk working in a financial sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5176

39. 42 வயது, 5'8" British citizen graduate working in a IT company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

40. 52 வயது, 5'6" Europe citizen in uk working in a medical sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5175

41. 33 வயது, 5'6" Permanent residence in uk graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5172

42. 32 வயது, 6'2" Permanent residence US graduate working in a company graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5164

43. 38 வயது, 5'9" Australian citizen doctor divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5163

44. 37 வயது, 6'2" Permanent residence in uk working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5159

45. 28 வயது, 5'5" British citizen graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5156

46. 35 வயது, 5'9" student visa living in UK for 10 years eligible for PR தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5151

47. 27 வயது, 5'7" graduate student visa working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5149

48. 31 வயது, 5'6" Entrepreneur visa self-employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5146

## மணமகன் தேவை

1. 25 வயது, 5'0" பிறப்பிலிருந்து வாய் பேச முடியாத மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5299

2. 30 வயது, 5'0" Graduate working as a Technical officer in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5291

3. 21 வயது, 5'1" இந்தியாவில் வசிக்கும் இலங்கைப் பெண்ணுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5236

4. 30 வயது, 5'1" British citizen Graduate.working as a Medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5282

5. 29 வயது, 5'5" Graduate divorced living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5264

6. 40 வயது, 5'6" Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5259

7. 30 வயது, 5'4" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5252

8. 29 வயது, 5'3" lawyer working in Australia தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5246

9. 24 வயது, 5'5" Graduate german citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5245

10. 24 வயது, 5'5" Engineer living in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4902

11. 24 வயது, 5'3" British citizen accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5215

12. 43 வயது, 5'4" British citizen divorced working as a care coordinator in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5189

13. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5169

14. 33 வயது, 5'4" British citizen graduate student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5162

15. 30 வயது, 5'7" British citizen chatered accountant in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5158

16. 29 வயது, 5'5" British citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5154

17. 33 வயது, 5'7" Canadian citizen graduate working in a mediacal sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5125

18. 39 வயது, 5'3" German citizen graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132

19. 29 வயது, 5'8" British citizen graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

20. 25 வயது, 5'3" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5126

21. 47 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5117

22. 25 வயது, 5'3" British citizen graduate working in a private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

23. 30 வயது, 5'4" German citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5089

24. 29 வயது, 5'5" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5086

25. 49 வயது, 5'3" british citizen divorced working as a cashier தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5077

26. 41 வயது, 5'5" british citizen divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5075

27. 29 வயது, 5'3" british citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5073

28. 33 வயது, 5'0" Graduate, Working in Government sector in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5049

29. 24 வயது, 5'3" british citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5070

30. 25 வயது, 4'7" asylum seeker in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5065

31. 42 வயது, 5'2" British citizen divorced living with 2 children தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5064

32. 25 வயது, 5'5" British citizen, looking after the business தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5059

33. 26 வயது, 5'3" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5054

34. 28 வயது, 5'2" Graduate, British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5053

35. 21 வயது, 5'3" Residing in Srilanka, studied computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5052

36. 24 வயது, 5'2" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5047

37. 27 வயது, 5'0" Residing in Srilanka, Completed Olevel தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5042

38. 37 வயது, 5'2" Graduate, Working as a Teacher in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5012

39. 35 வயது, 5'4" Graduate, Working as a Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4827

40. 31 வயது, 5'5" German citizen lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5034

41. 35 வயது, 5'6" Canadian citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5020

42. 40 வயது, 5'4" Graduate, Malaysian Nationality ,PR in Australia, Working as a Doctor in Auatralia தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5010

43. 27 வயது, 5'6" Graduate, Australian citizen, Working in a Medical Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5006

44. 33 வயது, 5'2" Graduate, Canadian citizen, Working at Ministry of Health தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5000

45. 37 வயது, 5'5" Residing in Srilanka, doing computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5005

46. 21 வயது, 5'1" Graduate, Canadian Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5003

47. 22 வயது, 5'0" Residing in Sri Lanka, doing computer course தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4998

48. 40 வயது, 5'5" Divorced, France citizen , Self-employed தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4996

49. 29 வயது, 5'2" Graduate, Residing in srilanka, working as AG Officer of Land Section தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4999

50. 37 வயது, 5'2" Residing in Sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4992

51. 33 வயது, 5'3" Divorced, Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4991

52. 18 வயது, 5'4" Graduate, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4989

53. 26 வயது, 5'1" Graduate, Canadian citizen, Working in an insurance company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4986

54. 28 வயது, 5'7" Graduate, British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4980

55. 36 வயது, 5'2" Graduate, UK PR, working as a Music teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4977

56. 33 வயது, 5'1" Graduate, Residing in India, working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4976

57. 32 வயது, 5'0" Permanent residence in uk divorced accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4961

58. 41 வயது, 5'5" British citizen divorced working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4960

59. 34 வயது, 5'4" Graduate, British citizen working as a Business Manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4957

60. 30 வயது, 5'8" Canadian citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4941

61. 33 வயது, 5'4" temporary visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

62. 51 வயது, 5'4" Permanent residence in uk working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656

63. 48 வயது, 5'3" Divorced,British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4903

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# யாழ் நிலத்தடி நீருடன் கலக்கிறது

**மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

எந்த ஒரு சாதனமும், அதன் உற்பத்தி செயற்பாட்டின்போது வெளியாகும் கழிவு பொருட்களை பாதுகாப்பற்ற முறையில் வெளியே விடுவது அனைத்துலக விதிகளுக்கு முரணானது. சுன்னாகத்தின் மின் நிலையம் பாதுகாப்பற்ற முறையில் அதன் கழிவு எண்ணெயை வெளியேற்றியதன் விளைவாக அதனை அண்டிய பகுதிகளில் உள்ள 800க்கும் மேற்பட்ட கிணறுகளுள் கழிவு எண்ணெய் கலந்துள்ளது. குடிநீருடன் கலந்துள்ள இந்த நீரைப் பருகுவதால், காலப்போக்கில் மக்கள் பல தொல்லைகளுக்கு ஆளாக நேரிடும். மக்கள் மட்டுமல்ல, கால் நடைகளும் பாதிப்புக்கு உள்ளாகும். பயிர் செய்கையும் பாதிப்புக்கு உள்ளாகும். பாரிய மரங்கள்கூட அழிந்தொழியும் சூழல் தோன்றும். மொத்தத்தில் உடன் நடவடிக்கை எடுத்து இந் நிலை தவிர்க்கப் படாவிட்டால் முழுக் குடா நாட்டு மக்களுமே நோயாளிகளாக இடம் பெயர வேண்டிய சூழல் தோன்றும்?.

யாழ் குடாநாடு தனது குடிநீருக்கும் பயிர்ச் செய்கைக்கும் தனது நிலத்தடியில் உள்ள ஐந்து நிலத்தடி நீர்த்தேக்கங்களில் தேங்கும் நீரையே நம்பி உள்ளது. இந்த நீர்த் தேக்கங்களிலேயே பிரதமமானதாகத் திகழும் வலி காமம் தேக்கத்தின் உள்ளேயே இக்கழிவு எண்ணெய் கசிகிறது. நன்நீருடன் கழிவு எண்ணெய் கலப்பதை தடுக்கலாம் என்ற எண்ணத்துடன் 150 அடி ஆழத்தில் 12 குழிகள் வெட்டப்பட்டு அக் குழிகளின் உள் கழிவெண்ணெய் அனுப்பப் பட்டது. அது பயன்தரவில்லை. எண்ணெய் நீருடன் கலக்கிறது என்பதை தேசிய நீர் வடிகால் சபையின் 2011 - 2012 அறிக்கையே சுட்டிக் காட்டியது. சென்ற ஆண்டு வரை மக்கள் கவனத்தை அது ஈர்க்கவில்லை. சென்ற ஆகஸ்டில் மாகாணசபை அலுவலர்கள் உட்பட பலரும் கழிவு எண்ணெய் கலந்த கிணறுகளைப் பார்வையிட்டனர். அவ்வளவுதான். இதுவரை உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்ட தற்கான சான்றுகள் இல்லை.

குடாநாட்டைப் பொறுத்த மட்டில் இது பாரதூரமான பிரச்சனை. உடன் நடவடிக்கை தேவை. கழிவு எண்ணெயுடன் இரசாயனப் பொருட்களும் கனதி மூலகங்களான ஈயம், கட்மியம், ஆசெனிக் ஆகியவையும் கலந்துள்ளதால், இந்நீரை குடிக்கும் மக்கள், தோல் நோய்களுக்கு ஆளாக நேரிடும். எம்மை அறியாமலே புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, மலட்டுத் தன்மை ஆகியவற்றிற்கு உள்ளாகுவோம். பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகவும் மூளை குன்றியவர்களாகவும் பிறப்பர். இது சம்பந்தமாக ***ஒரு பேப்பர்*** தனது டிசெம்பர் 19 இதழில் (232) சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமையத்தின் அறிக்கை ஒன்றினை அதன் 6 ம் பக்கத்தில் வெளியிட்டிருந்தது. சென்ற இதழில் (233) 14 ம் பக்கத்தில் எஸ் யோசெப்பு என்பவரால் ஆங்கிலத்தில் ஒரு அறைகூவல் விடப்பட்டிருந்தது. வாசிக்கத் தவறியவர்கள் அவற்றை இணையத்தளத்தில் பாருங்கள்.

**எம்மை அறியாமலே புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, மலட்டுத் தன்மை ஆகியவற்றிற்கு உள்ளாகுவோம். பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகவும் மூளை குன்றியவர்களாகவும் பிறப்பர்.**

இது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த வல்லது என்பதற்கு 1971ல் இராக்கில் நடந்த ஒரு நிகழ்வு சிறந்த எடுத்துக்காட்டு. விதைப்புக்கு தேவையான கோதுமைத் தட்டுப்பாடு காரணமாக பூஞ்சணவன் தொற்றுநீக்கியாக மிதைல்மெர்க்குயிறி பயன்படுத்தப்பட்ட விதைக் கோதுமை மெக்சிக்கோவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அப்போது நிலவிய உணவுத் தட்டுப்பாடு காரணமாக அந்த விதைக் கோதுமையின் ஒரு பகுதியை கோழிகளுக்கு உணவாகப் போட்டு இருவாரங்கள் ஏதும் நிகழாது இருந்தமை கண்டு தங்கள் உணவாக உட்கொண்டார்கள். 6500 ஆக மதிப்பிடப்பட்டிருந்த இறப்பு எண்ணிக்கை தகுந்த பிராயச்சித்த நடவடிக்கைகள்மூலம் அதன் பத்தில் ஒன்றாக குறைந்தது.

2012ல்நீர் வடிகால் அதிகாரசபையின் அறிக்கை கண்டதும் அரசுஉடன்நடவடிக்கைஎடுத்துமுழுக் கழிவெண்ணையையும் சேகரித்து நவீன முறையில் சுத்திகரிப்புசெய்து நீர் மேலும் மாசடையாது பாதுகாத்திருக்க வேண்டும். அரசு தவறுகின்றது என்றால் தமிழ் மக்களின் மாகாண சபைகூட வாய் திறப்பதாகத் தெரியவில்லை. அனைத்துலக சட்டங்களுக்கமைய குடிநீருடன் நஞ்சு கலக்க அனுமதித்தல் பாரதூரமான மனித உரிமை மீறல். அரசு பதில் சொல்லியாக வேண்டும். ஆனால் தமிழ் மக்களில் பலர் புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, மலட்டுத் தன்மை ஆகிய வற்றிற்கு உள்ளான பின்பு அனைத்துலக மன்றுகளில் வழக்குத் தாக்கல் செய்வது எந்த வகையிலும் புத்திசாலித்தனமான செய்கையாக மாறாது.

இங்கு கிடைக்கும் சில தவல்கள் கவலை தருபவையாக உள்ளன. ஒரு சொட்டுக் கழிவு எண்ணெய் என்றாலும் நிலத்தடி நீருட் செல்லாது தடுக்கும் அடிப்படை நடவடிக்கையைப் பற்றிக் கவலைப்படாது மாசு படிந்த கிணற்று நீருக்குப் பதிலாக வேறு இடங்களிலிருந்து நீர் விநியோகம் நடைபெறுகிறது என்பதும், பாதிக்கப் பட்ட இடங்களிலிருந்து மக்கள் புலம்பெயர சிபார்சு செய்யப் படுகிறார்கள் என்பதுமே. இது எதோ கபடமுள்ள திட்டம்போல் தெரிகிறது. நோயை முற்றவிட சில வேளைகளில் இப்படியான நடவடிக்கைகள் மூலமே திட்டமிட்டு தட்டிக் கழிப்பார்கள். அடிப்படையில் ஒரு சொட்டுக் கழிவுஎண்ணெய் என்றாலும் நிலத்தடிநீருட் செல்லாது தடுக்கப் படவேண்டும் என்பதை உள்ளத்தில் கொண்டு கிணற்று நீருக்குப் பதிலாக வேறு இடங்களிலிருந்து நீர் விநியோகம் செய்வதில் தவறில்லை. அப்படி இல்லாவிடில் அது கபட நோக்கம்தான்.

வருமுன் காக்கப்பட வேண்டும். குடிநீருடன் நஞ்சு கலக்கின்றது என்றால் அதற்கு தேவையான நிவாரணம் உலக நாடுகளிலிரந்து நிச்சயம் கிடைக்கும். இதை உலகின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும். அரசு இதைச் செய்யத் தவறும் பட்சத்தில் மக்கள் எழுச்சிமூலம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். எமது மாகாணசபையும் இதில் முக்கிய பங்கு வகிக்கலாம். இவ்வாரச் செய்திகளின்படி குடா நாட்டிலுள்ள மருத்துவர்கள் அழுத்தம் கொடுப் பதில் தங்கள் பங்களிப்பைத் தொடங்கி விட்டார்கள். முழுத் தமிழ் சமூகமுமே தம் பங்களிப் பைச் செய்யவேண்டும்.

# வியூக முக்கியத்துவம்..

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வெவ் வேறு பிராந்திய மற்றும் பூகோள வியூகங்களை ஏதோ ஒரு விகிதமளவிற்கு குழப்பவோ முன் னெடுக்கவோ அவர்கள் உதவி புரிந்து வந்துள் ளார்கள். இத்தகைய பொருள்படக் கூறின், ஈழத் தமிழர்களுக்கு என்று ஏதோ ஒரு வியூக முக்கியத் துவம் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. ஈழத் தமிழர்களின் பேரம் பேசும் சக்தியின் பிரதான கூறாகவும் அது இருந்து வந்துள்ளது.

தமது வாக்குகளுக்கு இப்படியொரு வியூக முக்கியத்துவம் உண்டு என்று தெரிந்திருந் தால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு ஈழத் தமிழர்கள் யாரோடு எத்தகைய பேரங்களை வைத்திருந்திருக்க வேண்டும்? கூட்டமைப்பா னது அத்தகைய பேரங்களைக் குறித்து வெளிப் படையான ஆழமான வாதப்பிரதிவாதங்களை நடத்தியிருக்கின்றதா? இதுமிகக் கொடுமையான ஒரு நிலை. தமக்குள்ள வியூக முக்கியத்துவம் பற்றியோ அதாவது, பேர முக்கியத்துவம் பற் றியோ எத்தகைய விழிப்புணர்வும் இன்றியே இச்சிறிய மக்கள் கூட்டம் வாக்களித்திருக்கிறது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இரத்தம் சிந்திய ஒரு மக்கள் கூட்டத்தை ? சுகப்படுத்தப் படாத கூட்டுக் காயங்களிலும், கூட்டு வடுக்களிலும் அழுந்திக் கிடக்கும் ஒரு மக்கள் கூட் டத்தை இறந்துபோனவர்களையும் காணாமல் போனவர்களையும் இன்றுவரையிலும் கணக் கெடுக்க முடியாமல் தவிக்கும் ஒரு மக்கள் கூட் டத்தை தமது வியூகத் தேவைகளுக்காக கையாண்டுவரும் சக்திமிக்க நாடுகள் இனி இந்த மக்கள் கூட்டத்திற்குத் தரப்போகும் தீர்வு என்ன? நீதி என்ன?

ராஜபக்சவை அவரது பங்காளிகளை வைத்தே கவிழ்த்த மேற்கு நாடுகளும், இந்தியாவும் தமிழ் மக்களுக்குரிய நீதி எனப்படுவது வெற்றி வாதத் தையும் அதன் பங்காளிகளையும் தண்டிப்பதில் இருந்தே தொடங்குகின்றது என்பதை ஏற்றுக் கொள்ளுமா?

அண்மையில் பாப்பரசர் மடுவிற்கு வந்த போது அவரிடம் நீதி கேட்டுச் சென்ற தமிழ் மக்கள் தமது கைகளில் வைத்திருந்த சுலோக அட்டைகளில் பின்வருமாறு எழுதி வைத்திருந்தார்கள். "இனப்படுகொலைக்கான தீர்வே இனப்பிரச் சினைக்கான தீர்வுமாகும்".

பாப்பரசரும் தனது பிரதான உரையில், "சுகப்படுத்தலுக்கான முன்னெடுப்புக்களில் உண்மையைப் பின் தொடர்வதும் உள்ளடக் கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

இது பழைய காயங்களைத் திறப்பதற்காக அல்ல. மாறாக நீதியை மேன்நிலைப்படுத்து வதற்கும் ஐக்கியத்திற்கும் ஆற்றுப்படுத்தலுக் குமான அவசியமான வழிமுறை இது என்ப தால்" என்றுகூறியிருந்தார்.

பாப்பரசரின் வருகையின் போது உரை நிகழ்த்திய அரசுத் தலைவர் மைத்திரி "குரூர மான பயங்கரவாத பிணக்கை வெற்றிகொண்ட பின் எமது மக்கள் மத்தியில் சமாதானத்தை யும் நட்பையும் எனது அரசு மேன்நிலைப்படுத் துகிறது ? என்று கூறியதா உண்மை? அல்லது பாப்பரசரை வரவேற்ற தமிழ் மக்கள் ஏந்தியி ருந்த சுலோகங்களில் தொனித்தது போல இனப் படுகொலைக்கு எதிரான நீதிதான் இனப்பிரச் சினைக்கான தீர்வும் என்பதா உண்மை?

பொது எதிரணி இந்த உண்மைகளை உள் வாங்குமா? அல்லது அரபு வசந்தம் சில அரபு நாடுகளில் அரபுப் பனிக்காலம் ஆகியது போல சிறிலங்காவின் வசந்தமும் ஒரு கோடையாக மாறினால் மேற்கு நாடுகளும் இந்தியாவும் என்ன செய்யும்?

வியூக முக்கியத்துவம் மிக்க தமிழ் மக்கள் வெளிச்சக்திகளால் கையாளப்படுவதற்குப் பதிலாக வெளிச்சக்திகளை எப்பொழுது வெற்றிகர மாகக் கையாளப்போகிறார்கள்?

*நன்றி - www.nillanthan.net*

*புகைப்படம் - www.abc.net.au*

# மாற்றத்தின் பின்னும்..

*(21ம் பக்கத் தொடர்ச்சி)*

அம்மா படலையடி வரைக்கும் வருகிறார். "இளையவளுக்கு கெம்பஸ் கிடைச்சிருக்கு. போகவேகாசில்ல. எனக்கெல்லாம் ஏன் கெம்பஸ் கிடைச்சது" இந்த சந்தர்ப்பம் வேறயாருக்கும் கிடைச்சிருக்கலாம் எண்டு அழுகிறாள் தம்பி. எப்பிடியாவது அவர கண்டுபிடிச்சித்தாங்கோ" இயலாமையும், ஆற்றாமையும் அந்த அம்மாவின் முகத்தில் குரூரமாகத் தோன்றி நிற்பதைப் பார்க்கிறேன். எந்த ஆறுதலையும் சொல்ல முடிய வில்லை. அந்த முள் பற்றை தெருவுக்கு வருகிறேன். மூத்தமகன் என்னைத் தொடர்கிறார்.

"அப்பாவ எப்பிடியாவது கண்டுபிடிச்சிடுங்க அண்ண" அவருக்கு சொல்லவும் என்னிடம் பதில் இல்லை. எதைத்தான் சொல்லமுடியும்? நீங்களாக இருந்தால் எதைச் சொல்லியிருப்பீர்கள்? படங்களைத் தாங்கியபடி தொலைந்தவர்களைத் தேடியவர்கள் இன்று பிரச்சார நோட்டீஸ்களையும் காவியபடி தொலைந்தவர்களைத் தேடத் தொடங்கியிருக்கின்றனர்.

எனவே மலர்ந்துவிட்டதாக சொல்லப்படும் ஜனநாயகத்தை இந்த வழியாலும் வரச்சொல்லுங்கள் என்று யாருடமாவது கெஞ்சவேண்டும் என்று யோசித்தபடியே நடந்து அவர்களிடம் இருந்து மறைகிறேன். இந்த இடத்தில்தான் முள் பற்றைக்காடுகள் அழகானவையாகத் தெரிகின்றன.

குறிப்பு - ஆனந்தபுரம் பொக்ஸ் அடி- இறுதிப் போர் வேளையில் புதுக்குடியிருப்புக்கும் முள்ளி வாய்க்காலுக்கும் இடைப்பட்ட ஆனந்தபுர கிராமத்தில் பெரும் சண்டை நடந்தது. இராணுவம் செய்த மிகப்பாரிய சுற்றிவளைப்புத் தாக்குதல் அது. இந்தத் தாக்குதல் புலிகளுக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது. அதனையே மக்களின் மொழியில் 'ஆனந்தபுர பொக்ஸ் அடி' என நினைவுவைத்திருக்கின்றனர். பொக்ஸ் அடி புலிகளின் போரியல் மொழி. புலிகளின் தளபதிகளில் ஒருவரான பால்ராஜ் உருவாக்கிய சண்டைமொழி)



**அனையாத தீபம்...**

அக்கினிக் குஞ்சொன்று
அகல் விளக்கானது
ஆதிக்க வெறி கொண்டோர்
அணைத்தே விட்டனர்
புத்தரும் காந்தியும்
தோற்றே போயினர்
எத்தகர் செயலினால்
எரிந்தே போனது
வங்கத்தில்
எங்கள் காவியங்கள்..

# 'ஜ'ய்யே - ஷங்கருக்கு ஒரு அரங்கக் கலைஞரின் கடிதம்...

தமிழ் சினிமா கண்ட மாபெரும் பிரம்மாண்ட இயக்குநர் ஷங்கர் அவர்களுக்கு,

தங்களின் "ஐ"(ய்யே) காவியம் கண்டேன். விக்ரம் போன்ற வித்தியாச நடிப்பு வெறி கொண்டவர்களும், ஆஸ்கர் ரவிச்சந்திரன் போன்ற தயாரிப்பாளர்களின் பணவெறிக்கும், கோடிக்கணக்கான ரசிகர்களின், ரசிக மனோ பாவத்திற்கு பின்னுள்ள பெண்களின் மீதான பாலியல் வெறிகளுக்கும், ஹீரோயிசம் எனும் பொறிக்கித்தனங்களுக்கும், நாயகவழிபாட்டிற் கெல்லாம் தஞ்சம் தரும் ஆலயம், "a Shankar film" தான் என்பதை அறியாதார் யார்?!

நியாயமான ஒரு படைப்பை புரிதலின்றி மதத் துவேசமாக சித்தரித்து அப்படைப்பையும், படைப்பாளியையும் பின்வாங்க செய்யும் அதேவேளையில் தான் உங்களின் படைப்புச் சுதந்திரத்தின் வெற்றியையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறேன். இதே மதத் துவேசத்தை காரணம் காட்டி 'டாவின்சி கோட்' தடை செய்யப்பட்ட நாட்டில், இதே மத துவே சத்தை காரணம் காட்டி தற்காலிக தடை செய்யப் பட்டு, அதுவே பெரும் விளம்பரமுமாகி வணிக வெற்றியும் அடைந்த 'விஸ்வரூபம்' படம் வெளியானதும் இங்கேதானே..

ஆனால், தாய்நாட்டு அகதிகளான, பாலியல் வெறியர்களான, அருவெருப்பான சமூக விரோ திகளான எங்களை எப்படியும் சித்தரிக்கக்கூடிய அருகதை கொண்ட தங்களைப் போன்ற மகா கலைஞர்களை மட்டும் யாரும் எதுவும் கூறப் போதில்லை.

சமீபகாலமாக வலைதளங்களில் திரைப் படங்களை துவைத்து, கிழித்து தொங்கபோடும் வலைதள விமர்சகர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானவர்களுக்குகூட இந்த 'ஜ' படம் அவர்களின் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்ற வில்லை என்ற ஆதங்கம் தான். இம்மொக்கை கதை, திரைக்கதையை கலாய்த்த அளவிற்கு 'ஒன்பதுகளை' காயப்படுத்தியதைப் பற்றி கண்டு கொள்ளவில்லை. இன்னும் கூடுதலாக ஒரு விமர்சகர் "இதில் ஒரு 'நயன்'தாரா வேறு வில்லன்..!!" என்று எழுதியிருக்கிறார். குறைந்த பட்சம் இந்த ஆபத்தான ரசனையை வளப்படுத் திய விதத்தில் நீங்கள் உள்ளம் குளிர்ந்திருப் பீர்கள் என்று நம்புகிறேன்.

பிரம்மாண்டம், பிரம்மாண்டமான செட், பிரம் மாண்டமான கலைஞர்கள், அதிபிரம்மாண்ட மான பட்ஜெட் தாண்டி 'அதற்கும் மேல' யும் சில விசயங்கள் இருப்பதை தங்களின் பிரம்மாண்ட மூளைக்கு முன் பகிர்ந்து கொள்ள இச்சிறுமதி யாள் விரும்புகிறேன்.

'சிவாஜி' படத்தில் போகிற போக்கில் திரு நங்கைகள் மீது காறி உமிழ்ந்ததை நினைத் துப் பார்க்கிறேன். சின்ன கலைவாணர் அவர் கள் "இப்பத்தான் ஆப்பரேசன் பண்ணிட்டு வந் திருக்கு" என்று ஏளனமாக கூறியதும் "சீ.. சீ..." என்று அருவெறுப்புடன் எங்கள் சூப்பர் ஸ்டார் விலகிச் சென்றதை தூசி தட்டி தற்போது, "அதற்கும் மேலாக" பிரம்மாண்டமாய் காறி துப்பியதைத் தான் பேச விரும்புகிறேன்.

வழக்கமான நாயகன் போலவே இதிலும் விக்ரம் அவர்கள் மிக ஆண்மையுடன் வில்லனை பார்த்து, முதல் பத்து நிமிடங்களிலேயே "டே... பொட்ட.." என்கிறார். நான் அதிர்ச்சியடைய வில்லை, நானும் என்னைப் போன்ற பொட்டை பிறவிகளும் தமிழ் சினிமாவின் இத்தகைய தொடர் பதிவுகளால் இவற்றிக்கு நன்கு பழகி யிருக்கிறோம். விக்ரம் அவர்களுக்கும் கூட இந்த வசனம் ஒன்றும் புதிதல்ல, தனக்கு மிகப்பெரிய ப்ரேக் கொடுத்த பாலா அவர்களின் 'சேது' படத்தில் கூட "டே.. இப்பிடி பண்ணி பண்ணியே ஒருநாள் நீ அஜக்காவே மாறப் போற..." என்று சொன்னவர்தான். அதற்கு பிறகு இச்சொல்லா டலை அவர் பயன்படுத்தாத படங்களின் எண் ணிக்கைதான் குறைவாக இருக்கக்கூடும்.

'சதுரங்க வேட்டை' என்னும் சமூக அக்கறை கொண்ட படமியக்கிய திரு.வினோத் அவர் களே 'பொட்ட' என்று சொல்லாடலை எளிதாக பயன்படுத்துகையில், அதனை பிரபல திரை விமர்சகர்களான கேபிள்சங்கர்களும் சப்பைக் கட்டு கட்டும் போது, உங்களிடம் மட்டும் அந்த கரிசனத்தை நாங்கள் எதிர்பார்க்கவா முடியும்.

அதுசரி உங்களால் ''பொட்டை'' என்று அறி யப்படும் நாங்கள் உங்கள் ஆண்மை பராக் கிரமத்திற்கு முன் அப்படி என்னதான் குறைந்து விட்டோம்?! உள்ளம் முழுதும் பெண்மை குடியிருப்பதை அறிந்து எம்பாலினத்திற்கு நேர்மையாக இருக்கிறோமே "அதற்கும் மேலாக" வா உங்கள் பராக்கிரமம் சிறந்தது? திருநங்கையாக குடும்பத்தையும், அது தரும் அரவணைப்பையும், பாதுகாப்பையும் விட்டு வெளிவர துணிச்சல் இருக்கிறதே 'அதற்கும் மேலாக'வா உங்கள் பராக்கிரமம் சிறந்தது? இந்திய பிரஜைக்குரிய சகல உரிமைகளும் மறுக்கப்பட்டு தாய்நாட்டு அகதிகளாவோம் என்பதை அறிந்தும் திருநங்கையாக குடும் பத்தை விட்டு வெளியேறுகிறோமே 'அதற்கும் மேலாக'வா உங்கள் பராக்கிரமம் சிறந்தது? பெற்றோர்களின் சொத்துசுகம் எதுவிமில்லா மல் சூனியத்திலிருந்து எங்கள் வாழ்க்கையை நிர்கதியாகத் துவங்கி அடுத்தவர்களை சாரா மல் வாழ்கிறோமே 'அதற்கும் மேலாக'வா உங்கள் பராக்கிரம்ம் சிறந்த்து? தெருவிலும், வெள்ளித்திரையிலும் உங்கள் ஆண்பராக்கி ரசாளிகள் சொல்லாலும், செயலாலும் எங்கள் மீது நிகழ்த்தும் வன்முறைகளை துணிவோடு எதிர்கொண்டு தொடர்ந்து செல்கிறொமே 'அதற்கும் மேலாக'வா உங்கள் ஆண்மை பராக்கிரமம் வாய்ந்தது? அல்லது 'பொட்டை கள்' சோத்தில் உப்பு போட்டு தின்பதில்லை என்பது உங்களின் திண்ணமான எண்ணமா?

'ஜ' என்ற தலைப்பிற்கேற்ப ஐந்து வில் லன்கள் வேண்டுமென்று யோசித்தது சரி. அதற் கும் மேலே, கதைக்களத்திற்கேற்ப அதே துறை சார்ந்த வில்லன்களாக வைத்த உங்களின் மெனக்கெடலை பாராட்டுகிறேன்.. அதற்கும் மேலாக, பிரம்மாண்டமாக, ரிச் லுக்குடன், அதே சமயத்தில் வித்தியாசமான, காமடியான், வில்லன் வேண்டுமென, ஒரு ஸ்டைலிஸ்டாக திருநங்கையை வைத்ததையும், அதுவும் ஆத் தண்டிக்காக இருக்க வேண்டுமென்பதற்காக உலக அழகியையே, அழகாக காட்டிய நிஜ ஸ்டைலிஸ்ட் ஒஜாஸ் ரஜினியையே (எந்திரன் படத்தில் ஐஸ்வர்யா ராயை அழகாய் காட்டி யவர் இவர்தான்.. மொழி தெரியாத அவருக்கு என்ன கதை சொல்லி நடிக்க வைத்தீர்கள் என் பது தங்களுக்கே வெளிச்சம்.) நடிக்கவைத்த தில் நிஜமாகவே நான் மெரசலாகிட்டேன் ஆனால், அந்த கீழ்த்தரமான பாத்திரத்திற்கும் அவரது நிஜப் பெயரான ஒஜாஸ் என்பதையே வைத்த தன் மூலம் என்ன சொல்ல வருகிறீர்கள் இயக்குநரே?

தான் வியக்கும், விரும்பும் அழகியாலேயே இந்தியாவின் நம்பர் ஒன் ஸ்டைலிஸ்ட் என்று அறிமுகப்படுத்தப்பட்ட போதும், ஒஜாஸ் மீது நாயகனுக்கும், நண்பனுக்கும் அவ்வளவு கீழ்த்தரமான பார்வை ஏன் வருகிறது?. எல்லா இன்னல்களையும் கடந்து பல திருநங்கைகள் பல துறைகளில் சாதித்து வருகிறார்கள் தான். ஆனாலும், அவர்கள் ஏளனத்திற்குரியவர்கள், என்பதை பார்க்கும் ரசிகர்கள் மனதில் உறுதி யாக விதைக்கத்தானே?! இதைச் செய்தீர்கள்?. தமிழ் ரசிகர்களே திருநங்கைகளை கலாய்க்க, 'காஞ்சனா' (அந்தப் படம் திருநங்கைகளை சற்று கண்ணியமாகிய படம் என்றாலும், இறுதியில் அதையும் கலாய்க்க பயன்படுத்தும் ரசிகர் களை எண்ணி வியக்கேன்.. !!) என்று அழைக்க அப்டேட் ஆகியிருக்கும் நிலையில் "ஊரோரம் புளியமரம்.." என்று பாடுவது எதனால்? நீங்கள் எதிர்பார்த்ததை போலவே அந்த காட்சியில் ரசிகசிகாமணிகள் அரங்கம் அதிர சிரித்தார்கள் தான். என்ன அந்த அருவெறுப்பான சிரிப்பை மீறி, முதல்வன் படத்தில் வரும் புகழின் அம்மா வைப்போல என்னைப் போன்ற 'பொட்டை' களை பெற்ற அம்மாக்களின் கேவல்கள் உங்கள் காதை எட்டியிருக்காது.

அதெப்படி, வெறும் திரையிலும், போஸ்டர் களிலும் மட்டுமே கண்ட ஒரு அழகியை, அவள் அழகி என்பதால் மட்டுமே ஒரு ஆணழகன் காதலித்துவிடமுடியும், அதுவும் உண்மையான, நியாயமான, கல்மிஷம் இல்லாத காதலாகிறது. குற்றவுணர்வாலும், பரிதாபத்தாலும் ஒரு அழகி யால், ஆணழகனை பரிசுத்தமாக காதலிக்க முடிகிறது. ஆனால், ஒரு திருநங்கையின் காதல் உணர்வு மட்டும் எப்படி தங்களுக்கு அவ்வளவு நாராசமானதாகிறது. அவள் காதல், நாயக னால் மட்டுமல்ல, நண்பனாலும், நாயகியா லும், படத்தில் வரும் விளம்பர பட இயக்குந ராலும் அருவெறுப்பாகவே பார்க்கப்படுகிறது. அதாவது இப்படத்தின் இயக்குநராகிய நீங்கள் வெறுப்பதைதான் சூசகமாக கூறுகிறீர்கள் இல்லையா?

அவரை ரிச்-திருநங்கையாக, காட்ட ஆரம் பத்தில் அழகான கேமரா ஆங்கிளை பயன்படுத் திய நீங்கள். அவரது காதல் புறக்கணிக்கப்படும் கணம் முதல் அவரை அசிங்கமாக மட்டுமே காட்ட பயன்படுத்திய காமிரா ஆங்கிளில் அசிங்கமாக தெரிந்தது ஓஜஸ் மட்டும் இல்லை நீங்களும்தான் என்பதை உணர்ந்தீர்களா?

இவ்வளவு வரைக்குமே உங்களிடம் நாகரீ மாகத்தான் கோபம் கொள்ள நினைத்திருந் தேன். ஆனால், '9' என்ற அறையெண்ணை காட்டி பின் ஓஜாஸை காட்டிய உங்கள் அரதப் பழசான, அருவெறுப்பான விளையாட்டை எண்ணி என்னால் கெட்டவார்த்தைகளால் வசை பாடாமல் இருக்கமுடியல்லை. ஏனெனில், இதே '9' என்ற சொல்தான், என் பள்ளிகாலம் முழு தும் முள்ளாக குத்தி, கண்ணீர் சூழ சக மாண வர்களிடமிருந்து என்னை தனிமைப்படுத் தியது. இதே '9' என்ற சொல்தான், இப்போது வரையிலும் எந்த அற்பனும் என்னை சிறுமைப டுத்த பேராயுதமாக பயன்படுத்துகிறான். அவற் றோடு கூடுதலாக சமூகம் கற்றுக்கொடுத்த கெட்ட வார்த்தைகள்தான் இப்போது என் கைவசம் இருப்பவை. இருந்தாலும், கேபிள்சங்கர் போன்ற விமர்சன சிகாமணிகள் எனக்கு 'நாகரீக வகுப்பு' எடுப்பார்களே என்று அஞ்சி நானாகவே நாகரீக மாகவே தொடர்கிறேன். "இப்படத்தில் எந்த மிருகங்களும் துன்புறுத்தப்படவில்லை" என்ற டிஸ்க்லைமருடன் துவங்கும் இப்படத்தில் தான், கிடைக்கும் ஒரு வாய்ப்பை கூட விடாமல் பாலி யல் சிறுபான்மையினர் முதல், மாற்றுத் திறனா ளிகள் வரை காயப்படுத்த தங்களுக்கு கட்டற்ற சுதந்திரம் அளித்திருக்கிறது நமது சென்சார் போர்ட். அதன் தாராளமனதை கண்டிக்காமல் உங்க களை மட்டும் கேள்வி கேட்டு என்ன பயன்?

**நியாயமான ஒரு படைப்பை புரிதலின்றி மதத் துவேசமாக சித்தரித்து அப்படைப்பையும், படைப்பாளியையும் பின்வாங்க செய்யும் அதேவேளையில் தான் உங்களின் படைப்புச் சுதந்திரத்தின் வெற்றியையும் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.**

ஒரேயொரு படத்திற்காக இத்தனை மெனக் கெடலையும், கடின உழைப்பையும், தனது நேரத்தையும் கொடுத்து மகாகலைஞனாக உயர்ந்து நிற்கும் விக்ரமிடம் இதுபோன்ற அற்ப காட்சிகளில் நடிக்க வேண்டாமென என்னால் வேண்டுகோள் கூட வைக்கமுடியவில்லை. ஏனெ னில், அடுத்த உலகநாயகனாக வேண்டுமென துடிக்கும் அவரது ஆதர்ச நாயகனான கமலும் கூட, வாசிப்பும், பகுத்தறிவும் கொண்ட நடிக ரென நவீன இலக்கியவாதிகள் ஈசிக்கொள்ளும் அதே கமல்ஹாசன் அவர்களும்தான் 'பொட்டை' என்னும் சொல்லாடலை தொடர்ந்து தமது படங் களிலும், "அதற்கும் மேலாக" 'வேட்டையாடு, விளையாடு' படத்தில் திருநங்கைகளையும், சமபால் ஈர்ப்பினரையும் தனது பங்கிற்கு சிறப்பாக மலினப்படுத்தியிருக்கிறாரே...

உங்கள் இருவருக்கும் மட்டுமன்றி, அனைத்து நடிகர்கள், காமடியன்கள், இயக்குநர்களுக் கும், ஒரேயொரு தகவல்.. நீங்கள் கொண்டாடும் ஆண்பராக்கிரமசாலிகள் மட்டுமே உங்கள் ரசிகர்கள் அல்ல. உங்களால் ஏலியனாக கருதப் பட்டு, மலினப்படுத்தப்படும் நாங்களும் உங்க ளின் ரசிகர்கள்தான். எங்கள் வீட்டிலும் டிவி பெட்டி உண்டு. நாங்களும் படங்கள் பார்க்கி றோம். ரசிக்கிறோம், சிரிக்கிறோம், அதுமட்டு மல்ல தவறாமல் சோற்றிலும் உப்பு போட்டு தான் சாப்பிடுகிறோம் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

*- லிவிங் ஸ்மைல் வித்யா*

GLEN CARRIERS
Most Trusted and Reliable Name in the Trade Since 1985

GlenCarriers Laksiri Seva
(Glen Carriers Forwarding Limited)

• இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் கப்பல் அல்லது விமான மார்க்கமாகவும் பொதிகள் குறைந்த விலையில், பாதுகாப்பாகவும், நம்பிக்கையாகவும் அனுப்பப்பட்டு, உரிய நேரத்தில் கையளிக்கப்படும்.

• 30 வருட கால அனுபவமும் திறனும் மிக்க உலகளாவிய சேவைக்கு பெயர் பெற்றது எங்கள் நிறுவனம்

இலங்கையில் எப்பாகத்திலும் நேரடி விநியோகம் செய்யப்படும்

Collection from £ 10 within London

Collection from your door point in any part of UK or Europe

Colombo Warehouse | Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo Telephone: + 94 1129 177 29-31

Eastern Province Warehouse | Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. 0672 0510 50-51

Tel : 020 8743 7353 || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

Web : www.glencarriers.com
Email : info@glencarriers.com

# சினிமா

இயக்தனது வலைப்பக்க (Blog) சினிமா விமர்சனங்கள் மூலம் நன்கு அறியப்பட்ட கேபிள் சங்கர் இயக்குனராக அறிமுகமாகி இருக்கும் படம் 'தொட்டால் தொடரும்'. பல்வேறு படங்களுக்கு வெளிப்படையாக விமர்சனம் வைத்தவர் எடுத்த படைப்பு எப்படி இருக்கப்போகிறது என்பதை அறிய திரைத்துறை மற்றும் இவரது வாசகர் கள் மத்தியில் எதிர்பார்ப்பு இருந்து வந்தது என சொல்ல லாம். அப்படி ஒரு எதிர்பார்ப்பை கிளப்பி இருக்கும் தொட்டால் தொடரும் எப்படி இருக்கிறது என்பதை இனி பார்க்கலாம்.

தனியார் நிறுவன கால் சென்டர் பிரிவில் வேலை செய்பவள் கதையின் நாயகி மது. வீட்டில் சில முக்கிய மான பிரச்சனைகள் வாட்டி எடுத்தாலும் சிவாவுடன் பூக்கும் காதல் அதனை மறக்கடிக்க செய்கிறது. ஆனால் அந்த பட்டாம்பூச்சி தருணங்கள் சில நாட்களே நீடிக்கின்றன. எதிர்பாராத இக்கட்டில் சிக்கிகொள்ளும் மது அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கிறாள். ஆபத்தில் இருந்து அவளை மீட்க சிவா எடுக்கும் முயற்சிகள் வெற்றியடைந் ததா என்பதுதான் கதை.

'ரொமாண்டிக் த்ரில்லர்' வகையிலான கதையை தேர்ந்து எடுத்திருக்கிறார் கேபிள் சங்கர். இது உண்மை சம்பவத்தின் தழுவல் என ரிலீசுக்கு முந்தைய பேட்டிக ளில் சொல்லப்பட்டிருந்தாலும் 'இப்படத்தில் வரும் சம்ப வங்கள் அனைத்தும் கற்பனையே' என டைட்டிலில் வருவது ஏனென்று புரியவில்லை.

ஒரு சில படங்களில் மட்டுமே நடித்த அனுபவம் கொண்ட அருந்ததி மற்றும் தமன் குமார் இருவரும்தான் இப் படத்தின் பிரதான வேடங்களில் நடித்துள்ளனர். கதை முழுக்க அருந்ததியை மையமாக வைத்தே நகர்கிறது. பார்க்க அம்சமாய் இருக்கிறார். காதல், சோகம் என உணர்ச்சிகள் இயல்பாய் வருகின்றன. HR அதிகாரி கேரக்டருக்கு சிறப்பாய் பொருந்திப்போகிறார் தமன். சராசரி கதாநாயகனுக்கான துள்ளல், அதிரடி என எதுவு மில்லாமல் நாயகிக்கு அடுத்தபடியாக வரும் கேரக்டரில் நடிக்க ஒப்புக்கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம். அலுவலகத்தை விட்டு வெளியே இருக்கும் தரு ணங்களில் கார்ப்பரேட் நிறுவன பாணியில் வசனங்களை உச்சரிப்பதும் காதல் பொங்கும் போது கூட பக்கா formal லான நபராக இருப்பதும் செயற்கையாய் இருக்கிறது.

வில்லனாக வின்சன்ட் அசோகன். இடைவேளைக்கு பிறகுதான் என்ட்ரி தருகிறார். ஒற்றை வரி வசனம் கூட பேசாமல் இளஞ்ஜோடிகளை விரட்டி மிரள வைத்திருக் கிறார். அருந்ததி, தமன் மற்றும் வின்சன்ட் மூவருக்கும் இப்படம் முக்கிய அடையாளமாக இருக்கும்.

காமடி என்கிற பெயரில் பாலாஜி பேசுபவை எதுவும் சிரிப்பை வரவழைக்கவில்லை. பெண்களுக்கு ரூட் விடும் சின்னி ஜெயந்த் கால டெக்னிக்கை வைத்துக்கொண்டு சிரிக்க வைக்க முயன்றிருக்கிறார் பாவம். 'தொட்டால் தொடரும்' படத்தின் முக்கிய பலவீனமாக இருப்பது துணை நடிகர்கள் தேர்வு. காவலதிகாரிகளாக வரும் துரைராஜ் ரஞ்சன் அருந்ததியின் பெற்றோர்கள் மற்றும் சில உபரி வில்லன்கள் ஆகியோரின் நடிப்பு மிக சுமாராய் இருக்கிறது. கதை/திரைக்கதை ஜிவ்வென இருப்பதற்கு இந்த கதாபாத்திரங்கள் சரியாக வடிவமைக்கப்பட்டு இருந் தாலும் அதற்கான நடிப்பு வெளிப்படாமல் போய்விட்டது. சில நிமிடங்களே வந்தாலும் பிரமிட் நடராஜன் மற்றும் நாட க நடிகர் பாரதிமணி இருவரும் மனதில் நிற்கிறார்கள்.

'சாகறதுக்கு எடுத்த ரிஸ்க்கை விட வாழறதுக்கு எடுத்த ரிஸ்க்கை நினைச்சாதான் பயமா இருக்கு' 'சினிமா விமர் சனம் எழுதுனா கூடவா கொலை பண்ணுவாங்க' போன்ற வசனங்களில் கேபிள் சங்கரின் எழுத்து மிளிர்கிறது. துருத் தல்கள் இல்லாமல் இயல்பாய் பயணிக்கும் வசனங்கள் படத்துக்கு பலம்.

பி.சி.சிவனின் 'பாஸு பாஸு' 'பெண்ணே பெண்ணே' பாடல்கள் சிறப்பு. 'யாருடா மச்சான்' ஒன்ஸ்மோர் கேட்க வைக்கிறது. சக்தி செல்லத்தின் 'காதலென்ன தாய்ப் பாலா.. அழுதவுடனே கிடைக்க' வரிகள் வாவ். சமூக அவலங்களை சொல்லும் 'பாஸு பாஸு' பாடல் வரிகள் இயக்குனர் மற்றும் கார்க்கி பவா இருவராலும் கச்சிதமாய் செதுக்கப்பட்டு இருக்கின்றன.

சிற்சில குறைகள் இருந்தாலும் விஜய் ஆம்ஸ்ட்ராங்கின் ஒளிப்பதிவு நன்று. சண்டைக்காட்சிகள் எதுவும் இல்லா விடினும் 'த்ரில்ஸ்' என்று சொல்லப்படும் வாகன துரத் தல்கள் போன்ற தருணங்களில் 'நாக்கவுட்' நந்தாவின் பங்கு குறிப்பிடத்தக்கது. குறுகிய பட்ஜெட் படத்தில் ஒற்றை லாரி மற்றும் காரை வைத்துக்கொண்டு போதுமான பர பரப்பை கிளப்பி இருப்பதற்கு சபாஷ் போடலாம். உடைத் தேர்வுகளில் நன்றாய் கவனம் செலுத்தி இருப்பது இன்னொரு பாஸிடிவ் விஷயம்.

முதல் பாதியில் 'காலமெல்லாம் காதல் வாழ்க' முரளி - கவுசல்யாவை நினைவுபடுத்தும் ஃபோன் காதல் இயல் பாய் இருந்தாலும் நீளம் அதிகம். மற்றபடி நம்மை தொடர்ச்சியாக கொட்டாவி விட வைக்காமல் கதையை நகர்த்திய விதத்தில் தடம் பதித்துள்ளார் இயக்குனர். முன்பு குறிப்பிட்டது போல கவனத்தை ஈர்க்காத துணை நடிகர்கள், சில நாடக பாணிக்காட்சிகள், பாலாஜியின் காமடி, விறுவிறுப்பை கிளப்பாத விசாரணை காட்சிகள் போன்ற அம்சங்களை நன்றாய் மெருகேற்றி இருந்தால் செமத்தியான த்ரில்லராய் இருந்திருக்கும்.

நாயகர்களை கொண்டாடும் தமிழ் சினிமாவில் படம் நெடுக நாயகிக்கு முக்கியத்துவம் தரும் கதையை தேர்வு செய்திருக்கும் கேபிள் சங்கருக்கு பாராட்டுகள். முகம் சுளிக்க வைக்கும் வசனங்கள்/காட்சிகள் இல்லாததால் குடும்பத்துடன் பார்க்க விரும்புபவர்கள் தயங்க வேண்ட யதில்லை. ஆகமொத்தத்தில் புதுமுக இயக்குனர், பெரிய ளவில் பரிச்சயமாகாத நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர் களிடம் இருந்து வந்திருக்கும் ஓகே படைப்பு இந்த 'தொட்டால் தொடரும்'.

- *மெட்ராஸ்பவன்*

# சினித்துளி

## 'என்னை அறிந்தால்' இப்போ வராது!

பொங்கலுக்கு வந்திருக்க வேண்டிய 'என்னை அறிந் தால்', தொழில் நுட்ப காரணங்களுக்காக தள்ளிப் போவ தாக அறிவிக்கப்பட்டது. அதன்படி ஜனவரி 29 ந் தேதி வெளிவரும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இப் போது இந்த தேதியிலும் சிக்கல் என்று குறுகுறுக்கிறது கோடம்பாக்கம். இந்த 29ந் தேதிக்கு வராவிட்டால் பிறகு எப்போ? அநேகமாக பிப்ரவரி 13 ந் தேதி வெளியாகலாம் என்கிறார்கள். பொங்கலுக்கு முன்பும் இப்படியொரு அறிக்கை வந்திருந்தாலும் படம் வெளிவரவில்லை

எல்லா பிரச்சனைகளையும் சமாளித்து படத்தை திரைக்கு கொண்டு வரும் போது, தமிழகம் அடுத்தடுத்து இரண்டு பொங்கல்களை கொண்டாடிய உற்சா கத்திலிருக்கும். அதில் சந்தேகமில்லை.....

## விஜயை இயக்கும் 'அட்லி'!

'ராஜா ராணி' படத்தின் மூலம் சிறந்த இயக்குநராக அறிமுகமானவர் அட்லீ இப்போது இளைய தளபதி யுடன் அடுத்த படத்திற்கு தயாராகிவருகிறார். சிம்பு தேவன் இயக்கத்தில் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கும் "புலி" படம் சீரான வேகத்தில் உருவாகி வருகிறது. இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக் கிறார். பெயரிடப்படாத இப்படத்தின் படபிடிப்பு விரை வில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.இப்படத் தில் இசை வேலைகளை ஜி.வி ஆரம்பித்துவிட்டார்.

## இயக்குனரைக் கழித்துவிட்ட சிவா!

சமீபத்தில் வெளிவந்த 'ஆம்பள', 'ஐ' அளவுக்கு ஹிட் இல்லாவிட்டாலும் பரவாயில்லையாம் ஆனால் ஆம்பள படத்தின் இமேஜ் படத்தில் சந்தானத்தின் பகுதியை உருவிவிட்டால் மிச்சமிருப்பது என்ன? இதில் இயக்கு னரின் யுக்தி எங்கே? இப்படியெல்லாம் பல்வேறு கணக் குகளை கூட்டி கழித்துப் போட்டுப் பார்த்தாராம் சிவ கார்த்திகேயன். அவர் ஏன் இதையெல்லாம் கூட்டி கழிக்க வேண்டும்? அவருக்கும் ஆம்பள படத்திற்கும் என்ன சம்பந்தம்?

இல்லையா பின்னே சிவகார்த்தியேன் சுந்தர்சி படத்தில் நடிக்க கால்ஷீட் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறாரே. இந்தப் படத்தை குஷ்புவே தயாரிப்பதாகவும் இருந்தது. இந்த நிலையில்தான் கூலாக சுந்தர்சியை அழைத்து, 'சார் நம்ம படம் இப்ப இல்ல. பிறகு பார்க்கலாம்' என்று கூறிவிட்டதாக தகவல். இப்போ சுந்தருக்கு ஆப்பு.....

## விக்ரமை இயக்கும் முருகதாஸ்

கத்தி படத்தை அடுத்து ஏ.ஆர்.முருகதாஸ் மௌனகுரு படத்தை ஹிந்தியில் ரீமேக் செய்யும் வேலையில் இறங் கினார். ஏதோ பிரச்சினையால் படப்பிடிப்பு திட்டமிட்டபடி நடக்கவில்லை. எனவே அடுத்து தமிழ்ப்படம் இயக்க வுள்ளார் ஏ.ஆர்.முருகதாஸ். தற்போது ஏ.ஆர்.முருக தாஸ் விக்ரமை வைத்து விஜய்மில்டன் இயக்கத்தில் 10 எண்றதுக்குள்ளே படத்தை தயாரித்து வருகிறார். எனவே விக்ரமிடம் பேசி தான் இயக்கும் படத்துக்கும் கால்ஷீட் வாங்கிவிட்டார்.

10 எண்றதுக்குள்ளே படம் ரிலீஸ் ஆனதும், ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விக்ரம் நடிக்கவுள்ளார்.

MARSANS
SOLICITORS & ADVOCATES
"New Law Firm in the heart of London"
Areas of law:
- Immigration
- Civil/Commercial Litigation
- Business Crime /VAT
- Commercial & Residential Property
- India Desk

Tamil Speaking Barrister and Solicitors
Contact Marsans, Solicitors and Advocates for expert legal advice and assistance.
Languages: Tamil, Hindi, Telugu, Malayalam
Marasans have dual qualified lawyers with specialist knowledge to assist on India / UK related issues such as;
- Recovery of family properties
- Matrimonial /custodial disputes
- Immigration - Tier 4 and Tier 5 sponsor license
- Asset tracing
- Sponsor licences

FIRST FLOOR, 277-281 OXFORD STREET, LONDON, W1C 2DL DX 138882 MAYFAIR Mail : email@marsans.co.uk Web : www.marsans.co.uk
PHONE: 020 7499 0620 | MOB: 07837 450 397 | FAX: 020 7499 7109 | EMERGENCY: 020 7408 5080

CELEBRATIONS by

# SHREE VENILALS UK

SPECIAL OFFER
EXCLUSIVE
SAREES

DESIGNER
LEHNGA
SUITS

DESIGNER
PAVADAI & HALF
SAREES

DESIGNER
SALWAR
SUITS

DESIGNER
COSTUME
JEWELLERY

EXCLUSIVE
KANCHEEPURAM
SAREES

மங்கையர் மனங்கவர் ஆடைகளின் சங்கமம்!

ராசியான கூறைப்புடவைகள் அனைத்து வகையான சாறிகள் மற்றும் சிறுவர்களுக்கான உடைகளைத் தரமாக பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

*Introducing For The First Time..*

**Shree Venilal's**
115/117 Ealing Road
Wembley.
HA0 4BP
Tel: 020 8903 3144

**Celebrations**
by Shree Venilal's
99/103 Ealing Road
Wembley, HA0 4BP
Tel: 020 8795 3051

**Warehouse by**
Shree Venilal's & Celebrations
95/97 Ealing Road
First Floor
Behind Bus Stop / On Top Of Jalaram Sweets Wembley.

விலைச் சலுகைகளைத் தவற விடாதீர்கள் இன்றே நாடுங்கள்!!!

உங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றிகள்...

# Southall Travel

## *Redefining Travel*

### *Why travel with* **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

### ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

ATOL 5553 PROTECTED